# பரிசுத்த ஆவியானவரின் பணி

# THE WORK OF THE HOLY SPIRIT


J.C. சோட்

J.C. CHOATE



வெளியீடு

உலக இலக்கிய பதிப்பகம்

195, தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701

இந்தியா

**THE WORK OF THE HOLY SPIRIT**

*Author :* **J.C. CHOATE**

© Copy Right Reserved

First Printing : 15, August ' 97
Copies : 2000
Language : Tamil

*Printed at*
KONAR PRINTERS
35/4-F, APK Road,
Madurai - 625 012.
Phone : 670255

*Published by*
**World Literature Publications**
C/o Church of Christ
Dharapuram Road
KANGAYAM 638 701
INDIA
Phone 04257 - 20030

# முன்னுரை

"பரிசுத்த ஆவியானவரின் பணி" பற்றி, கடந்த காலத்தில் "திருமறை ஆசான்" தமிழ் மாத இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு தான் இந்நூல். பயன்மிக்க இக்கட்டுரைகள் புத்தக வடிவிலே வெளிவரவேண்டுமென்ற எங்களது விருப்பத்தை தேவன் இப்பொழுது நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்.

பரிசுத்த ஆவியானவரின் பணி குறித்து, கிறிஸ்தவ மத உலகில், பல விநோதமான கருத்துக்கள், போதனைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் நிலவி வருகிறது. பரிசுத்த வேதாகமம் சொல்லும் எதையுமே, அது வெளிப்படுத்தப்பட்டதின் உண்மை நோக்கத்தோடு புரிந்து கொள்ள முடியாமல், பெரும்பான்மையோர் தடுமாறுகின்றனர்.

சொல்லப் போனால், பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றி, நமது நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற கிறிஸ்தவ சமுதாயம், மோசமான அளவில் புரிந்து கொண்டது போல, வேறு எந்தக் கால கட்டத்திலும் நடந்ததில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஆம், இது குறித்தான கள்ள உபதேசங்கள், மலை போல் குவிந்து, கிறிஸ்தவ சமுதாயத்தை, மெய்க் கிறிஸ்தவத் திலிருந்து, வழிவிலகிப் போகச் செய்து கொண்டுள்ளது.

ஆனால், தேவ சித்தத்திற்கு தன்னை மெய்யாகவே ஒப்புக்கொடுக்க விரும்பும் எந்த ஒரு மனிதனும், பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றியதான உண்மையிலிருந்து தடம் புரண்டு, தவறான வழிக்குச் சென்றுவிடாமல் தடுப்பதற்குத் தேவையான, அனைத்துக் கொள்கை விளக்கங்களையும் உள்ளடக்கினதாக வேத வசனங்களின் முழு ஆதாரத்தோடு இந்நூல் வெளி வருகிறது.

இப்புத்தகம் வெளி வருவதற்கு, எல்லா வகையிலும் எனக்கு நேசக்கரம் நீட்டி, அடியேனின் இலக்கியப் பணியில் என்னை

வெகுவாக ஊக்குவித்து, ஏற்றுக் கொண்ட பணியினை நேர்த்தியாகச் செய்வதற்குப் பெருமளவு உதவி வரும் அன்பிற்குரிய சகோ. J.C. சோட் அவர்களுக்கு, நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இந்திய மக்களின் ஆன்மீகத் தேவைகள், முறையாகச் சந்திக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டு, அவை நிறைவேற, பல வகையிலும் அரும்பாடு பட்டுவரும் இச்சகோதரனை, தேவன் தாமே மென்மேலும் பெலப்படுத்து வாராக!

மேலும், நமது தாய்மொழியில் இந்நூல் வந்து சேர, தமிழாக்கப் பணியில் பெரும் பங்காற்றியவர் சகோ. S.S.ராஜன் அவர்கள். புதிய ஏற்பாட்டு உபதேசங்களடங்கிய ஆங்கில நூல்களை தமிழாக்கம் செய்வதில் இவரின் பணி குறிப்பிடத்தக்கது. இப்பணியை இவர், இன்னும் சிறப்பாகச் செய்யும்படியாய், கர்த்தர் தாமே இவரை ஆசீர்வதிப்பாராக!

வேறொன்றையும், இங்கு என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. "திருமறை ஆசானின்" முன்னாள் ஆசிரியரும் காலஞ்சென்ற எனது தந்தையுமான E.Z. செல்வநாயகம் அவர்கள், ஆங்கிலத்தில் மட்டுமே உள்ள புதிய ஏற்பாட்டு உபதேசங் களடங்கிய பலநூல்கள் தமிழ் மொழியில் வெளியாக வேண்டுமென்று பெரிதும் விரும்பிப் பாடுபட்டார். ஒருவேளை, அவருடைய நாட்களில் அவை நிறைவேறாவிட்டாலும், அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகவே இப்பொழுது இந்நூல் வெளிவருகிறது. தமிழ் உலக மக்கள் பயன்பெற வேண்டுமென்ற அவரின் இந்த நியாயமான ஆசை, இன்னும் அதிக அளவில் நிறைவேற பரலோகத்தின் தேவன் இரக்கங் கட்டளையிடுவாராக!

ஆகஸ்ட், 15, 1997
காங்கேயம் - 638 701

கிறிஸ்துவின்
இராஜ்ஜியத்தின் விரிவாக்கப் பணியில்
S. ராஜநாயகம்

# ஆசிரியர் உரை

இப்பிரசங்கங்கள் கொழும்பிலுள்ள இலங்கை வானொலியில் ஒலிபரப்புவதற்காக தயாரிக்கப்பட்ட, மற்றுமோர் தொடர். இந்தியா முழுவதும் நடைபெற்று வரும் எங்கள் கைப்பிரதி, இலக்கிய ஊழியங்களில் பயன்படத்தக்கதாக இப்போது இவை புத்தக வடிவில் வெளிவருகின்றன.

இந்த பிரசங்கத் தொடரின் பொருள் பரிசுத்த ஆவியானவரின் பணி என்பதாகும். ஒருவேளை, இதைப் போன்ற முரண்பாடான வேறு ஒரு பாடத்தலைப்பு இருக்காது. எனவேதான், அதின் உண்மைகளை சமர்ப்பிக்க வேண்டிய பெரும் தேவை ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பாடம் சம்பந்தப்பட்ட வித்தியாசப்பட்ட எல்லா கோணங்களையும், இதைப் படிப்பதால் ஏற்படும் கேள்விகளையும் இங்கு கொண்டு வர முயற்சி செய்துள்ளேன். இதை எவ்வளவு எளிதாகக் கூற முடியுமோ அவ்வாறு செய்வதில் கவனம் செலுத்தியிருக்கிறேன். அத்துடன், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் வெவ்வேறு அளவுகளையும், ஆரம்பத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு கிரியை செய்திருக்கிறார் என்பதையும், எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்கு முக்கியத்துவம் வாய்ந்த வகையில், இன்று பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு கிரியை செய்கிறார் என்பதையும் பற்றி வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பவர்களையும், அல்லது இந்த பிரசங்க்ங்களைப் படிக்கும் வாசகராகிய உங்களையும் தொடர்ந்து நினைப்பூட்டுகிறேன். இதைப்பற்றி வேத வசனம் என்ன கற்பிக்கிறது என்பதை இப்போதாவது நாம் புரிந்து கொண்டோமானால், இன்றைய நமது பலவித மார்க்கப் பிரச்சினைகளை அது தீர்த்துப் போடும்.

எனது நண்பர்களே! வேதாகமத்தின் பக்கங்களின் வழியாக ஆவியானவர் பேசியிருக்கிறார். அவருடைய வசனம், குறிப்பாக அதின் புதிய ஏற்பாட்டுப் பகுதி நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அந்த வசனம் பூரணமானது, இறுதியானது. அதில் அவர் கூறவேண்டுமென்று விரும்பிய அனைத்தையும் கூறிவிட்டார். நாம் அதைப் படித்து, கற்றுக் கொண்டால் அதைப் புரிந்து கொள்ள முடியும். அதாவது, அவருடைய இன்றைய பணியையும் நமது வாழ்க்கையில் அவருடைய பங்கையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

நீங்கள் உண்மை என்று எதை எண்ணிக் கொண்டிருந் தீர்களோ அவைகளோடு இவை ஒத்துப் போனாலும் போகா விட்டாலும், தயவுசெய்து திறந்த மனதுடனும், சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் விருப்பத்துடனும் இதைப் படியுங்கள். அப்படி நீங்கள் செய்தால், இப்புத்தகத்தைப் படிப்பதினால் மிக்க பயனடைவீர்கள். இது எழுதப்பட்ட நோக்கம் அதுவே.

ஜே. சி. சோட்
கிறிஸ்துவின் சபை
புது தில்லி - 110 049.

அக்டோபர் 17, 1987.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துகிறோம். | 1 |
| 2. | பரிசுத்த ஆவியானவரின் பணி | 6 |
| 3. | ஆவியின் அளவுகள் | 12 |
| 4. | அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் | 18 |
| 5. | தேற்றரவாளனின் வாக்குத்தத்தம். | 23 |
| 6. | பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு | 29 |
| 7. | பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பெற்றவர்கள் யார்? | 35 |
| 8. | கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர். | 41 |
| 9. | கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை. | 48 |
| 10. | மாய வித்தைக்காரனான சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன்? | 55 |
| 11. | பரிசுத்த ஆவியின் வரங்கள் | 61 |
| 12. | பரிசுத்த ஆவியின் வரங்கள் அற்புதங்களா? | 67 |
| 13. | ஆவிக்குரிய வரங்கள் | 73 |
| 14. | கெட்ட ஆவிகளைத் துரத்துதல் | 80 |
| 15. | அற்புத சுகமளித்தல் | 86 |

16. அந்நிய பாஷைகளில் பேசுதல் 92
17. தேவன் இன்று மனிதனுடன் எவ்வாறு பேசுகிறார்? 98
18. போதிக்க அழைப்பு 104
19. மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர் 111
20. விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன 117
21. தெய்வீக சுகமளித்தல் 124
22. ஆவியின் ஒருமை 130
23. ஆவியின் கனிகள் 136
24. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம். 142
25. நீங்கள் கேட்டுக் கொள்கிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. 148
26. நிறைவானது வரும்போது. . . . 154

# பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துகிறோம்

பரிசுத்த ஆவி என்றால் யார்? அவர் எங்கிருந்து வந்தார்? இன்று இவ்வுலகில் அவருடைய பணி என்ன? இப்படி இன்னும் அவரைப் பற்றி பல காரியங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன், கிறிஸ்து, அடுத்து பரிசுத்த ஆவியானவர். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து . . . " (மத் 28 : 19) என அப்போஸ்தலர்களிடம் கிறிஸ்து கூறிய போதும் அதே வரிசையில் குறிப்பிடுகிறார். மேலும் ஒரே தேவன், ஒரே கிறிஸ்து, ஒரே ஆவி உண்டு என எபேசியருக்கு எழுதிய நிருபம் 4ம் அதிகாரம் 4-6 வசனங்களில் பவுல் கூறுகிறார். ரோமக் கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதும்போது, "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடு கூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். (ரோமர் 15 : 32) என்கிறார். மீண்டுமாக, II கொரிந்தியர் 13:14ம் வசனத்தில் இம்மூவரையும் பற்றிக் கூறுகிறார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக, ஆமென்.

தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என மூன்று பேர் இருப்பதால், சிலர் 'திரித்துவம்' எனக் குறிப்பிடுகின்றனர். மூன்று

தனிப்பட்ட நபர்களாக அவர்கள் இருந்தபோதிலும், அவர்கள் ஒருவரே. இதைப் புரிந்து கொள்ள பலர் சிரமப்படுகின்றனர். மூன்று தேவர்கள் இருப்பதாக நம்ப சிலர் விரும்புகின்றனர். இக்கூற்றை நியாயப்படுத்த, இயேசுவே பிதாவாகிய தேவனாகவும், இயேசுவே பரிசுத்த ஆவியானவராகவும் உள்ளார் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட போதனையானது 'இயேசு மட்டுமே' என்ற கொள்கையின் விளைவு. சந்தேகமின்றி, அது தவறு. ஒரு தேவன், ஒரு கிறிஸ்து, ஒரு பரிசுத்த ஆவி இவர்கள் தனித்தனியான நபர்கள் அல்லது தேவத்துவத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், மூவரும் ஒருவரே என்பது சாத்தியமா என புரிந்து கொள்ள சிரமப்பட்ட போதிலும், வேதாகமம் இதையே போதிப்பதால் நாம் விசுவாசத்தோடே அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்று எனக்கூறி திரித்துவம் என்ற வார்த்தை வசனங்களில் குறிப்பிடப்படவில்லை என்ற போதிலும், தேவத்துவம் என அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அத்தேனே, பட்டணத்தாருக்கு பவுல் போதிக்கும் போது, "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப். 17 : 29) என்றார். தேவனை மறுதலித்தவர்களைப் பார்த்து பவுல் பேசும்போது, "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" (ரோமர் 1 : 20) என்று கூறினார். கிறிஸ்துவைக் குறித்து பவுல், "ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ 2:9) என்று கூறினார். எனவே இவ்வசனங்களில் பயன்படுத்தப்பட்ட தேவத்துவம் என்பது தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரின் இணைப்பு ஆகும்.

இந்த தேவத்துவம் எவ்வளவு காலமாக நீடிக்கிறது? எங்கே ஒருவரைப் பற்றி நாம் படிக்கிறோமோ, அங்கே மற்றவர்களைப் பற்றியும் காணமுடியும். அவர்கள் சிருஷ்டிப்புக்கு முன்பாகவே இருந்தனர் அல்லது ஆரம்பமும் முடிவுமற்ற தன்மையுடையவர்களாக இருக்கின்றனர் என்பதை, சகலமும் உண்டாக்கப்படும் வேளையில் முதல் முதலாக அவர்களைப் பற்றி நாம் படிக்கிறோம். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்". (ஆதி 1 : 1) என வேதாகமத்தின் முதல் வசனமே கூறுகிறது. எபிரேய மொழியில் தேவன் என்பது பிதாவாகிய தேவன், அவருடைய குமாரன் கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், ஆகியோரை உள்ளடக்கிய ஒரு சொல் ஆகும். மீண்டுமாக, சிருஷ்டிப்பைப் பற்றி நாம் படிக்கும் போது, "பின்பு தேவன், நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." (ஆதி 1 : 26) என்றார். தாவீது எழுதும் போது, "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும் போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்" (சங். 104 : 30) என்றார். "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" (யோபு 33 : 4) என யோபு தெரிவித்தார், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1 : 1 - 3) என யோவான் கூறினார். தேவத்துவத்தின் மூன்று பேரும் ஆதியில் இருந்தனர்; எனவே எப்போதும் இருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை மேற்கண்ட எல்லா வசனங்களின் மூலமாகவும் நாம் தெளிவாகக் காணமுடியும் என நான் நம்புகிறேன்.

'தேவத்துவத்தின்' ஒவ்வொருவரையும் பற்றி நாம் படிக்கும்போது, ஒவ்வொருவரும் ஒரு செயலை அல்லது பணியைச் செய்யக்கூடியவராயிருந்தனர் என்பதைக் காண

முடியும். பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் மட்டுமின்றி, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இதைக்காண முடிகிறது. தேவனுடைய வார்த்தைகள் எழுதப்படவும் அவை பாதுகாக்கப்பட்டு நமது காலம் வரை கொண்டு வரப்படவும் பலரை ஏவி அவர்களுக்கு உதவியவர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். பேதுரு எழுதினார்; "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். "தேவத்துவத்தின் மூன்று பேரும் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் மீண்டும் காண முடியும். ஆனாலும் குறிப்பாக வேத வசனங்களை அளிக்கப்பட்டதில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (II தீமோ 3:16, 17) என அப்போஸ்தலர் பவுல் எழுதினார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் 88 இடங்களில் 18 பெயர்களில் காணப்படுவதாகத் தெரிகிறது. அதே நேரத்தில்,

264 இடங்களில் 39 வித்தியாசமான பெயர்களால் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறார். இவற்றின் 5 பெயர்கள் இரு ஏற்பாடுகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் 52 மாறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர், ஒருவித மறைபொருளான சக்தியாகவோ அல்லது ஒரு ஆவியாகவோ அடிக்கடி சித்தரிக்கப்படுகிறார். ஆனால், வேதவசனமோ அவரை ஒரு ஆளுமை செய்யும் நபராக வர்ணிக்கிறது. அவர் உணர்ச்சி வசப்படக் கூடியவர் (எபே 4:30), சிந்தை உள்ளவர் (ரோம 8:27) பேசக் கூடியவர் (1 தீமோ 4 : 1) நமது பலவீனங்களில் உதவி செய்பவர் (ரோம 8:26). . . என இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்.

நீங்கள் பார்க்கிறபடி, பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. இது ஆரம்பமே. அவரைப் பற்றி தொடர்ந்து அநேக காரியங்கள் கற்றுக் கொள்வோம்.

# பரிசுத்த ஆவியானவரின் பணி

பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய பணியையும் முற்றிலுமாக ஒதுக்கித்தள்ளிவிடும் பலமக்கள் இவ்வுலகில் இருக்கும் அதேவேளையில், மறுபக்கத்தில், பலர் நேர்மாறான நிலையில் நின்றுகொண்டு, பரிசுத்த ஆவியானவர் அற்புதங்களை இன்றும் செய்து வருகிறார் என போதிக்கின்றனர். ஆனால், வேதாகமம் இது குறித்து என்ன சொல்கிறது?

தேவத்துவத்தின் மூன்றாவது நபராக, ஆளுமை செய்பவராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். தேவனோடும் கிறிஸ்துவோடும் அவர் எப்போதும் இருந்து வந்துள்ளார். இனி எப்போதும் இருப்பார். சிருஷ்டிப்பின் போதும், பழைய ஏற்பட்டுக் காலம் முழுவதும் நடைபெற்ற எல்லா பெரிய காரியங்களிலும் அவர் பங்கேற்றுள்ளார். கிறிஸ்துவின் காலத்திலும், அவருடைய அப்போஸ்தலர்களுடைய காலத்திலும், பரிசுத்த ஆவியானவரின் வருகை பற்றியும் செயல்கள் பற்றியும் நாம் இப்போது காண்போம்.

கிறிஸ்து பிறந்த காலத்திற்குத் திரும்பிச் சென்றால், வேதாகமம் கீழ்க்கண்டவாறு கூறுவதை நாம் கவனிக்க முடியும். "இயேசுக்கிறிஸ்துவினுடைய பிறப்பின் விவரமாவது; அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள

ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன், இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான். (மத் 1 : 18 - 25) இவை யாவற்றிலும் பரிசுத்த ஆவியானவரின் பங்கை தயவு செய்து கவனித்துப்பாருங்கள். “இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்” என ஏசாயா தீர்க்கதரிசனமாகக் கூறி, எழுத பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலே காரணம். அடுத்து, மரியாள் பெற்றெடுத்த குழந்தை பரிசுத்த ஆவியானவரால் கருப்பெற்று உண்டானது என்று விளக்கப் பட்டுள்ளது. இறுதியாக, “ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்; அதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று பொருள்” என்பதெல்லாம் தீர்க்கதரிசியின் மூலமாகக் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி நடந்தது.

லூக்கா 1ம் அதிகாரத்தின்படி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், சகரியா, எலிசபெத் தம்பதியர்களும் ஒரு குழந்தையைப் பெற்றனர். அவன் யோவான் எனப் பெயரிடப் பட்டான். பின்னர் தேவனுடைய கற்பனைகளுக்குப் பணிந் தோருக்கு அவன் ஞானஸ்நானம் கொடுத்தபடியால் யோவான்

ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டான். கிறிஸ்துவின் முன்னோடியாகவும், கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தவும் அனுப்பப்பட்ட யோவான் கூறினான். "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (மத். 3 : 11 - 17) நாம் ஏற்கனவே பார்த்தபடி, பரிசுத்த ஆவியானவரால் மரியாள் குழந்தையைப் பெற்றெடுத்தாள்; இவ்வாறாக, இவ்வுலகில் கிறிஸ்து பிறந்தார். பின்னர், இயேசு வளர்ந்து பெரியவரான போது யோவானால் ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுகி) பெறுகிறார் என்பதைக் காண்கிறோம். தேவன் இக்காரியத்தில் பிரியப்பட்டார் என்பதற்கு அடையாளமாக, தேவனுடைய ஆவியானவர் அவர் மேல் இறங்கினார். "நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என தேவன் கூறினார்.

". . . . இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்" என மத்தேயு 4:1 ம் வசனம் கூறுகிறது. ஆனாலும், சந்தேகமின்றி ஆவியின் வசனத்தைக் கொண்டே சாத்தானின் சோதனைகளை அவரால் வெல்ல முடிந்தது.

கிறிஸ்து தேவ ஆவியை அளவில்லாமல் பெற்றார் என யோவான் 3 : 34ம் வசனத்தில் நாம் படிக்கிறோம். கிறிஸ்து ஆவியை அளவில்லாமல் பெற்றார் என்றால், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் எந்த விதத்திலும் அவருக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை என்று பொருள். அதே சமயம், கிறிஸ்து ஆவியை அளவில்லாமல் பெற்றார் எனக் கூறும் போது, மற்றவர்கள் ஆவியை அளவோடு பெற்றனர் என்றும், ஆவியின் வல்லமை இருந்தாலும் கூட அவர்கள் செய்யக்கூடிய செயல்களுக்குக் கட்டுப்பாடுகள் இருந்தன என்றும் பொருள்.

கிறிஸ்து சென்ற பிறகு, அவருக்கு பிரதிநிதிகளாகச் செயல்பட்டு, அவர் விட்டுச் செல்லும் பணியைத் தொடர 12 பேரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் அப்போஸ்தலர்கள் என்றழைக்கப்பட்டனர். தொடக்க முதல் அவரோடு இருந்தவர்களும், அவருடைய உயிர்த்தெழுதலின் சாட்சிகளாகவும் இருந்தனர். அவர்களிடம் அவர் கூறினார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோ 16 : 7) தொடர்ந்து அவர் கூறும் போது "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா 16:13) என்றார். மேலுமாக தேற்றரவாளனை அடையாளங்கண்டு கொள்ள அவர் கூறினார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய

தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14 : 26).

யோவான் சொல்லியுள்ளபடி, பரிசுத்த ஆவியாகிய தேற்றறரவாளன், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நிறைவேறியுள்ள பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் உட்பட அநேக காரியங்களை செய்வார். அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியானவர் தேற்றுவார், சத்தியத்தில் வழி நடத்துவார், கிறிஸ்து போதித்திருந்த எல்லா காரியங்களையும் அவர்களுக்கு நினைப்பூட்டுவார். அந்நிய மொழிகளில் பேசும் திறனை அளிப்பார். தேவனால்அவர்கள் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்களுக்கு உறுதி செய்ய அற்புதங்களைச் செய்வார்.

செய்ய வேண்டிய பணிகள் யாவற்றையும் அப்போஸ் தலர்கள் தனியாகச் செய்யக்கூடாததாக இருந்தது. எனவே, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை யுள்ள சீடர்களும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அவர்கள் மேல் தங்கள் கைகளை வைக்கும் அதிகாரத்தை அப்போஸ்தலர் களுக்குக் கர்த்தர் கொடுத்தார்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற அளவில் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்டிருந்தனர். சீடர்களோ கைகளை மேலே வைக்கும் அளவில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர். குறிப்பிட்ட சீடர்களின் மேல் மட்டுமே அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து இந்த வல்லமையை அவர்கள் அடையச் செய்த போதிலும், கைகளை மேலே வைக்கும் அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள், மற்றவர்களுக்கு அந்த வல்லமையை கொடுக்க இயலவில்லை. இறுதியாக, பிற மக்கள் அனைவரும் சாதாரண அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டதாக அப்போஸ்தலர் நடபடிகள் 2:38 வசனம் கூறுகிறது.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் வழியாகவும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்கள் மூலமாகவும் அற்புதங்களைச் செய்யவும், தேவனுடைய வார்த்தையை எழுத அவர்களை ஏவவும் கிரியை செய்தார். புதிய ஏற்பாடு வந்த பின்னர், ஆவியானவர் வசனத்தின் வழியாகவும் வசனம் போதிக்கிற படி நமக்குள்ளாகவும் கிரியை செய்கிறார்.

# ஆவியின் அளவுகள்

கிறிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலர் யோவான் கூறினார். "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" (யோவான் 3 : 34) கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் தேவன் அளித்தார் என யோவான் குறிப்பிடும் போது, அவர் என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறினார்? அளவுக்கு வரம்பு உண்டு. வேறுவிதமாகக் கூறினால், ஆவியை கிறிஸ்துவுக்கு ஒரு அளவோடு மட்டும் தேவன் கொடுத்திருப் பாரேயானால் அந்த குறிப்பிட்ட வரம்பிற்குள்தான் ஆவியின் வல்லமையை அவர் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால் தேவன் ஆவியை அவருக்கு அளவுடன் கொடுக்கவில்லை. மாறாக, அளவில்லாமல் கொடுத்தார். ஆவியின் வல்லமையை கிறிஸ்து உபயோகிக்கும் போது, தேவனோ, அல்லது ஆவியானவரோ அவருக்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை என்பதே அதற்குப் பொருள்.

தேவன், கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் கொடுத்தார் என்று சொல்லும்போது, மற்றவர்களுக்கு அளவுடன்தான், கொடுக்கப்பட்டார் எனக் கருத முடியும். ஆம், அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும், மற்றும் எல்லா கிறிஸ்தவர் களுக்கும் அவரவர்களுக்கான அளவின்படியாகவே கொடுக்கப் பட்டது.

ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட கிறிஸ்து, பிசாசுகளைத் துரத்தவும், மரித்தோரை எழுப்பவும், கடலின் புயலை அடக்கவும், தண்ணீரை இரசமாக்கவும், தண்ணீரின் மேல் நடக்கவும் இன்னும் இது போன்ற பல அற்புதங்களையும் செய்யக் கூடியவராக இருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் எழுதியதைப் பாருங்கள்.

"இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". (யோவான் 20 : 30, 31).

மேற்சொன்ன எல்லாவற்றையும் கடந்த ஒரு உண்மை என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பிறருக்கு அளிக்கும் வல்லமையை இயேசு பெற்றிருந்தார் என்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்க அவரால் மட்டுமே முடிந்தது. குறிப்பிட்ட சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும் படியாக, அவர்களின் மீது கைகளை வைக்கும் வல்லமை மாத்திரமே அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் யாரையும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானப் படுத்த முடியவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததால், வல்லமையைப் பெற்றுக்கொண்ட சீடர்கள், அதை மற்றவர் களுக்குக் கொடுக்க முடியவில்லை.

ஆவியானவரை அளவுடன் பெற்றவர்களை இங்கு நாம் பார்ப்போம். அப்போஸ்தலர்களிலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் வரையிலும் உள்ள சகல கர்த்தரின் பிள்ளைகளும், பரிசுத்த ஆவியானவரை திருமுழுக்கு அளவிற்கு பெற்றிருக்க வேண்டும் அல்லது பெற்றுக் கொள்ள வேண்டும் என பலர் இன்று நம்புகின்றனர். இது உண்மை அல்ல என்பதை நாம் காணப்போகிறோம். தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அனுப்புவதாக இயேசு வாக்களித்திருந்தார் என்பதை முதலில் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவரைப் பின்பற்றிய எல்லாருக்கும் அல்லது இனிமேல் அவரைப் பின்பற்றப்போகும் எல்லாருக்கும் இந்த வாக்குத்தத்தத்தை அவர் அளிக்கவில்லை. யோவான் புத்தகத்துக்கு நாம் திரும்பும்போது, அங்கே அப்போஸ்தலர்களிடம்

பேசிய கர்த்தர், தான் அவர்களை விட்டு விலகிப் போவதைப் பற்றியும், அவ்வாறு சென்றபின் தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவதைப் பற்றியும் கூறுகிறார். அந்த தேற்றரவாளனே பரிசுத்த ஆவியானவர் என அடையாளம் காட்டப்படுகிறார். (யோவா 14:26) கிறிஸ்து தொடர்ந்து கூறுவதைப் பார்ப்போம். "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப் பீர்கள்". (யோவா 15:26, 27) மீண்டும் அவர் கூறுகிறார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். "(யோவா. 16:7) தொடர்ந்து, "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13). இப்போது, மேற்சொன்ன வசனங்களில், கர்த்தர் யாருடன் பேசிக் கொண்டிருந்தார்? இயேசு என்ன பேசிக் கொண்டிருக்கிறார் என நீங்கள் கவனித்துப் பார்த்தால், ஆரம்பத்திலிருந்தே அவருடன் கூட இருந்த அப்போஸ்தலர் களிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார் என்பது மிகத் தெளிவாகத் தெரியும். (யோவா. 15 : 27) அப்படியானால், கேள்வி இதுதான், கர்த்தர் தனது வாக்கை நிறைவேற்றினாரா?

ஆனால், இறுதியாக நடந்தது என்னவென்று நாம் காணும் முன்னர், தனது பரலோகத் தந்தையிடம் செல்லுவதற்கு முன்பு அப்போஸ்தலர்களிடம் நமது கர்த்தர் அறிவித்தவைகளை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்

வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்". (லூக் 24:49) லூக்கா மேலும் எழுதியிருக்கிறார். "தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி, யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்"(அப் 1:1-5). அதன்பின் இயேசு கூறினார். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப் 1:8) இந்த அறிக்கைகளிலிருந்து நிச்சயமாக இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார் என்பதை நாம் காணமுடியும். அது உண்மையாக இருக்கும்போது, அவ்வல்லமையைப் பெற்றவர்கள் யார்? அப்போஸ்தலர்கள் மட்டுமா, அல்லது பொதுவில் எல்லா விசுவாசிகளுமா?

இப்போது, அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்திற்குத் திருப்பிக் கொண்டு, என்னோடு வாசியுங்கள். "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள்

உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று, அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". (அப். 2:1-4) அந்த அதிகாரத்தைப் படிக்கும்போது, அப்போஸ்தலர்கள் திரளான மக்களிடையே போதித்துக் கொண்டிருந்ததையும், அதிலே மூவாயிரம் பேர் வரை நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்றும் பார்க்கிறோம். தொடர்ந்து நாம் வாசிக்கையில் "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங் களும் செய்யப்பட்டது." (அப். 2:43) என உள்ளது.

ஆகவே, திருமுழுக்கு அளவிலான பரிசுத்தஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றுக் கொண்டனர் என்பதே இதன் முடிவாகும். ஆனால் அவர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர்; செய்ய வேண்டிய பணியோ ஏராளமாக இருந்தது. அப்போஸ்தலர் நடபடி 6ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை சீடர்களிடமிருந்து தெரிந்து கொண்டு, அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளித்தனர் என்று காண்கிறோம். ஆனால், இந்த மனிதர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தனர் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏற்கனவே அவர்கள் பெற்றுக் கொண்டதற்கும், கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் அளவைப் பெற்றுக் கொண்டதற்கும் என்ன வித்தியாசம்? இந்த ஏழு பேரும் முன்பு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது, அற்புத அடையாளங்களைச் செய்ய முடியாத அளவுக்கு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

(அப்.2: 38) கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது. அது ஒரு அற்புதங்கள் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகும்.

இறுதியாக, இன்று ஒரே ஒரு அளவிலான பரிசுத்த ஆவியை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொள்வோம். அது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவி. அது கர்த்தருக்குக் கீழ்ப்படியும் எல்லாருக்கும் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவி. இவை பற்றியும், இன்னும் அதிகமாகவும் நாம் தொடர்ந்து படிக்க உள்ளோம்.

# "அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்"

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குக் கொடுக்கும் அதிகாரத்தை கிறிஸ்து பெற்றிருந்தார் என்பதைப் பற்றி நாம் இங்கு கவனிப்போம்.

கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ண யோவான் ஸ்நானகன் வந்தான் என வேதவசனம் நமக்குக் கூறுகிறது. வேறுவிதமாகக் கூறின், அவன் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பும்படி போதித்து, தண்ணீரில் திருமுழுக்குக் கொடுத்து வந்தான். தேவனுக்கு முன்பாக கிறிஸ்து முற்றிலும் பரிசுத்தமானவராக இருந்த போதிலும், எல்லா நீதியையும் நிறைவேற்ற ஏதுவாக அவரும் திருமுழுக்குப் பெற யோவானிடத்தில் வந்தார். அதன் பின்னர், ஒருவன் இரட்சிக்கப்பட விசுவாசித்து திருமுழுக்குப் பெற வேண்டுமென்று போதிக்கும் படியாய் அவருடைய அப்போஸ்தலர்களை கிறிஸ்து அனுப்பவிருந்தார்.

கிறிஸ்துவுக்கும் தனக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி யோவான் கூறுகையில் "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்". (மத் 3 : 11 -12)

இப்போது, யோவான் இங்கு என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்? நாம் உன்னிப்பாக இதை கவனித்து, இக்காரியங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லையா எனப் பார்ப்போம். நிச்சயமாக, நாம் அறிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார்; நாமும் நிச்சயமாக தெரிந்து கொள்ள முடியும்.

முதலாவதாக, கிறிஸ்து தன்னைவிட மிகவும் வல்லமைமிக்கவராக இருப்பார் என யோவான் காட்டுகிறான். மனந்திரும்புதலுக்கென்று தான் தண்ணீரில் திருமுழுக்குக் கொடுக்கும் போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குக் கொடுப்பார் என யோவான் கூறினான்.

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் திருமுழுக்குப் பெறுவது பற்றி நிறைய பேசப்படுகிறது. இரண்டுமே இன்று பெற்றுக் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. விசுவாசிகள் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறுகின்றனர் என போதிக்கப்படுகிறது. இத்தகைய திருமுழுக்கைப் பெற்றுக் கொள்வோர், அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெறுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. அக்கினியால் பெறும் திருமுழுக்கு நம்மைப் பரிசுத்தமாக்கும் ஒரு முறை அல்லது நம்மை சோதிக்கும் ஒரு அனுபவம் என்றும், நம் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் இது நடக்கிறது என்றும் போதிக்கப்படுகிறது. கர்த்தருக்கு முழுவதுமாக ஊழியஞ்செய்ய ஒரு மனிதனை இது தயார்ப்படுத்துகிறது என்றும் சொல்லப்படுகிறது. வேதாகமம் இவ்வாறு போதிக்கிறதா அல்லது வேறு விதமாகப் போதிக்கிறதா என்பதே இப்போது கேள்வி.

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் பெறப்படும் திருமுழுக்கைப் புரிந்துகொள்ள, இது பற்றிக் குறிப்பிட்டுள்ள வசனப் பகுதியை நாம் பார்ப்போம். கோதுமையை சேகரிக்கும் ஒரு விவசாயியை யோவான் படம் பிடித்துக் காட்டும் போது, கோதுமையை களஞ்சியத்தில் சேர்த்து, அதிலிருந்து பிரித்தெடுத்த பதரை அக்கினியிலே சுட்டெரிக்கிறான் என்கிறார். இப்போது, கிறிஸ்துவும் மக்களை இவ்வழியிலேயே நியாயந்தீர்ப்பார் எனக்

கூறுகிறார். நல்லவர்களை பரிசுத்த ஆவியால் திருமுழுக்குச் செய்யும் வல்லமையுடன் அவர் இருப்பார். அல்லது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால் ஆசீர்வதிப்பார். ஆனால் பதரையோ, அல்லது கெட்டுப்போனவர்களையோ பிரித்தெடுத்து அக்கினியில் போடுவார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் அக்கினியில் முழுக்குப் பெறுவர். யோவான் கூறும் இரண்டு திருமுழுக்குகள் இவைகளே. ஒன்று நல்லவர்களுக்கும் மற்றது கெட்டவர்களுக்கும்.

வசனங்களை நாம் தொடர்ந்து படிக்கையில், இயேசு, அவர் புறப்படுமுன்னர், தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு அனுப்ப வாக்களிப்பதைப் பார்க்கிறோம் (யோவான் 14 : 26).

இந்த திருமுழுக்கைக் கொடுக்கும் வல்லமையை கிறிஸ்து மட்டுமே பெற்றிருந்தார். அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால், இயேசு அவர்களுக்குப் போதித்தவைகள் அனைத்தையும் நினைவுபடுத்தும் வல்லமை பெறவும், வரப்போகிற காரியங்களைப் பற்றி சத்தியத்தை உபதேசிக்கவும். அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்களைச் செய்யவும், அவர்களுக்கு முடிந்தது. தமது பிரதிநிதிகளாக தேவன் அவர்களை அனுப்பினார் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு தேவனுடைய கற்பனைகளை அறிவிக்கவும், இந்த வல்லமையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. இந்த வல்லமையை அவர்கள் பெற்ற பின்னர், "அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்". (மாற்கு 16 : 20) என நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு காலம் இது தொடர்ந்து நடைபெற்றது? அப்போஸ்தலர்கள் அனைவரும் உயிரோடு இருக்கும் வரையில் இவ்வாறு நடந்தது. ஏனென்றால், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வாக்குத்தத்தம்

அவர்களுக்கு மட்டுமே செய்யப்பட்டிருந்தது. புதிய ஏற்பாடு எழுதிக் கொடுக்கப்பட்ட பிறகு தேவனுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்த அற்புதங்களும் அடையாளங்களும் தேவை இல்லாமற் போயிற்று. ஏனெனில் வசனம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று, பலமக்கள் தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களைப் பேசுகின்றனர்; வசனத்தில் காணப்படாத சபைகளில் அவர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்; தேவனுடைய விருப்பத்திற்கு விரோதமான செயல்களை செய்து வருகின்றனர். இப்படியிருக்கையில், தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக அவர்கள் எவ்வாறு கூறமுடியும்? உண்மை என்னவென்றால், அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். வஞ்சிக்கப்பட்ட அவர்கள் இப்பொழுது மற்றவர்களின் இருதயங்களை வஞ்சித்துக் கொண்டுள்ளார்கள்.

தேவன் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபிக்க, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அப்போஸ்தலர்களுக்கும், மனம் மாறிய புறஜாதியனான கொர்நேலியு மற்றும் அவன் வீட்டாருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், (அப். 10, 11 அதி) பிற எல்லா மக்களுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வழியாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்; எப்படியெனில், சத்தியத்தைப் போதிக்கவும் எழுதப்பட்ட வசனத்தைக் கொடுக்கவும் அப் போஸ்தலர்களை வழி நடத்தினவர் பரிசுத்த ஆவியானவர்தான்.

ஆனால், மற்றொரு திரு முழுக்கைப் பற்றி, அதாவது அக்கினி முழுக்கு பற்றி என்ன கூறுகிறீர்கள்! இதையும் நடத்த கிறிஸ்து வல்லமை உடையவராகவே இருக்கிறார். ஆனால் இது நல்லவர்களுக்கு அல்ல, கெட்டுப் போனவர்களுக்கு மட்டுமே. கடைசி நாளில், கெட்டவர்கள் அனைவரையும் அக்கினிக் கடலிலே கிறிஸ்து தள்ளிப்போடுவார் என வேதாகமம் கூறுகிறது.

(வெளி 19:20, 20:10). பின்னர், நாம் படிக்கிறோம், “பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பான வர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்” (வெளி 21 : 8) அதுவே தான், இயேசு அளிக்கப்போகும் அக்கினி திரு முழுக்கு என யோவான் கூறினரார். அப்படியானால், அக்கினி முழுக்கு நமக்கு ஒருபோதும் வேண்டாம் என ஜெபிப்போம்.

திருமுழுக்கு என்பது ஒரு அடக்கம். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கில் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் ஊற்றப்பட்டார், அல்லது அவர்கள் பரிசுத்த ஆவியில் முழுகினார்கள். (அப். 2 : 1-4) கடைசி நாளிலே, கெட்டவர்கள் அக்கினி முழுக்கைப் பெறும் போது, அக்கினிக் கடலிலே அவர்கள் முழுக்கப்படுவர் அல்லது அடக்கம் செய்யப்படுவர். நாம், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற காலத்தை மிகவும் கடந்து வந்துவிட்டோம்; அக்கினி முழுக்குக்கு மிகவும் முந்திவிட்டோம் என யாரோ கூறினார்கள். ஆனால், நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி, தண்ணீர் திருமுழுக்குப் பெற, நாம் சரியான காலத்தில் வாழ்கிறோம். (அப். 2 : 38).

வேதவசனங்களின்படி, நீங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். அக்கினி முழுக்கையும் நீங்கள் பெறவில்லை என்பதையும் நான் அறிவேன். ஏனெனில் அது கெட்டவர்களுக்குக் கடைசி நாளில் நடத்தப்படும் முழுக்கு ஆகும். ஆனால், கேள்வி என்னவென்றால், நீங்கள் வசனத்தின்படி தண்ணீர் திருமுழுக்குப் பெற்றிருக் கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனை விசுவாசிக்கவும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், கிறிஸ்துவை தேவனின் குமாரன் என அறிக்கை செய்யவும், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் திருமுழுக்குப் பெறவேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இவ்வாறு செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, தமது சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளுவார். (அப். 2 : 38, 47).

# தேற்றரவாளனின் வாக்குத்தத்தம்

வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளன் என அழைக்கப்படுகிறார். இங்கு தேற்றரவாளனின் வாக்குத்தத்தம் பற்றி நாம் காண்போம்.

பாவிகளை இரட்சிக்க இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். (1 தீமோ 1 : 15) வீழ்ந்து போனவர்களைத் தேடவும் அவர்களை இரட்சிக்கவும் அவர் வந்தார் என்று நமக்குச் சொல்லப் பட்டுள்ளது. (லூக்கா 19:10) இருந்த போதிலும், கிறிஸ்து பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்து, நல்லவற்றை மட்டுமே செய்து கொண்டு வந்தார் என்பது உண்மையாக இருப்பினும், அவருக்கு எதிரிகள் இருந்தனர். இறுதியாக கொடூரமான சிலுவையில் அறையப்பட்டு மரிக்க இருந்தார் என்பதும் கசப்பான உண்மைகளே. இதை அவர் அறிந்திருந்தார். எனவே அவருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் என அழைக்கப்பட்ட 12 மனிதர்களை அவர் தேர்ந்தெடுத்து, போதித்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, இவ்வுலகிலிருந்து அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதும், அவருடைய பணியைத் தொடர அவர்களைத் தயார்படுத்தினார் என்றாலும், அவர்கள் தவறுகளைச் செய்யக்கூடிய மனிதர்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே, அவர் உபதேசித்திருந்த பல காரியங்களை ஒருவேளை அவர்கள் மறந்து விடக்கூடும் என்பதாலும், அல்லது இவ்வுலகிற்கு அவர் அறிவிக்க விரும்பிய பல சத்தியங்களை அவர்களால் புரிந்து கொள்ள இயலாது என்பதாலும், அவர்கள் நிச்சயமாக சரியாக வழி நடத்தப்படவும், கற்பிக்கப்படவும், அவர் சென்றபின், தேற்றரவாளனை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்களித்தார்.

இப்போது புதிய ஏற்பாட்டில் யோவான் புத்தகத்திற்கு என்னோடு வாருங்கள். தேற்றரவாளனைப் பற்றி அதில் எழுதப்பட்டுள்ள சில குறிப்புகளை நாம் படிப்போம்.

அப்போஸ்தலர்களிடம் பேசும் போது, இயேசு கூறினார் : "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்". (யோவான் **14 : 16 - 21**).

தொடர்ந்து, கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் கூறுகிறார் : "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக : நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று நான் சொன்னதைக்

*குறித்துக் சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்."* (யோவான் 14:26-28).

*பின்னர், கிறிஸ்து தெளிவாக்குகிறார் : "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும் போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."* (யோவான் 15:26-27)., *தொடர்ந்து படிக்கும்போது, அவர் கூறுகிறார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும் நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத் தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப் படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். நான் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும்*

கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்" (யோவான் 16 : 7-16).

இப்பொழுது, மேலே கண்ட எல்லா வசனங்களிலும் கீழ்க்கண்ட உண்மைகள் வெளியாகின்றன.

1. கிறிஸ்து இங்கே அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்.
2. எனவே, தேற்றரவாளனை அவர்களுக்கு மட்டுமே அவர் வாக்களித்தார், உலகத்திற்கு அல்ல, பிற சீடர்களுக்கும் கூட அல்ல.
3. தேற்றரவாளன், பரிசுத்த ஆவியானவர் என அடையாளங் காட்டப்படுகிறார்.
4. கர்த்தர் பரலோகத்திற்குச் சென்ற பின்னர், தேற்றரவாளன் அப்போஸ்தலர்கள் மேல் வரவிருந்தார்.
5. தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு இருப்பார். இயேசு உபதேசித்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு நினைப்பூட்ட உதவுவார், எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார், வரப்போகிற காரியங்களை வெளிப்படுத்துவார், பிற மொழிகளில் பேசவும் அற்புதங்களைச் செய்யவும் வல்லமையைக் கொடுப்பார்.
6. கிறிஸ்து மாத்திரமே அவர்களுக்குத் தேற்றரவாளனை அனுப்ப முடியும்.
7. கர்த்தரோடு ஆரம்ப காலத்திலிருந்து இருந்த அப்போஸ் தலர்கள், தேற்றரவாளனோடு, கர்த்தருக்கு சாட்சியாக இருப்பார்கள்.

அப்போஸ்தலர்களின் மேல் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் வாக்களித்ததைப் பற்றியும் லூக்கா பேசுகிறார். கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார்: "அவர்களை நோக்கி : மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்

குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்த போது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி : எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். ஆமென்". (லூக்கா 24 : 44 - 53).

பின்னர் லூக்கா, இந்தக் காட்சியை அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்ததைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதினார். பின்னர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளன் எப்படி அப்போஸ்தலர்கள் மேல் இறங்கினார் என்றும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் எதைச் செய்வார்கள் என கர்த்தர் கூறினாரோ அவற்றை அவர்கள் செய்யத் தொடங்கினார்கள் என்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் அவர் சொல்லுகிறார்.

இப்போது, தேற்றரவாளன் யாருக்கு வாக்களிக்கப் பட்டிருந்தார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே. தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை யார் பெற்றுக்கொண்டார்கள் மீண்டும் அப்போஸ்தலர்கள் மட்டுமே. 120 பேர் அங்கு கூடியிருந்தார்களே. அவர்களைப் பற்றி என்ன? மீண்டும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அப்போஸ்தலர்கள் தவிர வேறு யாரும் பெற்றுக் கொள்ளவில்லை. இன்றும், எவரும் அற்புதங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெறுவதில்லை. பெறமுடியாது இதற்கு மாறாகப் போதிக்கின்றவர்கள், ஆவியானவருடைய வார்த்தைகளுக்கே முரணாகப் பேசுகின்றனர்.

# பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு

ஒருவேளை, வேதாகமத்தில் காணும் எந்த பொருள் பற்றி கூறப்பட்டிருப்பதையும் விட, பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு பற்றியும் அதைப் பெற்றுக் கொண்டவர்கள் செய்யக் கூடியவற்றைப் பற்றியும் மிக அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே சபைகள் ஆவியானவரின் அற்புத அடையாளங்களைப் பற்றி உரத்த குரலில் கூறிவருகின்றனர். ஆனால் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: அவர்களுக் குள்ளேயே பிரிவுகள், வேதாகமத்தில் காணப்படாத சபைகளில் அங்கம் வகிப்பது, சபைகளுக்கு மனிதர்களுடைய பெயர்களைத் தரித்துக் கொள்ளுவது, இன்னும் முரண்பாடாக போதிப்பது ஆகிய அனைத்தும் அவர்களிடம் உண்டு. நிச்சயமாக, ஆவியானவர் இவ்வாறாகச் செய்ய அவர்களை வழி நடத்த மாட்டார். எனவேதான், ஆவியானவரின் உண்மையான பணி என்ன என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முந்தைய பாடங்களில் நாம் பார்த்தது போல, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பாக, தேற்றரவாளனை அப்போஸ்தலர்களுக்கு அனுப்புவதாக அவர் வாக்களித்திருந்தார். நினைவிருக்கட்டும், இது எல்லோருக்கும் பொதுவாக அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் அல்ல. ஆனால் அப்போஸ்தலர் களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம். பின்னர், கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப்பின், தமது பரலோக பிதாவினிடத்திற்கு அவர் திரும்புவதற்கு முன்னர், பரத்திலிருந்து வல்லமை வருமளவும், தமது அப்போஸ்தலர்களை எருசலேமிலே காத்திருக்கச் சொன்னார். (லூக்கா 24:49: அப் 1:8 அவர்களும் அவ்வாறே செய்தனர். தொடர்ந்து நாம் படிக்கிறோம் "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது, அவர்க ளெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல

வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப். 2 : 1 -4).

இப்போது, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட இந்த மனிதர்கள் யார்? தேற்றரவாளனின் வாக்குத்தத்தத்தை கர்த்தர் யாருக்குக் கொடுத்திருந்தார்? உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமில் காத்திருங்கள் என்று யாருக்குக் கட்டளையிட்டார்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் அப்போஸ்தலர்கள் தான். அதன் பிறகு, அந்நிய மொழிகளில் பேசி, அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்? மீண்டும், அதே அப்போஸ்தலர்கள் தான் (லூக் 24:49, அப். 2:4, அப். 2:43)

அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவி வாக்களிக்கப் பட்டது; பின்னர் யோவேல் தீர்க்கதரிசி, யோவேல் 2:28 ம் வசனத்தில் முன்னுரைத்தபடி, ஆவி அவர்களுக்கு பொழியப் பட்டது; அப்போஸ்தலர் நடபடி 2 : 16, 17-ம் வசனங்களில் லூக்கா எழுதியுள்ளது போல எருசலேமில் அன்றைய தினத்தில் அது நிறைவேறியது - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானகன் கூறியிருந்தது இது பற்றித்தான். (மத். 3 : 11)

திருமுழுக்கு என்ற வார்த்தைக்கு அடக்கம், முழுக்குதல், ஒன்றை மேற்கொள்ளுதல் எனப் பொருள். திருமுழுக்கு என்பது தண்ணீரோ அல்லது பிற காரியங்களோ சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். எனவே, பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ் தலர்கள் எருசலேமில் கூடி வந்த நேரத்தில், "பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க

முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று" (அப். 2:2) என வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. வேறு விதமாகக் கூறினால், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் முழுக்கப்பட்டனர் அல்லது அடக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டதற்கு அத்தாட்சியாக அவர்கள் அந்நிய மொழிகளில் பேச ஆரம்பித்தனர். (அப். 2:3,4) இந்த மொழிகள் புரியக்கூடியவைகளாக இருந்தன. ஏனெனில் அவைகளைக் கேட்டவர்கள், அவரவர் மொழிகளில் கேட்பதாக ஆச்சரியப் பட்டுக் கூறினார்கள். (அப். 2 : 6).

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் திருமுழுக்குப் பெற்றதின் விளைவாக பலர் ஆசீர்வதிக்கப்பட்டனர். எப்படியெனில் புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்பட்டுத் தரப்படாத நிலையில் இருந்தது. எனவே சத்தியத்தைப் போதிக்க, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, இறுதியாகவே எழுதப்பட்ட வார்த்தை கொடுக்கப்பட்டது.

வேதாகமத்தில் காணப்படும் மற்றும் ஒரே ஒரு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் சம்பந்தப்பட்டது. இந்தக் குடும்பம் புறஜாதியாரை பிரதிநிதித்துவப் படுத்தியது. அப்போஸ்தலர்கள் அனைவரும் யூதர்கள், அவர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். கர்த்தர் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபித்துக்காட்ட புறஜாதியாரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர்.

அப்போஸ்தலர் நடபடி *10, 11* அதிகாரங்களில் இந்தக் குடும்பத்தைப் பற்றி படிக்கிறோம். வசனம் கூறுவதைப் பாருங்கள்: "இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து,

எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து : ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன் : உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்." (அப். 10 : 1- 6) தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதை பேதுருவுக்கு உணர்த்தும் படியாகவும், புற ஜாதியார் இரட்சிப்புக்குள் வரும்படியாகவும் இது நடந்தேறியது. இதன் பிறகு, பேதுருவும் மற்றவர்களும் கொர்நேலியுவின் வீட்டுக்கு வந்தார்கள். பின்னர், வசனம் கூறுகிறது : "அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்." (அப். 10:34-35) பேதுரு தொடர்ந்து போதிக்கிறான். பின்னர் நாம் படிக்கிறோம் : "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு : நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று

சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்" (அப். 10:44-48).

அப்போஸ்தலர் நடபடி 11-ம் அதிகாரத்தில், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த போது, செசரியாவில் என்ன நடந்தது என்பதை எருசலேமில் பேதுரு சொல்லுகிறான். அதாவது, "நான் பேசத் தொடங்கிய போது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்ட பொழுது அமர்ந்திருந்து அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்." (அப். 11:15-18).

பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில், அதாவது எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளிலே, எவ்வாறு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றார்களோ அவ்வாறே கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் இப்போது பெற்றார்கள் என்பதை, பேதுரு இங்கு தெளிவாகக் காட்டுகிறார். இது தனிப்பட்டது (பிரத்யேகமானது), எல்லாரும் பெற்றுக் கொண்டது அல்ல என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு பற்றிய மற்றொரு உதாரணத்திற்கு பேதுருவும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்ற அந்தக் காலத்திற்கு அதாவது சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்திற்கு பேதுரு செல்ல வேண்டியதாயிற்று;

ஏனெனில் இடைக்காலத்தில் வேறு எவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை.

மற்ற எல்லா கிறிஸ்தவர்களின் நிலை என்ன? அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனரா? இல்லை, அவர்கள் பெறவில்லை. எல்லா கிறிஸ்தவர்களும் அப்போது அதைப் பெற்றிருந்தால், அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்றதைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசும் ஒரு பெரிய காரியமாக அது இருந்திருக்குமா?

ஆனால், "நிச்சயமாக இன்று சில கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பார்கள்" என சிலர் சொல்லக்கூடும். இல்லை, ஒருவர் கூட கிடையாது. ஒருவரும் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறுவதில்லை. எதற்காக அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்? நம்மை வழிநடத்த, எழுதப்பட்ட வசனங்கள் உள்ளது. அதிலுள்ள உபதேசத்தின்படி கீழ்ப்படிந்து நடந்தால், கர்த்தர் வாக்களித்தபடி நம்மை இரட்சித்து ஆசீர்வதிக்கிறார். அப்படியானால், பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

# பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பெற்றவர்கள் யார்?

இது ஒரு முக்கியமான கேள்வி, ஏனென்றால், அப்போஸ்தலருடைய நடபடி 1ம் அதிகாரம் 15ம் வசனத்தில் காணப்படும் 120 சீடர்களும், மற்றும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமைகளைப் பெற்றனர் என்ற ஒரு தவறான நம்பிக்கையில் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் உள்ளது.

நாம் முந்தைய பாடங்களில் பார்த்தது போல, கிறிஸ்து தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களித்தார். (யோவான் 14:26). அனைவருக்கும் அனுப்புவதாக பொதுவான வாக்குத்தத்தம் எதையும் அவர் அளிக்கவில்லை. அடுத்து, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என தமது அப்போஸ்தலர்களை இயேசு கேட்டுக் கொண்டார். (லூக்கா 24:49). அப்போஸ் தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், அவருக்கு சாட்சியாக இருப்பார்கள் என்றார். (அப்1: 8). மீண்டும், இவ்வாறாக அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசினார். சீடர்கள் யாரிடமும் பொதுவாக பேசவில்லை. எனவே அப்போஸ்தலருடைய நடபடிகள் 1, 2 அதிகாரங்களுக்கு நாம் வரும்போது, அங்கு நடந்தவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடி 1ம் அதிகாரத்தின் முற்பகுதியில் கிறிஸ்து பரலோகத்திற்கு எவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதை லூக்கா விளக்கிக் கொண்டிருக்

கிறார் : "- இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, - நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி : யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப். 1:1-5). இப்போது இந்த விவரங்களை நீங்கள் படிக்கும் போது, அவர் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர்களிடம் மட்டுமே கர்த்தர் பேசிக் கொண்டிருந்தார் என்பதை தெளிவாகக் காணமுடியும். எருசலேமில் அவர்களை தங்கியிருக்கும்படியும், சில நாட்களில் பரிசுத்த ஆவியை அவர்கள் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார். யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்ததையும் அவர்களோ பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறுவார்கள் என்பதையும் அப்போஸ்தலர்களுக்கு அவர் நினைப்பூட்டினார். அப்படியானால், கர்த்தர் யாரிடம் பேசிக் கொண்டிருந்தார் என்பதிலோ, யாருக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை வாக்களித்தார் என்பதிலோ சந்தேகம் இருக்கிறதா? நிச்சயமாக, அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார்; அவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை வாக்களித்தார். ஆனால் மீண்டுமாக, நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்கும் போது, கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார் என்பதையும், அவர்களைப் பற்றியும் பல சந்தர்ப்பங்களில் கீழ்க்கண்டவாறு பேசினார் என்பதையும் நீங்கள் காண்பீர்கள் : " . . . அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது . . . எருசலேமை விட்டுப் போகாமல் . . . காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்". "நீங்கள் பரிசுத்த

ஆவியினாலே திருமுழுக்குப் பெறுவீர்கள்" என்றும் அவர் சொன்னார். எனவே, "நீங்கள்" "அவர்கள்" என்றெல்லாம் அவர் அழைப்பது அப்போஸ்தலர்களை மட்டுமே என்பதைக் காண்க. இந்த சந்தர்ப்பங்களில் மட்டுமின்றி, அப்போஸ்தலருடைய நடபடிகள் 1,2 அதிகாரங்கள் முழுவதும் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணலாம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தின் பிற்பகுதியில், கர்த்தரைக் காட்டிக் கொடுத்து, தற்கொலை செய்து கொண்ட யூதாஸுக்குப் பதிலாக சீடர்களிடமிருந்தும், அங்கு கூடியிருந்த 120 பேர்களிடமிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் அப்போஸ்தலர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். யோவான் திருமுழுக்கு கொடுத்து வந்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் அப்போஸ்தலர்களுடன் சஞ்சரித்த காலங்களிலெல்லாம் அவர்களுடனேகூட இருந்த மனிதர்களில் ஒருவனே அப்போஸ்தலனாகத் தகுதி பெற்றவன் என்பதைக் காண்கிறோம். வேறுவிதமாகக் கூறினால், கர்த்தர் உயிரோடு எழுந்ததை அப்போஸ்தலர்களுடனே கூட சாட்சி சொல்லுகிறவனாக இருக்க வேண்டும். எனவே, "அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இரண்டு பேரையும் நிறுத்தி : எல்லாருடைய இருதயங் களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்து கொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம் பண்ணி; பின்பு, அவர்களைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது: அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப்பட்டான்". (அப். 1:23-26).

இப்போது, சீடர்களிடமிருந்து இருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களில் ஒருவரை அப்போஸ்தலனாக்கும் பணியில் ஈடுபட்டி

ருந்தவர்கள் யார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்கள் தான். அப்போஸ்தலனாகத் தகுதியுள்ளவனைத் தேர்ந்தெடுக்கும்படி தங்களுக்குக் காட்ட, கர்த்தரிடம் ஜெபம் செய்து சீட்டு போட்டுப் பார்த்தவர்கள் யார்? மீண்டும், அவர்கள் அப்போஸ்தலர்கள் தான் என்பதே பதில். மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்ட பின், யாரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டான்? வசனம் கூறுவது போல, பதினொரு அப்போஸ்தலர்களுடனே சேர்த்துக் கொள்ளப்பட்டு, இப்போது அவர்கள் பனிரெண்டு அப்போஸ்தலர்கள் ஆயினர். எனவே, சங்கிலித் தொடர் போன்று நடைபெற்ற சகல காரியங்களும், அப்போஸ்தலர்களுடன் சம்பந்தப்பட்டவை களாகவே இருந்திருக்கின்றன. ஆம், அவை அனைத்தும் அப்போஸ்தலர்களையே குறிக்கின்றன.

இப்போது நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1ம் அதிகாரத்தின் இறுதிக்கு வந்துவிட்டதைக் கவனியுங்கள். தொடர்ந்து 2ம் அதிகாரத்திற்குச் செல்லவிருக்கிறோம். ஆனால், மூல கையெழுத்துப் பிரதி அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அறியுங்கள். எனவே, எண்ணங்களும் செயல்பாடுகளும் தொடர்ச்சியாகவே வந்த வண்ணமிருந்தன. ஆகவே, அப்போஸ்தலர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் அவைகளைத் தொடர்ந்து நாம் படிப்போம் : "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல் லாரும் ஒரு மனப்பட்டு, ஒரிடத்திலே வந்திருந்தார்கள் "(அப். 2:1). இப்போது, இங்கு பேசப்படுவோர் அப்போஸ்தலர்களாக மட்டுமே இருந்தால், பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள் அதாவது அப்போஸ்தலர்கள், ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே கூடியிருந்தனர் என்று காண்கிறோம். தொடர்ந்து வசனம் கூறுகிறது : "அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று". (அப் 2 : 2). இந்த முழக்கம் யார் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று? அப்போஸ்தலர்கள்

உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பியது. "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு" அதாவது, அப்போஸ்தலர்களுக்கு, "காணப்பட்டு, அவர்கள் "அதாவது, அப்போஸ்தலர்கள் எல்லாரும், "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு" அதாவது, அப்போஸ்தலர்களுக்கு "தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்". (அப்.2:3,4). பின்னர், பேதுரு பதினோரு பேருடன் கூட நின்று உரத்த சத்தமாய் பேசலானான். இந்த 11 பேரும் யார்? அப்போஸ்தலர்கள் தான். மேலுமாக, பேதுரு விளக்கினான்; இந்த மனிதர்கள், (அப்போஸ்தலர்கள்) மது அருந்தியிருக்கவில்லை; ஆனால் யோவேல் தீர்க்கதரிசியால் கூறப்பட்டது போல கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் தேவன் தமது ஆவியை ஊற்றுவார் (அப். 2 : 14 - 17). அதை அவர் செய்தாரா? ஆம், தமது ஆவியின் வித்தியாசமான அளவுகளை பலருக்கும் அளித்தார். அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்தார். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களின் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து, அப்போஸ்தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பது போல, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்களுக்குக் கிடைக்கச் செய்தார். இறுதியாக, மற்ற யாவரும், நமது காலம் வரையிலும் கூட, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது பரிசுத்த ஆவியானவரின் கனிகளை அல்லது அற்புதம் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். (அப். 2 : 38). அது மட்டுமல்லாமல், அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தை தொடர்ந்து படித்தால், அன்றைய தினத்தில் அங்கு கூடியிருந்தவர்களுக்கு அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிக்க, ஏறக் குறைய மூவாயிரம் பேர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பாவமன்னிப்பும் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் கனிகளையும் பெற்றனர் என்பதையும், கர்த்தர் தமது சபையிலே அவர்களை சேர்த்துக் கொண்டார் என்பதையும் நாம் பார்க்கிறோம். அதே

அதிகாரத்தில், கர்த்தருக்கு கீழ்ப் படிந்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்றும், அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன. எனவே, எல்லா முக்கியத்துவங்களும் அப்போஸ் தலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். ஏனென்னில் அவர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். ஒரு வேளை நூற்றிருபது பேரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தால், இன்னும் ஒரு வேளை மூவாயிரம் பேரும் திருமுழுக்குப் பெற்றிருந்தால், அங்கு நடந்ததைவிட பெரிய அளவிலான அற்புதங்களும் அடையாளங்களும் நிகழ்ந்திருக்கும். மேலும், அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்று, அற்புதங்கள் செய்யும் வல்லமையையும் பெற்றிருந்தால், அப். நடபடிகள் 6ம் அதிகாரத்தில் காணப்படுவது போல, சீடர்களில் 7 பேரை தேர்ந்தெடுத்து அப்போஸ்தலர்கள் அவர்கள் மேலே கையை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் என்ன? இவை அனைத்தையும் சிந்தித்துப் பாருங்கள். உண்மை பளிச்சென்று உங்களுக்குத் தெரியும்.

# கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர்

அப்போஸ்தலர்களை சத்தியத்தில் வழி நடத்தவும், கிறிஸ்துவின் உபதேசத்தை அவர்களுக்கு நினைப்பூட்டவும், கூடுதலான சத்தியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை அவர்களுக்கு அளிக்கவும், அற்புதங்கள் செய்யும் வல்லமையை அவர்களுக்கு தருவதற்காகவும், தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்திருந்தார் என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். இவையனைத்திற்கும் காரணம் என்னவெனில், அச் சமயம் வரை புதிய ஏற்பாடு வெளிப்படுத்தப்படாமல் இருந்தது. ஆகையால் தங்களுக்கு தேவசித்தத்தை வெளிப்படுத்தும்படியாகவே இவர்கள் தேவனால் அனுப்பப்பட்டார்களென்று, ஜனங்கள் அப்போஸ்தலர்களை நம்பும்படியாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாடு ஒரு முறை வெளிப்படுத்தப்பட்ட பிறகு அற்புத வழி நடத்துதலுக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. இப்போது அப்போஸ்தலர்களும் மரித்துப் போய்விட்டனர். எனவே இன்று நாம் யாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையில்லை. கிறிஸ்து ஒருவரே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அளிப்பவராக இருப்பதால், இன்று அந்த வல்லமையை யாரும் பெற்றுக்கொள்ள முடியாது.

மேலே குறிப்பிட்டவை உண்மையாக இருந்தால் (அவை உண்மை தான்) பின்னர் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை ஏன் பெற்றனர்? அப்போஸ்தலருடைய நடபடிகள், 10, 11 அதிகாரங்களை நீங்கள் படித்துப் பார்த்தபின் அதற்கான விடையைக் காண்பீர்கள் என நான் நினைக்கிறேன். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் புற

ஜாதியாக இருந்தபடியால், கர்த்தர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்து, யூதர்களைப் போலவே புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், தேவன் பட்சபாதமற்றவர் என்பதையும் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் நிரூபித்துக் காட்டவே அவ்வாறு செய்தார் என்ற உண்மை பளிச்சென்று தெரிய வரும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-ம் அதிகாரத்தில், நாம் கொர்நேலியுவுக்கும், அவன் வீட்டாருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறோம். கொர்நேலியு ஒரு நீதிமானும், ஏழைகளுக்கு தருமங்கள் செய்தவனும், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவனுமாக இருந்தான். இப்படியிருக்கையில், தேவனுடைய தூதன் ஒருவன் அவனிடம் வந்து, அவனுடைய ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நதியில் வந்தெட்டியது என்று கூறினார். பின்னர் தொடர்ந்து கொர்நேலியுவை நோக்கி யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி பேதுருவை அழைப்பித்து, தான் என்ன செய்ய வேண்டுமென அவனிடம் கேட்கச் சொன்னான். ஆனால், கொர்நேலியு என்ன செய்ய வேண்டுமென்று அந்த தூதனே அவனிடம் ஏன் சொல்லவில்லை? ஏனென்றால், நற்செய்தியானது "மண் பாண்டங்களில்" வைக்கப்பட்டிருந்தது. ஆம், மனிதர்களிடம் தான். எனவே தான், பேதுருவைப் போன்ற ஒரு மனிதன் கொர்நேலியுவுக்கும் அவன் குடும்பத்திற்கும் செய்தியை கொண்டு வர வேண்டியதாயிருந்தது. 'கர்த்தர் என்னிடம் பேசினார்' அல்லது 'ஒரு தூதன் வந்து தேவனின் விருப்பத்தை எனக்கு வெளிப்படுத்தினான்' என்றெல்லாம் பலர் பரவலாகத் சொல்லித் திரிகிறார்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். நிச்சயமாக இவ்விதக் கூற்றுக்கள் அனைத்தும் வேதாகமத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவைகளாகும். மனிதனுடன் கர்த்தர் இன்று அவ்வாறு நடந்து கொள்பவராக இருப்பின், ஏற்கனவே நாம் பார்த்தது போல, கொர்நேலியுவிடம் பேதுருவை அனுப்புவதற்குப் பதிலாக, அந்த தூதனே

கொர்நேலியுவிடம் என்ன செய்ய வேண்டும் என்று ஏன் சொல்லவில்லை?

ஆனால், இப்போது அந்தக் காட்சி யோப்பா பட்டணத்தில் சீமோன் என்ற தோல் பதனிடுகிறவன் வீட்டிற்குத் திரும்புகிறது. அங்கே, பேதுரு ஜெபம் பண்ண, மேல் வீட்டில் ஏறியதை நாம் பார்க்கிறோம். அவன் மிகுந்த பசியுடன் சாப்பிட மனதாயிருந்த வேளையில், அவன் ஞான திருஷ்டியடைந்து, தன் முன்னே சகலவித நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்து பறவைகளும் இருக்கக் கண்டான். மேலும், பேதுருவை நோக்கி அவற்றை அடித்துப் புசி என ஒரு சத்தம் உண்டாகவும் பேதுரு அந்த தரிசனத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, கொர்நேலியு அனுப்பிய மனிதர்கள் பேதுருவைத் தேடிக் கொண்டு வந்தனர். பின்னர், 'ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப் போ' என ஆவியானவர் பேதுருவிடம் கூறினார்.

அதன் பின்னர் வசனங்கள் தொடருகின்றன : "மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூட வரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான். பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர் கொண்டு போய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்து கொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து; எழுந்திரும், நானும் ஒரு மனிதன் தான் என்றான். அவனுடனே பேசிக்கொண்டு உள்ளே போய், அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டு, அவர்களை நோக்கி அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்கு வரவாய் இருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனிதனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்த போது நான் எதிர் பேசாமல் வந்தேன்.

இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்.

அதற்குக் கொர்நேலியு நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசமிருந்து, ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த மனிதன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று; கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது. உன் தான தருமங்கள் தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். அந்தப் படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்த பின்பு, கலிலேயா நாடு முதற் கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை

மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்றான்.

இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்". (அப். 10 : 24 - 48).

பின்னர், அப்போஸ்தலருடைய நடபடிகள் 11-ம் அதிகாரத்தில், பேதுரு எருசலேம் வரை சென்று, செசரியாவில் கொர்நேலியுவோடும் அவன் வீட்டாரோடும் நடைபெற்ற அனைத்தையும் சீடர்களிடம் விவரிக்கிறான். சகல விவரங் களையும் கூறிய பின்னர், "நான் பேசத் தொடங்கின போது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது

போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப் படுத்தினார்கள்" என்று பேதுரு கூறுகிறார். (அப். 11 : 15-18).

பின், ஏன் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர்? தொடக்கத்திலிருந்து சொல்லப் போனால், அப்போஸ்தலர்கள் மட்டுமே முதலில் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். தாங்கள் பெற்றுக் கொண்டதைப் போல, அதாவது அப்போஸ்தலர்கள் ஆரம்பத்தில் பெற்றதைப் போல, கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் இப்போது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றார்கள் என்று பேதுரு விளக்கினான். தேவன் பட்சபாதமற்றவர் என்பதை யூதர்களுக்கு எடுத்துக்காட்ட இவ்வாறு நடந்தது. ஏனெனில், யூதர்கள், அதாவது அப்போஸ்தலர்கள், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டிருந்த வேளையில், புற ஜாதியார்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை.

அப்போஸ்தலர்களையும் கொர்நேலியுவின் வீட்டாரையும் தவிர வேறு யாராவது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனரா? அவ்வாறு இருந்தால், அதைப் பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் ஒன்றும் பார்க்க முடியவில்லை. அதன் பின்னர், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை வேறு யாராவது பெற்றதாக எவ்விதமான வசன ஆதாரமும் இல்லை. இன்று பலர் தாங்கள்

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் போதிப்பதும் நடப்பதும் பரிசுத்த ஆவியானவரின் உபதேசங்களுக்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அனைவரும் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே அவர்களனைவரும் தவறில் இருக்கின்றனர் என்பதை நாம் நம்ப முடிகிறது.

# கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை

பரிசுத்த ஆவியானவரின் பணி அல்லது கிரியைகள் பற்றிய தொடரில் நாம் இப்போது கைகளை வைத்துப் பெற்றுக் கொள்ளும் அளவிலான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை யைப் பற்றிப் பார்ப்போம். இப்பொருள் பற்றி நிறைய தவறான கருத்துக்களும், பல கள்ள உபதேசங்களும் உலா வருவதால், நாம் இதை விரிவாக அலசிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

“தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தை களைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில் லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார் எனக் கிறிஸ்துவைப் பற்றி யோவான் கூறினார். (யோவான் 3:34, 35). அதாவது, ஆவியின் வல்லமையை கிறிஸ்து அளவற்ற விதத்தில் பெற்றார். அல்லது ஆவியை பயன்படுத்துவதற்கு அவருக்கு எவ்வித அளவும் (வரையறை) இல்லை. கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்தார் என்று கூறும்போது, பிறர் ஆவியை அளவோடு பெற்றிருந்தார்கள் என்று பொருளாகும். எனவே, ஆவியான வரின் வல்லமை அவர்களுக்கு இருந்தபோதிலும், அந்த வல்லமை யால் செய்யக்கூடிய காரியங்களுக்கு ஒரு அளவு இருந்தது.

உதாரணமாக, பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் திருமுழுக்கு அளிக்கும் வல்லமை கர்த்தருக்கு இருந்தது என நமது பாடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். (மத். 3:11). பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர் அளவில்லாமல் பெற்றிருந்தார். (மத். 3 : 13-17). இந்த திருமுழுக்குகளை அவர் மட்டுமே கொடுக்க வல்லவராக இருந்தார் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பற்றிக் கூறும்போது, முதலில், அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே தேற்றரவாளனை அனுப்புவதாக கிறிஸ்து அவர்களுக்கு வாக்களித்திருந்தார். (யோவான் 14:26). அந்த வாக்குத்தத்தம் லூக்.24:49 லும், அப். 1:8லும் மீண்டும் கூறப்பட்டது. பின்னர், அப்.2:1-4ல் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றதாக படிக்கிறோம். இது திருமுழுக்கின் அளவிலான பரிசுத்த ஆவி. ஒரு காரணத்திற்காக அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் மற்றவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைக் கொடுக்க இயலாதிருந்தனர். அப்படியானால், அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்த அளவிற்கு மட்டுமே கிடைத்திருந்தது.

ஆனால், அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேர் மட்டுமே இருந்தனர். அவர்கள் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்கக் கட்டளையிடப்பட்டிருந்தனர். அதாவது, அவர்களின் கரங்களில் ஒரு பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது என அதற்கு அர்த்தம். அது மட்டுமல்லாமல், சீடர்களின் உலகத் தேவைகளைக் கவனிக்கும் வேலையிலும் அவர்கள் தங்களை ஈடுபடுத்தியிருந்தார்கள் என அப்போஸ்தலர் நடபடிகள் 6ம் அதிகாரத்தில் படிக்கிறோம். இந்த இடத்தில், வசனம் கூறுவதைக் காண்போம். “அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து. நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்”. (அப். 6 : 2-4).

இப்போது, அப்போஸ்தலர்களுடைய யோசனை பற்றி இங்கு நாம் ஒரு சில காரியங்களைக் கவனிப்போம். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை எல்லாக் கிறிஸ்தவர்களும் பெற்றுக்கொள்ளலாமென்றும், கண்டிப்பாகப் பெற்றுக்கொள்ள

முடியுமென்றும் வாதிடுவோர் உண்டு. ஆனால் அப்போஸ் தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரம் வரை, யாரெல்லாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தனரோ, அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை என்று தெளிவாகத் தெரியவருகிறது. சந்தேகமின்றி, அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்குக் காரணம், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறவேண்டுமென்பது கர்த்தரின் திட்டம் அல்ல.

பொதுவாக, எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெறவில்லை என்றும், எனவே அற்புதங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்கள் அடைந்திருக்கவில்லை என்றும் அப்போஸ்தலர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். அவ்வாறான வல்லமையை அவர்கள் பெற்றிருந்தால், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருந்த ஏழுபேரை அவர்களிலிருந்து அப்போஸ்தலர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

பரிசுத்த ஆவியானவரால் நிறைந்துள்ள ஏழு பேரை தேர்ந்தெடுக்க வேண்டுமென அப்போஸ்தலர்கள் கேட்டுக் கொண்டதைக் கவனிக்கும் போது, அர்த்தமுள்ள ஒரு செய்தியாக அது நமக்குத் தெரிகிறது. ஏனென்றால், அற்புதங்களைச் செய்யும் வல்லமையை பெற்றுக் கொள்ளாமலிருக்கும் போதும், பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்க முடியும் எனத் தெரிகிறது அல்லவா? பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பதற்கும், ஒருவர் அற்புதங்களைச் செய்யும் அளவிற்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதற்கும் வித்தியாசம் என்ன? ஆவியின் அளவுகள் வேறுபட்டிருந்தன என்பதே வித்தியாசம் எனத் தெளிவாகத் தெரிகிறது. அப்போஸ்தலர்கள் திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். எனவே, அந்நிய மொழிகளில் பேசவும், அற்புதங்கள் செய்யவும் அவர்களால் முடிந்தது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இந்த சந்தர்ப்பத்தில், பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்த போதிலும், அவர்கள் அப்போஸ்

தலருடைய நடபடி 2:38ம் வசனத்தில் வாக்களிக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் வரத்தை மட்டுமே பெற்றிருந்தனர். அது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவி.

ஆனால், இந்த சீடர்கள் எந்த அளவிலான ஆவியைப் பெற்றுக் கொள்ள இருந்தனர்? அந்த ஏழு சீடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், "அவர்களை அப்போஸ் தலர்களுக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்" (அப். 6:6) என்பதாக வசனம் கூறுகிறது. அப்படியானால், இது என்னவாயிருந்தது? இதுவே கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி. அப்போஸ்தலர்கள் தான் அவர்கள் மேல் கைகளை வைத்தனர். எனவே, கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைக் கொடுக்கும் வல்லமை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். இந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அந்த ஏழு சீடர்களும் என்ன செய்யக் கூடியவர்களாக இருந்தனர்? தொடர்ந்து நாம் படிக்கும் போது, "ஸ்தேவான் விசுவாசத் தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக் குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்" (அப். 6 : 8) என்பதாகப் பார்க்கிறோம். மற்றவர் களுடைய காரியம் என்ன? இதுபோலவே அவர்களும் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். ஆனால் அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதற்கு முன்பு இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்ய இயலாதவர்களாக இருந்தனர்.

கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்ட அந்த ஏழு சீடர்களும் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாகவும், அந்நிய மொழி பேசக்கூடியவர்களாகவும் இருந்தபோதிலும், அவர்களால் அந்த வல்லமையை பிறருக்கு அளிக்க இயலவில்லை. உதாரணமாக, பிலிப்பு கிறிஸ்துவைப் போதிக்க சமாரியாவிற்குச் சென்றான். அங்கே, "அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே

கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப்பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று". (அப். 8:7-8). "சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்". (அப்.8:14-17).

முன்பு குறிப்பிட்டது போல, அப்போஸ்தலர்களால் கைகள் வைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையை ஏழு பேரும் பெற்றுக் கொண்ட போதிலும், அந்த வல்லமையை பிறருக்கு அவர்களால் கொடுக்க முடியவில்லை. அவ்வாறு கொடுக்க முடிந்திருந்தால் அவர்கள் தங்களுடைய நண்பர்களுக்குக் கொடுத்திருப்பார்கள். காரியங்கள் கட்டுப்பாடற்றுப் போயிருக்கும். அப்போதைய நிலைமையின்படி, சில கிறிஸ்தவர்களின் மேல் கைகளை வைத்து, அவர்களுடைய ஊழியத்திற்கு உதவக்கூடிய வகையில், அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அவர்கள் அடைந்திட, அப்போஸ்தலர்கள் சமாரியாவிற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் இந்த வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. உதாரணமாக, மாய்வித்தைக்காரனான சீமோன் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தான். அதோடு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அடைய விரும்பினான். அதற்காக அப்போஸ்தலர்களுக்குப் பணம் கொடுக்கவும் தயாரானான். ஆனால் அவனுடைய பாவத்திற்காக அவன் கடிந்து கொள்ளப்பட்டு, பின்னர் மனந்திரும்பிய போதிலும், அவன்

பேரில் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவனுக்கு வழங்கவில்லை. இப்படிப் பட்ட வல்லமை ஒரு வேளை அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந் தால், சந்தேகமின்றி அவன் அதை தவறாகப் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

எபேசு பட்டணத்தில், சீடர்களின் குழு ஒன்றுடன் பவுல் தொடர்பு கொள்ளுவதாக, பின்னர் அப்போஸ்தலர் நடபடிகள் 19ம் அதிகாரத்தில் காண்கிறோம். அவர்கள் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றிருந்தனர் என்ற போதிலும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கவில்லை. பவுல் அவர்களுக்கு உபதேசித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கிறார். அதன் பின்னர், நாம் படிக்கிறோம் : "அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். (அப். 19 : 6).

நிச்சயமாக, நாடு முழுவதுமாக பல சீடர்களின் பேரில் அதாவது, பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ள தகுதியுள்ள, நீதியான, நேர்மையான மக்களின் மேல் அப்போஸ் தலர்கள் தங்கள் கைகளை வைத்தனர். கிறிஸ்து வந்ததின் நோக்கம் நிறைவேறவும் பிராந்திய சபைகள் முதிர்ச்சியடையவும் இது வழி வகுத்தது.

ஆனால், அப்போஸ்தலர்கள் அனைவரின் மரணத்திற்குப் பின்னர், மேலும் அவர்கள் யார் பேரில் எல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்கள் எல்லாரும் மரணமடைந்த பின்னர், அற்புதங்கள் நடைபெற்ற காலம் முடிவுக்கு வந்துவிட்டது. அற்புத அடையாளங்களுக்கு பின்னர் அவசியம் இல்லாமற் போயிற்று. ஏனென்றால், இந்தக் காலத்தில் புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டு விட்டது. இப்போது நமக்கு ஒரு நல்ல வழிகாட்டி உள்ளது. ஏனெனில் நமக்கு வழிகாட்டவும், நம்மை நடத்திச் செல்லவும்

புதிய ஏற்பாடு உள்ளது. இன்றைய நாட்களில் அப்போஸ்தலர்கள் யாரும் இல்லாததாலும், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களும் ஒருவரும் இல்லாததாலும், இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்கள் அல்லது அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததன் மூலம் அற்புதங்கள் செய்யும் வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்களோ யாரும் இல்லை. இதை மறுப்பவர்கள் ஆவியானவரின் வார்த்தைகளை மறுக்கிறார்கள். இது அவர்களிடம் ஆவியின் கிரியை இல்லை என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது.

# மாய வித்தைக்காரனான சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன்?

சமாரிய நாட்டு மக்களுக்குக் கிறிஸ்துவைப் போதிக்க பிலிப்பு எவ்வாறு சமாரியாவுக்குச் சென்றான் என கடந்த பாடத்தில் பார்த்தோம். அந்த சம்பவத்தின் சுருக்கத்தை இங்கு தருவதைவிட, வசனப்பகுதியைப் படித்து என்ன நடந்தது எனக் காண்போம் : "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மனிதன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்து வினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக் கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள்

கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களி டத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்த பொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர் களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்தினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்ட போது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து; நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி : தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாக இராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள் ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான். இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங் கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்." (அப். 8:6-25).

வசனத்தின் நீளமான ஒரு தொடராக இது இருந்த போதிலும், என்னதான் நடந்தது என்பது பற்றிய துல்லியமான முழு விவரத்தையும் உங்கள் முன்பு கொண்டு வர விரும்பினேன்.

முதலில், பிலிப்பு என்ற பிரசங்கி சமாரியாவுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவை அறிவித்தார். அப்போஸ் தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அளித்த ஏழு பேர்களில் பிலிப்பும் ஒருவர். அந்த வல்லமையைக் காட்ட, தனது போதகப் பணியுடன் கெட்ட ஆவிகளை விரட்டுவது போன்ற பல அற்புதங்களையும் அவர்களிடத்தில் செய்தான்.

இவை அனைத்தின் விளைவாக, தேவனின் இராஜ்ஜி யத்தைப் பற்றிய காரியங்களை பிலிப்பு போதித்த போது, பலர் விசுவாசித்து, ஆணும் பெண்ணுமாக இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்றனர்.

சமாரியர்கள் மத்தியிலே செல்வாக்கான ஒரு மனிதன் அங்கிருந்தான். அவன் மாய வித்தைக்காரனான சீமோன் என்பவன். மக்கள் அனைவரும் அவனை பெரிய மனிதன் என எண்ணும் அளவிற்கு அவன் எல்லோரையும் ஏமாற்றி வைத்திருந்தான். இப்போது, நற்செய்தியைக் கேட்டு, அற்புதங்கள் செய்யப்படுவதையும் கண்ட பின்னர், அவனும் தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்பி, அவ்வாறே செய்தான்.

அந்த சமயத்திலே எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் வரை இந்தச் செய்தி எட்டியது. எனவே, பேதுருவும் யோவானும் அம்மக்களுக்காக ஜெபம் பண்ணவும், கைகளை அவர்கள் மேல் வைத்து பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாகவும் சமாரியாவுக்குச் சென்றனர். சீமோன் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களின் எண்ணிக்கையில் ஒருவனாக இல்லை. ஆனால் அங்கு நடந்தவற்றிற்கு அவன் சாட்சியாக இருந்தான். தானும் பரிசுத்த ஆவியின் வல்லமையை அடையத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் தன் மேல் கைகளை வைக்கவேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கொள்ளுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பணம் கொடுக்க முன் வந்தான். ஒருவேளை, அவன் தேவைகளைப்

பெற்றுக் கொள்ள, சம்பந்தப்பட்டவர்களுக்கு லஞ்சம் கொடுப்பது அவனுக்கு மிகவும் பழக்கமான ஒரு செயலாக இருந்திருக்கும்; எனவே வழக்கம் போல, அதே முறையைப் பின்பற்றி, இந்த வல்லமையைப் பெற அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முன் வந்துள்ளான். ஏற்கனவே, அவனுடைய மாய வித்தைகள் அல்லது மந்திர தந்திரங்கள் வழியாக மக்கள் மத்தியில் பெரிய மனிதனாகக் காட்சியளிப்பவன், இவன் இந்த பரிசுத்த ஆவியின் வல்லமையையும் பெற்றுக் கொண்டால் உண்மையிலேயே பெரிய மனிதனாக மாறிவிடலாம் என்று அவன் எண்ணினான்.

அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற போது, சீமோன் அவர்களிடம், "நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான்." அந்த வல்லமையை தான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணியதோடு மட்டுமல்லாமல், அதை பிறருக்குக் கொடுக்கக் கூடிய சக்தியும் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று அவன் எண்ணினான். இந்த மாதிரியான தவறுகள் நேருமமென்ற காரணத்திற்காகத்தான், இப்படிப்பட்டவர்களுக்கு, பிறருக்கு வல்லமையை அளிக்கும் வரம் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு மற்றவர்களுக்கு அந்த வல்லமையை அளிக்கும் சக்தியை அவர்கள் அடைந்திருப்பார்களேயானால், லஞ்சம் பெற்றுக் கொண்டு அதை பிறருக்கு அளிக்கும் சோதனையும் அவர்களுக்கு வந்திருக்கும். அல்லது அந்த வல்லமையின் முக்கியத்துவம் எதுவும் அறியாது, அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள் என எல்லோருக்கும் கொடுத்திருப்பார்கள்.

ஆனால் சீமோனின் லஞ்சம் கொடுக்கும் முயற்சி பலிக்கவில்லை. "பேதுரு, அவனை நோக்கி தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாகப் போகக்கடவது" என்றான். (அப். 8:20). எனவே, இது அனைத்தும் நடக்கும் விதத்தை முற்றிலும் அவன் தவறாகப்

புரிந்து கொண்டதைப் பற்றியும், தேவனுடைய வரத்தை நிச்சயமாகப் பணத்தால் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் குறித்து பேதுரு அவனுக்கு விளக்குகிறார். பின்னர், அவனைக் கண்டிக்கிறார்; அவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாக இராதபடியால் அவனது துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, அவனுடைய இருதயத்தின் எண்ணம் மன்னிக்கப்பட, தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளச் சொல்லுகிறார். "நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப் பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்" என பேதுரு சொல்லுகிறார். (அப். 8 : 23) வேறு விதமாகக் கூறினால், அவன் எவ்வளவு கீழ்த்தரமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரத்திற்குச் சென்று விட்டிருந்தான். அவன் பெரும் குற்றமிழைத்திருந்தான்.

நற்செய்தியைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்திருந்தபடியால், சீமோனிடம் பேதுரு இதைச் சொல்ல முடிந்தது. அதாவது, சபையில் ஒரு அங்கத்தினராகவும் கிறிஸ்தவனாகவும் இருந்து, பாவஞ் செய்திருந்தபடியால், மீண்டுமாக நற்செய்திக்கு அவன் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லாதிருந்தது. அவன் தன்னுடைய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, த்னது பாவத்தை மன்னிக்க தேவனிடம் வேண்டுவது அவனுக்குப் போதுமானதாக இருந்த்து. பேதுரு கடிந்து கொள்ளும் போது, சீமோன் ஆத்திரப்படாமல் தனது குற்றத்தை உணர்ந்தவனாக, பேதுருவை நோக்கி : "நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்". (அப். 8:24) அதன் பின்னர், பேதுருவும் யோவானும் எருசலேமுக்குத் திரும்பினர். பிலிப்பு வேறு பக்கமாகச் சென்றான். சீமோனுடைய நிலை என்ன? பேதுரு அவனைக் கண்டித்து, பின்னர் அவனுடைய பாவம் மன்னிக்கப்பட தேவனிடத்தில் வேண்டிக் கொள் எனக் கேட்டுக் கொண்டபோது, சீமோன் தனது பாவத்தை ஒப்புக் கொண்டு, தன் பேரில் அவ்விதக் காரியங்கள் எதுவும் நேரிடாதபடி தனக்காக ஜெபம் செய்ய பேதுருவிடம் கேட்டுக் கொண்டதாலும், நிச்சயமாக தனது முந்தைய நிலைக்குத் திரும்பி, இப்போது

மீண்டுமாக சீமோன் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமென்று நாம் யூகித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படியானால், அதன் பின்னர் அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை சீமோன் மேல் வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொள்ளச் செய்தார்களா? இல்லை. அதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. என்றாலும் அவனைப் பொறுத்தவரையில் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொண்டிருந்தால், அதைத் தவறாகப் பயன்படுத்தும் சோதனையிலிருந்து மீண்டிருப்பானா என்பது ஒரு கேள்வி. ஒரு அறிஞர் கூறியது போல, "ஒரு வங்கியை கொள்ளையடித்ததற்காக ஒருவன் மனஸ்தாபப்படும் போது அவனை மன்னிக்கலாம்; அதற்காக அதே நபரை அந்த வங்கியில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் காசாளர் பதவியில் அமர்த்த முடியாது".

கைகளை வைத்து பரிசுத்த ஆவியானவரைப் பெறும் அளவானது, ஒருவனுடைய இரட்சிப்புக்குக் கொஞ்சமும் சம்பந்தப்பட்ட காரியம் அல்ல. ஆனால், அந்த நாட்களிலே கர்த்தரின் காரியங்களைத் தீவிரமாகக் கவனிக்கும் ஊழியத்தைச் செய்ய, அப்போஸ்தலர்களால் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக் கொள்ள கர்த்தரின் சில மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்று அவ்வாறான அற்புத அடையாளங்களை நாம் சார்ந்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால், தேவனின் விருப்பத்தை, வீழ்ந்துபோன உலகத்திற்கு நாம் அறிவிக்கச் செல்லும் போது, நமக்கும் சகல மக்களுக்கும் அதை வெளிப்படுத்த புதிய ஏற்பாடு இருக்கிறது.

# பரிசுத்த ஆவியின் வரங்கள்

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பற்றியும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவி பற்றியும் நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்போது, அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்களைப் பற்றி நாம் பார்க்கலாம்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்ட பின், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்கள், அப்போஸ்தலர்கள் மூலம் கொடுக்கப்பட்ட கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த மற்ற அனைவரும், நமது நாட்கள் வரையிலும், கர்த்தர் மீண்டும் வரும் நாள் வரையிலும் கூட, பரிசுத்த ஆவியின் வரங்களை அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்களை பெற்றிருக்கின்றனர், அல்லது பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்திற்கு நாம் திருப்பிக் கொள்ளும் போது, யூதர்களின் பண்டிகையாகிய பெந்தெகொஸ்தே நாளிலே, உலகின் நாலா திசைகளிலிருந்தும் யூதர்கள் கூடி வந்திருந்த வேளையில், அப்போஸ்தலர்கள் எவ்வாறு எருசலேமிலே தங்கியிருந்தனர் எனக் குறிப்பிடப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வேளையில் தான், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றவர்கள் அந்நிய பாஷைகளில், - உண்மையிலேயே, அங்கு அன்று கூடியிருந்த மக்களின் பாஷைகளிலே, - பேசத் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்து, கூடியிருந்த திரளான மக்கள் கூட்டத்திற்கு உயிர்த்தெழுந்த கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றி பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் போதித்தார்கள். தொடர்ந்து, வசனம்

கூறுகிறது : "இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து : சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப்.2. 37, 38).

கர்த்தரின் மேல் விசுவாசம் வைத்தவர்கள், தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்கள் அகன்றிட திருமுழுக்குப் பெற்றனர் என்றும், பின் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றார்கள் என்றும் இந்த வசனங்களில் நாம் காண்கிறோம். இது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்கள்.

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கிலிருந்தும், அப்போஸ் தலர்கள் கொடுத்த, கைகளை வைத்து தரும் அளவிலான பரிசுத்த ஆவியிலிருந்தும், பரிசுத்த ஆவியின் வரங்கள் மாறுபட்டது என்பதை அறிய வேண்டும். இவற்றைப்பற்றி வேத வசனங்களில் படிக்கும்போது, அந்தந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்து, ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து மாறுபட்டது என்பதைப் பார்க்கலாம். உதாரணமாக, அப். 2:1-4ம் வசனங்களில், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர் என்பதை தெளிவாக நாம் காணலாம். அப்போஸ்தலருடைய நடபடி 6, 8 அதிகாரங்களில், பரிசுத்த ஆவியின் வல்லமையை சில சீடர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்தனர் என காண்கிறோம். அப். 2 : 38ம் வசனத்தில், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, கர்த்தருக்குக் கீழ்ப்படிய இருக்கும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியின் வரங்கள் வாக்களிக்கப்பட்டிருந்தது என்றுள்ளது.

மீண்டும், சீடர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை

என்பதை அப். 6ம் அதிகாரத்தில் நாம் பார்க்க முடிகிறது. இல்லாவிடில், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் பெற்றுக் கொள்ள தேவை இருந்திருக்காது என்ற போதிலும், அவர்கள் நற்சாட்சி பெற்ற நல்லவர்கள் என்றும், பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள் என்று சொல்லப்பட்டதின் அர்த்தம் என்ன? ஒன்று நிச்சயம் : அற்புதங்கள் செய்யும் வல்லமை, அந்நிய பாஷைகளில் பேசுவது, இன்னும் இது போன்ற விசேஷ வரங்களை அவர்கள் பெற்றிருக்கவில்லை! மாறாக, அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றிருந்தனர் என்று தான் அதற்கு அர்த்தம். அதை எப்போது அவர்கள் பெற்றனர்? அப். 2 : 38ம் வசனத்தின்படி, தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்த போது, ஒவ்வொருவனும் தனது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது அடையும் அதே அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைத்தான் அவர்கள் பெற்றனர். வேறு விதமாகச் சொன்னால், கர்த்தருக்கு ஒருவன் இன்று கீழ்ப்படியும் போது பெற்றுக் கொள்ளும் அதே அளவிலான ஆவிதான் அது.

போதிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட பின்பும், ஏன் தொடர்ந்து போதித்தார்கள் என விளக்கம் கேட்பதற்காக, எருசலேமில் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் கொண்டு வரப்பட்ட போது, பிரதான ஆசாரியனுக்கும் அவனோடுள்ள பிறருக்கும் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். “ . . . மனிதர்களுக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும் புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை

அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்". (அப்.5 : 29 - 32). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என கூறும் அதே வேளையில், நிச்சயமாக, பரிசுத்த ஆவியின் வரங்களும், அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. கீழ்ப்படிவோருக்கு பரிசுத்த ஆவியானவர் தாமே கொடுக்கப்படுகிறார் என்பதை நீங்கள் கவனிக்கமுடியும். அவ்வாறு, கீழ்ப்படிகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தாமே கொடுக்கப்பட்டால், கிறிஸ்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் தாமே வாசம் செய்ய வேண்டும்.

தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதினார் : "அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்தி சொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து : இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே

இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனிதரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான். சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே". (I தெசலோ. 4 : 1-9). இப்பகுதியில், தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களாகவும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் இருப்பதால், பவுல் அவர்களை உற்சாகப்படுத்தி, பரிசுத்தமாகவும, ஒழுங்காகவும், பரஸ்பர அன்புடனும், மரியாதையுடனும் இருக்க வேண்டுமெனக் கூறுகிறார். இந்த சந்தர்ப்பத்தில், பவுல் கிறிஸ்தவர்களிடம் பொதுவாகப் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி பேசுவதின் மூலம் அவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர் எனக் காட்டுகிறார். அது பரிசுத்த ஆவியின் வரங்கள் அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான ஆவி. இதை நான் மீண்டும் மீண்டுமாகக் குறிப்பிட்டுக் கொண்டேயிருப்பதின் காரணம் என்னவென்றால், அப்போஸ்தலர்களைப் போல அற்புதங்கள் செய்யும் வல்லமையுடன் ஆவியைப் பெறுவதற்கும், அவர்கள் கைகளை வைத்துக் கொடுத்ததற்கும், அற்புதங்கள் செய்ய இயலாத அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் ஒரு தெளிவான வித்தியாசம் இருப்பதைக் காட்டவே.

கொரிந்து கிறிஸ்தவர்களிடம் பவுல் கூறினார் : "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்". (I கொரி. 3: 16,17).

மீண்டுமாக, அவர் கூறும்போது, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்", (1 கொரி. 6 : 19, 20), என்றார். இப்போது, நிச்சயமாக, கொரிந்து பட்டணத்தார் கைகளை வைத்து பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை; எனவே அவர்கள் அற்புதங்களைச் செய்ய முடியவில்லை. வேறு என்ன முடிவுக்கு நாம் வர இயலும்? பின்னர், அவர் யாரிடம் பேசிக் கொண்டிருந்தார்? அங்குள்ள கிறிஸ்தவர்களிடையே பொதுவாக பேசிக் கொண்டிருந்தார் என்றாலும் பரிசுத்த ஆவி அவர்களிடம் வாசம் செய்வதாக அவர் கூறினார். எந்த அர்த்தத்தில் அவ்வாறு சொன்னார்? அற்புதங்கள் செய்ய இயலாத பரிசுத்த ஆவியின் வரம் என்ற அர்த்தத்தில் தானே கூறினார்.

ஒரு கிறிஸ்தவனிடம் பரிசுத்த ஆவி அற்புதங்கள் செய்ய முடியாத அளவில் எவ்வாறு வாசம் செய்ய முடியும்? எவ்வாறு கிறிஸ்து நம்மில் வாசம் செய்கிறாரோ அப்படித்தான் (கொலோ. 1:27); தேவன் வாசம் செய்வதைப் போலவும் (எபே. 4 : 6); நிச்சயமாக, நாம் கிறிஸ்துவிலும் தேவனிலும் வாசம் செய்வது போலவும் தான். (ரோமர் 6 : 3, 4 : கலா. 3 : 26, 27).

இந்தப் பாடத்தில் நான் வலியுறுத்திக் குறிப்பிடுவது என்னவென்றால், எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகின்றனர். ஆனால் அது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான வரங்கள் வேறுவிதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் வரமானது, கிறிஸ்தவனில் தங்கி வாசம் செய்யும் ஆவி. அற்புதங்களைச் செய்யும் எந்த வல்லமையையும் அது அவனுக்குத் தருவதில்லை. அல்லது புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆவியின் வார்த்தைக்கு விரோதமாக அவனை வழி நடத்துவதில்லை.

# பரிசுத்த ஆவியின் வரங்கள் அற்புதங்களா?

பரிசுத்த ஆவியானவரோடு சம்பந்தப்பட்ட எந்த ஒரு காரியமாக இருப்பினும், அது அற்புதமாக இருக்க வேண்டும் என பல மக்கள் கருதுகின்றனர். உதாரணமாக, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தருகிறது என அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் நினைப்பது சரியே. அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். என்றபோதிலும், நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், குறிப்பிட்ட இந்த அளவில் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் இவர்கள் மட்டுமே. இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு மனிதனும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் மாத்திரமே அந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் மடிந்து போய் பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வாழும் எவரும் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெறவில்லை. ஏனெனில் அப்போஸ்தலர்கள் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யக்கூடிய அளவிலான பரிசுத்த ஆவியை தங்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலர்கள் அனைவரும் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், யார் பேரிலும் கைகளை வைத்து பரிசுத்த ஆவியைக் கொடுக்க அவர்கள் இன்று இல்லை.

ஆனால் அப்போஸ்தலருடைய நடபடி 2 : 38ம் வசனத்தில் கூறப்படும் பரிசுத்த ஆவியின் வரங்களும், பரிசுத்த ஆவியின் அற்புத அளவிலானது என பலர் இன்று நம்புகின்றனர். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்று கொண்டதைப் போன்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையே. ஆனால் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று பேதுரு குறிப்பிட்டதுமன்றி, அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட அதேபோன்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று தான் அவர் குறிப்பிட்டார். "ஆதலால் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்" (அப். 11:17). கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்ததின் மூலம், புறஜாதியாரும் யூதர்களைப் போலவே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர் என்பதை கர்த்தர் அவர்களுக்குக் கற்பித்ததாக பேதுரு காட்டுகிறார்.

ஆம், பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு ஒரு வரம் தான். அதே போல, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியும் ஒரு வரமே. ஆனால் அப். 2 : 38ல் குறிப்பிட்டுள்ள பரிசுத்த ஆவியின் வரம் வேறுவித வரமாகும்; அது இந்த சந்தர்ப்பத்தில், அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரம். ஆனால் இதை அறிவது எப்படி? பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் என அப். 2 : 38ல் குறிப்பிடப்படுபவர்கள், அந்த ஆவியின் வல்லமையால் அற்புதங்களைச் செய்ய முடிந்ததா இல்லையா என்றோ, அல்லது அந்நியபாஷைகளில் பேச முடிந்ததா இல்லையா என்றோ அந்த வசனப் பகுதியை நாம் படித்துக் கூறமுடியும்.

நினைவிருக்கட்டும், நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரத்திற்கு வரும்போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். எனவே பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தனர். இப்போது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சீடர்களின் மேல் கைகளை வைத்தனர். பரிசுத்த ஆவியின் வரமானது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகவும் அதைப் பெற்றுக் கொண்டவர்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அடையக்கூடியவர்களாகவும் இருந்தால், பின்னர் ஏன் அந்தச் சமயத்திலே ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏன் அவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் கைவைக்க வேண்டியதாயிற்று? சீடர்களிலிருந்து ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அப்போஸ்தலர்களின் நிபந்தனையையும், அவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்க வேண்டுமென்பது, குறிப்பிட்ட தேவைகளில் ஒன்று என்பதையும் கூட தயவு செய்து கவனியுங்கள். ஆனால், பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பவர்கள் அற்புதங்களைச் செய்யக் கூடுமானால், பின்னர் அவர்கள் மேல் கை வைக்க வேண்டிய அவசியம் அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் ஒருவர் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தால், அவர் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கிறார் என அர்த்தம் அல்ல என்பது தெளிவு. அப்படியானால் பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள் அல்லது கர்த்தருக்கு யார் கீழ்ப்படிந்தார்களோ அவர்களுக்கு மாத்திரம் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் என்று பொருள்.

தேவனுக்குக் கீழ்ப்படிபவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகின்றனர் என்றும், தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்றும், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்றும் வேதாகமத்தில் பல

வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. (அப். 5:22; I கொரி. 3:16,17; I கொரி. 6 : 19, 20; கலா. 3 :27; எபே. 4 : 6). இப்போது, மேற்சொன்ன எதுவும் நம்ப முடியாததல்ல. அதாவது அற்புத தன்மை கொண்டதல்ல. ஒருவன் எப்படி மீண்டும் பிறக்கிறான்? கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களை எப்படிக் கழுவுகிறது? தேவகிருபை ஒருவனை எப்படி இரட்சிக்கிறது? விசுவாசம் எப்படி நமது இருதயங்களில் கிரியை செய்கிறது? இவை அனைத்திலும் அற்புதங்களைக் காணும் சிலர் இருக்கின்றனர். ஒரு குழந்தை பிறப்பதையும், ஒரு விபத்திலிருந்து காப்பாற்றப்படுவதையும், ஒரு அறுவை சிகிச்சை அல்லது ஒரு வியாதியிலிருந்து விடுபட்டு சுகமடைவதையும் கூட அவர்கள் அற்புதம் என்பர். ஆனால், மேற்சொன்னவைகள் சரீர சம்பந்தமுள்ளதாக இருந்தாலும், ஆவிக்குரியதாக இருந்தாலும் எந்த அற்புதமும் அதில் கிடையாது. உண்மையென்னவென்றால், சரீர, ஆவி சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் தேவன் அற்புதங்களின் வழியாகவே ஆரம்பித்தார். பின்னர் அவ்வித அற்புதச் செயல்களின் இடத்தை, சரீரம் மற்றும் ஆவி சம்பந்தமான சட்டங்களால் மாற்றினார். எனவே, குழந்தைகள் அற்புதத்தால் பிறப்பதில்லை, மாறாக குழந்தைப் பிறப்பின் இயற்கைச் சட்டத்தின்படி அவை பிறக்கின்றன. இதுவே பிற அனைத்து உலக காரியங்களிலும் நடந்து வருவதே உண்மை. ஒவ்வொரு காரியத்தையும் ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் உள்ளன. ஆவிக்குரிய காரியங்களிலும் இதுவே உண்மை. கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார்; அது போலவே பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற அப்போஸ்தலர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களும் செய்தனர். ஆனால் பின்னர் மனிதனுடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த தேவனுடைய வசனம் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் தொடர்ந்து சகல ஆவிக்குரிய காரியங்களும் எழுதப்பட்ட வசனத்தின்படியே ஒரே சீராக நடைபெற்று வருகின்றன.

உலகில் இப்பொழுது நடைபெற்று வரும் சரீர நிலைகளுக்கான அநேக காரியங்களை நாம் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறோம். அப்படிப்பட்டவைகள் கூட அற்புதமான

வைகள் தான் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அவைகள் அற்புதங்களல்ல. நடைபெற்று வரும் சகல காரியங்களையும் நாம் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பதால் மட்டும் அவை அற்புதங்கள் ஆகிவிடுவதில்லை. மாறாக, அவை அனைத்தும் தேவன் அளித்த சரீர சம்பந்தமான சட்டங்களின்படி நடைபெறுகின்றன. ஆவிக்குரிய நிலைகளிலும், நடைபெறும் பலவற்றை நாம் முற்றிலுமாக புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். அதனால், அவை அற்புதமாக நடைபெறுகின்றன என சிலர் கூற விரும்புகின்றனர். இன்னும் சிலரோ இதற்கு நேர் எதிர்முனைக்குச் சென்று, ஆவிக்கும் மனிதனுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்கிறார்கள். வேறுவிதமாகக் கூறினால், கிறிஸ்தவனுக்குள் ஆவி உண்மையிலே வாசம் செய்வதையும் அல்லது கிறிஸ்தவனுக்குள் தேவனும் கிறிஸ்துவும் வாசம் செய்வதை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். ஜெபத்தையும் தேவனுடைய வழி நடத்துதலையும் அர்த்தமற்ற செயல்கள் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள் தவறு செய்கின்றனர். எல்லா காரியங்களுமே (இயற்கைக்கு விரோதமான) அற்புதங்களாக நடைபெறுகின்றன என சிலர் போதித்து வருவதின் எதிர் விளைவாகத் தான் தேவனுடைய வழி நடத்துதலை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

பரிசுத்த ஆவியின் வரம் அற்புதமல்ல என்னும் அதே வேளையில், தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார். எனவே, கிறிஸ்தவன் தனது இரட்சிப்பின் அடையாளமாக ஆவியைப் பெற்றுக் கொள்ளுகிறான். (II கொரி. 1 : 22; II கொரி. 5 : 5; எபே.1:14). ஆகவே, கர்த்தரில் நாம் இருக்கிறோம் என்றும், கர்த்தர் நம்மில் இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். தேவன் ஜெபங்களைக் கேட்கிறார் என்றும், அவைகளுக்குப் பதிலளிக்கிறார் என்றும், கர்த்தர் நம்மை வழி நடத்துகிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

அதே சமயத்தில், ஆவி, ஜெபம், தேவனுடைய வழிநடத்துதல், மற்றும் பரிசுத்தமும் தெய்வீகமான சகலமும் இன்று, புதிய ஏற்பாட்டில் கண்டபடி, ஆவியின் வசனத்திற்கு அல்லது தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றபடி ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பதை நாம் விசுவாசிக்கிறோம். வேத வசனங்களில் எழுதப்பட்டுள்ளதற்கு மாறாக எதுவும் நம்முடைய வாழ்க்கையில் நடைபெறுவதில்லை. அவருடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டதற்கு ஏற்ப, ஆவி நம்மில் வாழ்கிறது; அதன் மூலம் தேவன் கிரியை செய்கிறார்.

# ஆவிக்குரிய வரங்கள்

நாம் ஏற்கனவே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பற்றியும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பற்றியும் பார்த்தோம். அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரங்கள் பற்றியும் நாம் கூறியிருக்கிறோம். ஆவிக்குரிய வரங்களைப் பற்றி விவாதிக்கும் போது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பற்றியும், அத்தகைய அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியின் வழியாக வந்த வித்தியாசப்பட்ட வரங்களைப் பற்றியும், அதாவது, அற்புத வரங்கள் பற்றியும், நாம் படித்துக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில், அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் பேரில் கைகளை வைத்தார்களோ அவர்களும் மட்டுமே அற்புதங்கள் செய்யும் இயல்பான ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருந்தனர். மேலும், அப்போஸ்தலர்கள் மாத்திரமே அற்புத வரங்களைப் பிறருக்கு அளிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தனர். அப்போஸ் தலனாகிய பவுல் அவருடைய ரோமச் சகோதரர்களுக்கு "நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கும் . . . . . . . . உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிற படியினாலே" (ரோமர் 1 : 10-11) என எழுதினர். வேறு விதமாகச் சொன்னால், அவர்களில் சிலர் மேல் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளிக்கும் சந்தர்ப்பத்திற்காக அவர் அவர்களைச் சந்திக்க விரும்பினார். அங்குள்ள ஊழியம் பலப்படவும் கிறிஸ்து எங்கும் அறிவிக்கப்படவும் அவர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு கூறினார் : "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் அஞ்ஞானிகளா யிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்

களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்." (1 கொரி 12 : 1 - 11).

மேற்சொன்ன வசனங்களில், ஆவியானவரின் அற்புத வரங்களைப் பற்றி பவுல் சொல்லிக் கொண்டிருப்பதை நாம் தெளிவாகக் காணமுடிகிறது. அற்புத வரங்களாகிய ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், அற்புதங்கள், தீர்க்கதரிசனம், ஆவிகளை பகுத்துணர்தல் அந்நிய பாஷைகள், அந்நிய பாஷைகளுக்கு வியாக்கியானம் பண்ணுதல் ஆகியவை பற்றி அவர் பேசுகிறார்.

இந்த வரங்களைப் பெற்றுக் கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும், எல்லா வரங்களும் ஒவ்வொருவருக்கும்

அளிக்கப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். வெவ்வேறு வரங்கள் வெவ்வேறு மனிதர்களுக்குத் தரப்பட்டன. ஒருவேளை சில குறிப்பிட்ட வரத்திற்கு, சிலர் பிறரைவிட அதிகத் தகுதியுள்ளவர்களாக இருந்தனர்.

ஒவ்வொரு வரமும் ஒவ்வொரு காரணத்திற்குப் பயன்பட்டது. பவுல் கூறினார் : "அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள். ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்திலே பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனிதருக்குப் பக்தி விருத்தியும், புத்தியும் ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்க தரிசனம் சொல்லு கிறவனோ சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான். நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்க தரிசனம் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்க தரிசனம் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்". (I கொரி 14 : 1 - 5) தீர்க்கதரிசன வரமானது சகல ஆவிக்குரிய வரங்களிலும் மேலானது என இங்கு பவுல் காட்டுகிறார். ஏனெனில், இதன் மூலமாக தேவனுடைய விருப்பம் வெளியிடப்படுகிறது. அத்தகைய தேவனுடைய விருப்பத்தை அல்லது அவர் கற்பித்ததை மக்களுக்கு வெளிப்படுத்துவதில் மட்டுமே அந்நிய பாஷை முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு குறிப்பிட்ட ஆவிக்குரிய வரத்தை மட்டுமே பெற்றவன் இருக்கும் போது, மற்றொருவன் எவ்வித ஆவிக்குரிய வரத்தையும்

பெறாதவனாக இருந்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக, இங்கே படிக்கிறோம் :

"ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக் கொள்ளும் போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்கள் அல்லவா? எல்லாரும் தீர்க்க தரிசனம் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவன் ஒருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகங்குப்புறவிழுந்து, தேவனைப் பணிந்து கொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான். நீங்கள் கூடி வந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது. யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாவது வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக் கடவன். எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்க தரிசனம் சொல்லலாம். தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்

கிறதே. தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லா வற்றிலேயும் அப்படியே இருக்கிறது. (I கொரி. 14 : 23 - 33).

இப்போது, இவை அனைத்திலும், வித்தியாசமான வரங்களைப் பெற்ற பல சீடர்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், அவர்களும் பிறரும் பயன் அடையும் விதத்தில் அவற்றை எப்படி உபயோகிப்பது என்பது பற்றியும் பவுல் கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால், விசுவாசிகள் கூடியிருக்கும் போது அவர்களில் ஒருவன் அந்நிய பாஷையில் பேசும் போது, அதை மொழி பெயர்த்துச் சொல்லும் வரத்தைப் பெற்றவன் அங்கு ஒருவனும் இல்லையென்றால், அவன் பேசாமலிருப்பது நலம். ஆவிக்குரிய வரங்கள் கற்பிக்கவும், உபதேசிக்கவும், உபயோகிக்கப்பட வேண்டுமே தவிர, குழப்பத்தை விளைவிக்க அல்ல.

இந்த வரங்கள் அனைத்தும் அளிக்கப்பட்ட காரணம் வசனத்தை உறுதிபடுத்தவும், விசுவாசிகளை உருவாக்கவும், சபையானது பக்தி விருத்தி அடையவும் தான். இந்த சமயத்தில், புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்படாமல் இருந்தது; மக்களுக்கு புதிய ஏற்பாடு அளிக்கப்படவில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, புதிய ஏற்பாடு பூரணமாகக் கிடைக்கும் வரை, இத்தகைய வரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. இயேசு செய்த பல அற்புதங்கள் கூட வசனத்தை உறுதிப்படுத்தச் செய்யப்பட்டவைகளே ஆகும். நாம் வேதாகமத்தில் படிக்கிறோம் : "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." (யோவான் 20:30, 31) கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப் பின், அவர் பரலோகத்தி லிருக்கும் தமது பிதாவிடம் திரும்பிச் சென்று விட்டிருந்த

வேளையில், அப்போஸ்தலர்களைப் பற்றி வசனம் இவ்வாறாகக் கூறுகிறது : "அவர்கள் புறப்பட்டு போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற்கு 16 : 20).

எபிரேய எழுத்தர் கூறினார் : "ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாக அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்துமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?" (எபி. 2 : 1-4). இறுதியாக, பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது." என்று குறிப்பிட்டார். (எபே. 4 : 7). தொடர்ந்து ஆவிக்குரிய வரங்களைப் பற்றி அவர் கூறும் போது, "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச்

சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி குழந்தைகளாயிராமல், மனிதருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாய் இருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்ச் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்கு கிறது" (எபே. 4 : 11 - 16) என்கிறார்.

எனவே, ஆவிக்குரிய வரங்கள் தற்காலிகமானது, புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கிடைப்பதற்கு முன்னர், சபையானது வளர்ச்சியடையும்படியாகவும், சுவிசேஷம் எல்லா இடங்களுக்கும் செல்லும்படியாக உதவவும் அவைகள் கொடுக்கப்பட்டன. புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கிடைத்ததும் இந்த வரங்கள் நின்று போயின.

# கெட்ட ஆவிகளைத் துரத்துதல்

பேய், பிசாசு அல்லது கெட்ட ஆவிகள் மனிதனைப் பீடிக்கின்றன என நம்பும் பலர் இன்றைய உலகில் உள்ளனர். இந்த கெட்ட ஆவிகள் மக்களின் அனுமதியின்றியே அவர்களுக்குள் நுழைந்து, அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளுவதாகவும் இவர்கள் நம்புகின்றனர். இறுதியாக, இந்த கெட்ட ஆவிகளைத் துரத்த, கிறிஸ்துவில் விசுவாசியான ஒருவரால் மட்டுமே முடியும் என அவர்கள் மேலும் நம்புகின்றனர். வேதாகமம் இவ்வாறு கற்பிக்கிறதா?

கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் காலங்களிலும் பிசாசு பிடித்துக் கொள்ளும் நிகழ்ச்சிகள் பல நடந்து வந்தன என நாம் அறிவோம். பல வேளைகளில், கிறிஸ்துவே கெட்ட ஆவிகளைத் துரத்தினார். உதாரணமாக, இப்படிப்பட்ட ஒரு ஆவியை இயேசு துரத்துவதைப் பற்றிய செய்தியை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம். "பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான்; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவை தூரத்தில் கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்து கொண்டு இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப் படுத்ாதபடிக்குத் தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த

சத்தமிட்டுச் சொன்னான். ஏனெனில் அவர் அவனை நோக்கி : அசுத்த ஆவியே, இந்த மனிதனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லியிருந்தார். அப்பொழுது அவர் அவனை நோக்கி உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன் நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி, தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி : பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக் குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக் கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப் புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும் படி ஜனங்கள் புறப்பட்டு; இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள். பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள். அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொள்ளத் தொடங்கினார்கள். அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடே கூட இருக்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக் கொண்டான். இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல், நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி யென்று சொன்னார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில்

பிரசித்தம் பண்ணத் தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள்". (மாற்கு 5 : 1 - 20).

இயேசு, கெட்ட ஆவிகளைத் துரத்திய பல சம்பவங்களில் இதுவும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருந்த படியால் அவர்களும் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையைப் பெற்றிருந்தனர். (மாற்கு 16 : 17). அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை யாருக்கெல்லாம் அளித்தார்களோ அவர்களும் கெட்ட ஆவிகளைத் துரத்தக் கூடியவர்களாக இருந்தனர். உதாரணமாக, சமாரிய மக்களுக்கு போதிக்க பிலிப்பு சென்ற போது, "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால், சொல்லப்பட்டவைகளை - ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள்" என வசனம் கூறுகிறது. (அப். 8:6,7).

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலத்தில், தேவன் பிசாசிற்கு கொஞ்சம் தனிப்பட்ட சுதந்திரம் அளித்திருந்தார் என்பதை நாம் காண முடிகிறது. கிறிஸ்து அல்லது அப்போஸ்தலர்கள் அல்லது அவர்கள் யார் மேல் கைகளை வைத்தனரோ அவர்கள் வந்து பிசாசை விரட்டும் வரை சில மக்களைப் பிடிக்க தேவன் அவைகளுக்கு அனுமதியளித்திருந்தார். கர்த்தர் சாத்தான் பேரில் அதிகாரமுடையவராக இருந்தார் என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால் பெயெல்செபூலினாலே கிறிஸ்து சாத்தானை விரட்டுவதாக சிலர் அவரைக் குற்றஞ் சாட்டினர். வசனம் கூறுகிறது : "அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு தாவீதின் குமாரன் இவர் தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக் கேட்டு இவன் பிசாசுகளின்

தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப் போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினா னேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." (மத்தேயு 12 : 22 - 30).

உண்மையென்னவென்றால், தேவனுடைய வல்லமையால் இயேசு பிசாசுகளைத் துரத்தினார்; அதுபோலவே அப்போஸ் தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் பிசாசுகளைத் துரத்தினர். சாத்தானைக் கொண்டு அவர்கள் துரத்துவதாக இருந்தால், நிச்சயமாக அவர்கள் சாத்தானை துரத்தியிருக்கமாட்டார்கள். நமது காலத்திற்கு நாம் வரும் இந்தச் சமயத்தில் இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரணமடைந்ததும் அற்புதங்களைச் செய்யும் காலம் முடிவுற்றுப் போனதால், அதன் பின்னராக பிசாசு மனிதனைப் பீடிக்கவும், அவர்களுடைய விருப்பத்திற்கு

மாறாக அவர்களைக் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கப்படவில்லை. அதாவது, கிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்ததைப் போல, மக்களில் பிசாசு, பேய் கெட்ட ஆவிகள் இன்று வசிப்பதில்லை. இன்றைக்கும் ஜனங்களை கெட்ட ஆவிகள் பிடிக்கிறது என்று சொல்லுவோரும், பிசாசுகளைத் துரத்தும் வல்லமை தங்களுக்கு உண்டு என்று கூறுவோரும் உள்ளனர் ஆனால் யார் இந்த மக்கள்? வேதாகமத்தில் சொல்லப்படாத மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். கர்த்தருடைய சபையில் அங்கத்தினராகக் கூட இல்லாத போதகர்கள் இவர்கள். கர்த்தரின் நாமத்தை இவர்கள் தரித்திருப்பதில்லை வேதாகமத்திற்கு மாறான காரியங்களை இவர்கள் போதித்து வருகின்றனர். வேறுவிதமாகச் சொன்னால், அவர்களுடைய சகல செயல்பாடுகளும் அவர்கள் சாத்தானைச் சார்ந்தவர்கள் என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. இயேசு கூறியதைப் போல, சாத்தானை சாத்தான் எவ்வாறு துரத்துவான்?

இல்லை, கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலர்கள் காலத்திலும் இருந்ததைப் போல இன்று மக்களை பிசாசு பிடிப்பதில்லை. பெரும்பாலான மக்களிடத்தில் பிசாசு குடியிருக்கிறான்; ஆனால் அவர்களுடைய அனுமதியில்லாமல் அவர்களுக்குள் அவன் வருவதில்லை. அவனுக்கு வரவேற்பு அளித்து, அவனைத் தங்க அனுமதித்து, துன்மார்க்கமான காரியங்களைச் செய்ய அவன் செல்வாக்கை நாடுவோரிடம் அவன் வசிக்கிறான். மேலுமாக, எப்போது அவர்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தேர்ந்தெடுக்கின்றனரோ அப்போது பிசாசை அவர்களாலே உதறித் தள்ளிவிட முடியும்.

தேவனுடைய வார்த்தையை அறியாதவர்களும், கள்ளப் போதகர்களால் ஏமாற்றப்பட்டவர்களும், மக்களின் விருப்பத்திற்கு மாறாக பிசாசு அவர்களைப் பிடிக்கக் கூடும் என நம்ப வைக்கப்படுகின்றனர். சில சமயங்களில், சில நோயாளிகளும், உடல் ஊனமுற்றோரும், அல்லது மன நோயாளிகளும், கெட்ட

ஆவியால் பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது உண்மை அல்ல. மக்களின் அறியாமை, மூடப்பழக்கம் ஆகியவற்றை மூலதனமாக்கி, அவர்களை பிசாசுகள் பிடித்துள்ளன என நம்ப வைத்து, அவற்றைத் துரத்த ஜெபம் செய்ய வேண்டுமானால் ஒரு கணிசமான 'காணிக்கை' தேவை என்பதாகச் சொல்லி அப்பாவி மக்களிடம் பணத்தைக் கறந்து விடும் கள்ளப் போதகர்களும், மதத் தலைவர்களும் இன்று பரவலாக உலா வருகின்றனர். குறிப்பாக, உலகின் எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நிறைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

நாம் பிசாசிற்கும், அவனுடைய சகல தீய வழிகளுக்கும் சக்திக்கும் அஞ்ச வேண்டும். ஆனால், அவனை நாமாக அனுமதித்தால் ஒழிய நமது வாழ்வில் அவனாக வர இயலாது. மீண்டுமாக, கர்த்தரை விசுவாசித்து நமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, நமது பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறும் போது, நாம் அவனை விட்டு விட முடியும். அவ்வேளையில் சாத்தான் நம்மை விட்டு விலகிப் போகிறான். அந்த வெற்றிடத்தில், நமது வாழ்வின் கர்த்தராக கிறிஸ்துவை நாம் ஏற்றி வைக்கிறோம்.

# அற்புத சுகமளித்தல்

கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் அற்புதங்கள் செய்யப்பட்டு வருகின்றன என கிறிஸ்துவை விசுவாசிக்கும் பெரும்பாலான மக்களிடையே வெகு சாதாரணமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு போதிப்பவர்களும், முன்னோடியாக நின்று இச்செய்கைகளை நடத்துவோரும் பொதுவாக மிகவும் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், கிறிஸ்து செய்த சகல அற்புதங்களையும், அற்புதங்களைப் பற்றிச் சொல்லப் படும் சகல வசனங்களையும் பட்டியலிட்டுக் காட்டுபவர்களாகவும் உள்ளனர். "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகயிருக்கிறார்" என்றும் எபிரேயர் 13:8-ம் வசனத்தையும் அவர்கள் குறிப்பிடத் தவறுவதில்லை. அந்த வசனம் உண்மைதான். ஆனால் இன்று இயேசு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று அது சொல்லவில்லை. முதல் ஆணும் பெண்ணும் ஒரு அற்புதத்தால் உண்டாக்கப்பட்டனர். ஆதியாகமம் 1 : 26, 27 வசனங்களின்படி, அந்த சிருஷ்டிப்பிற்கு கிறிஸ்துவும் ஒரு காரணமாக இருந்தார். ஆனால் இன்று அப்படிச் செய்யவில்லையே? எனவே, ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, நமக்குத் தேவையானதை அது கற்பிக்க வேண்டுமென்ற நமது விருப்பத்தின் காரணமாக, அது அவ்வாறு கற்பிக்கிறது எனக் கூற முயற்சிப்பது சரியல்ல. மாறாக, அற்புதங்களைச் செய்தது யார்? அவற்றைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இன்றும் அற்புதங்கள் நடக்க வேண்டுமென்பது கர்த்தரின் எண்ணமா? - இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் நாம் விடை காண வேண்டும்.

மேலும், இன்றைய நாட்களில், அற்புதங்கள் நடைபெறுகின்றன எனப்போதிப்போர், உணர்ச்சிப் பூர்வமான வேண்டுகோள் விடுக்கின்றனர். அதாவது, வியாதியஸ்தர்கள், உடல் ஊனமுற்றோர், மரணப் படுக்கையிலிருப்போர் இன்றும் இப்படிப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட

அறற்புதங்கள் தான் ஒரே வழி ஆகவே, அதை நம்ப வேண்டுமென்று. வேண்டுகோள் விடுகின்றனர். பல போதகர்கள் இது போன்ற முறையைப் பின்பற்றி புகழும் பணமும் சேர்த்திருக்கின்றனர். நோயாளிகளும், ஊனமுற்றோரும், துன்பப்படுவோரும் இயேசுவை மட்டுமே நம்பினால் போதும், அவர்கள் வாழ்விலும் அற்புதங்கள் நடைபெறும் என்று, அநேகமாக, அவர்களின் பிரசங்கம் முழுவதும் இயேசு செய்த அற்புதங்களைப் பற்றியே தான் இருக்கிறது. என்றபோதிலும், மருத்துவமனைகள் வியாதிக்காரர்களால் நிரம்பி வழிகின்றன; அறுவை சிகிச்சைகள் தொடருகின்றன; மனிதனுடைய நோய் நீக்கும் மருந்துகள் உலகு முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விற்றுக் கொண்டுதான் இருக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களும் தொடர்ந்து மரணமடைந்து கொண்டுதான் இருக்கின்றனர். இயேசுவின் காலத்தைப் போல இன்றும் அற்புதங்கள் தொடர்ந்தால், அடிப்படையில் இவை அனைத்தும் மா்றியிருக்க வேண்டுமே!

ஆனால், இயேசு அற்புதங்களைச் செய்த போதிலும், இயேசுவின் நாட்களில் இருந்த வியாதிகள், நோய்கள், மரணங்கள், அனைத்தும் மறைந்து போய் விடவில்லையே? ஆனால் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவர் இந்த வியாதிகளை எல்லாம் சுகப்படுத்த இங்கு வரவில்லை. எல்லா உடல் ஊனமுற்றவர்களை சீராக்கவும், எல்லா குருடர்களுக்குப் பார்வையளிக்கவும், சகல செவிடர்களுக்கும் காது கேட்கவும், மரித்தோர் அனைவரையும் உயிரோடு எழுப்பவும் அவர் வரவில்லை. அவர் அந்தக் காரியங்களுக்காக வந்திருப்பாரேயானால், அவை அனைத்தையும் செய்திருப்பார். ஆனால் அவர் இழந்ததை தேடவும் இரட்சிக்கவும் தான் வந்தார். (லூக்கா 19 : 10) தாம் தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும், உண்மையில் தாம் தேவனுடைய குமாரன் என்றும் மக்களை நம்பச் செய்யவே அவர் அற்புதங்களைச் செய்தாரே ஒழிய, மக்களை சுகப்படுத்துவதற்காக மட்டும் அல்ல. அவர் செய்த

அற்புதங்களைக் கண்ட மக்கள் அவரை விசுவாசித்தார்கள் என்பது மீண்டும், மீண்டுமாக வலியுறுத்தப்பட்டிருப்பதை, நீங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷ நூல்களை புதிய ஏற்பாட்டில் நீங்கள் படித்தால் அறிய முடியும். உதாரணமாக, "பஸ்கா பண்டிகையிலே எருசலேமிலிருக்கையில், செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" என யோவான் 2 : 23ம் வசனத்தில் படிக்கிறோம். அடுத்து யோவான் எழுதும் போது, "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20 : 30, 31) என்றார். எனவே விசுவாசிகளை உண்டாக்கவே இயேசு அற்புதங்களைச் செய்தார். சுகமடைந்தவர்கள் சரீரத்தில் பயனடைந்தார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர் அவர்களை சுகப்படுத்த வேண்டிய உண்மையான காரணம் அதுவல்ல. அந்த அற்புதங்களைக் கண்ட சாட்சிகளிலிருந்து விசுவாசிகளை உண்டாக்குவதே உண்மை யான காரணமாகும். சுகமாக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே இயேசு வியாதிக்காரர்களை சுகப்படுத்தினார் என்பது போன்ற அபிப்பிராயத்தை இன்றைய விசுவாச சுகமளிப்போர் ஏற்படுத்துகின்றனர். அவர்களின் கூற்றுப்படி பார்த்தால், இன்று யாருமே வியாதிக்காரனாக இருக்கக்கூடாது; அல்லது யாரும் மரிக்கக்கூடாது. அப்படியே மரித்துப் போனாலும் அவர்களை எழுப்பி விட முடியும். ஆனால் வேடிக்கை என்னவென்றால், அவர்களின் இந்த கூற்றுக்களை எல்லாம் மீறி, காரியங்கள் எப்போதும் போல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அற்புத சுகமளிப்பவர்கள் தவற விட்டு விட்ட சில அருமையான சந்தர்ப்பங்களை நான் உங்களுக்கு காட்டமுடியும். உதாரணமாக, திருமதி இந்திரா காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட போது, இந்த சுகமளிப்பவர்களில் எவராவது அங்கு

சென்று அவரை உயிரோடு எழுப்பியிருக்கலாமே? அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஜான் F. கென்னடி அவர்கள் சுடப்பட்டபோது ஓரல் ராபர்ட் போன்றவர்கள் அங்கு சென்று ஜெபம் செய்து அவரை ஏன் எழுப்பவில்லை? சந்தேகமின்றி, அநேக சந்தர்ப்பங்களை இவர்கள் தவற விட்டிருக்கின்றனர். ஆனால் இந்த உலகத்தலைவர்களைப் பற்றி ஏன் குறிப்பிடுகிறோம்? ஏனெனில், இவர்களை எழுப்பியிருந்தால், அற்புதங்களுக்கு சாதகமாகக் கிடைத்திருக்கக் கூடிய பெரிய விளம்பரத்தை நினைத்துப் பாருங்கள். இப்படிப்பட்ட அற்புதங்களால் உலகின் பல பகுதியிலுமுள்ள மக்களும் கிறிஸ்துவை விசுவாசித்திருப்பர். ஆனால் அவர்கள் இந்தத் தலைவர்களை உயிரோடு எழுப்ப ஏன் முயற்சிக்கவில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால், அப்படிச் செய்ய அவர்களால் முடியாது என்பதே காரணம். அவ்வாறு அவர்கள் செய்ய வேண்டுமென்பது கர்த்தரின் விருப்பமும் அல்ல. ஆனால் சந்தேகமின்றி, சகலவிதமான நொண்டிச் சாக்குகளையும் அவர்கள் சொல்லுவார்கள். தாங்கள் அற்புதங்களைச் செய்யவில்லை. கிறிஸ்துவே அவற்றைச் செய்கிறார் என்று கூறுவர். 'ஆம், கிறிஸ்து அவர்கள் மூலமாக கிரியை செய்வதாக அவர்கள் கூறுவர். கர்த்தரை அது சோதிப்பதாக இருக்கும் என்பர். கர்த்தர் அவர்கள் மூலமாக செயல்பட்டால், அது உலக முழுவதும் விசுவாசிகளை உண்டாக்க காரணமாக இருக்கும் என்றால், பின் அது கர்த்தரை சோதிப்பதாக ஏன் இருக்க வேண்டும்? மீண்டுமாக, இவர்களால் எந்த அற்புதத்தையும் செய்ய இயலாது. அது அவர்களுக்குத் தெரியும்.

முதுகு வலிகள், கை கால் வலிகள், தலை வலிகள், காய்ச்சல், இன்னும் இது போன்ற பல வியாதிகளை அவர்கள் சுகப்படுத்து வதாக சவால் விடுகின்றனர். ஆனால், உங்களுடைய மருத்துவரிடம் கேட்டால், இப்படிப்பட்ட பல வியாதிகள் உங்கள் மனத்தளவிலே இருப்பதாக அவர் கூறுவார். மேலும் இவ்வாறான சிறு நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், இவற்றை அற்புதமாக சுகப்படுத்துவதாக சவால் விடுபவர்களை தீவிரமாக நம்பும் போது

இந்நோய்கள் சுகமாகின்றன. ஆனால், கால், கண், கை இல்லாமல் அவதியுறும் ஊனமுற்ற சிலருக்கு அவற்றையெல்லாம் இவர்கள் கொடுக்கப் போவதைக் காண நாங்கள் காத்துக் கொண்டிருக் கிறோம்! இப்படிப்பட்ட அற்புதங்களை இவர்கள் செய்ய ஆரம்பித்தால், இன்னும் பல மக்கள் இவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதைக் கவனிக்கத் தொடங்குவர்.

ஆனால், அற்புதம் என்றால் என்ன? இயற்கையின் விதிக்கு மாறாகச் செய்யப்படும் ஒரு செயல் என இதற்கு சிறப்பானதொரு விளக்கம் உண்டு. அதாவது, ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டாக்குவது, அல்லது கை, கால் இழந்த மனிதனுக்கு புது கை அல்லது காலைக் கொடுப்பது மரித்தவனை உயிரோடு எழுப்புவது இன்னும், இது போன்றவற்றைச் செய்வது. நம்மால் புரிந்து கொள்ள முடியாததெல்லாம் அற்புதம் அல்ல. நாம் புரிந்து கொள்ள முடியாதவை ஏராளமாக உண்டு. அவைகளெல்லாம், இயற்கைச் சட்டத்தின்படியோ அல்லது சில திட்டத்தின் மூலமோ, அல்லது மனிதனின் முயற்சியால் ஆன கண்டுபிடிப்புகளின் படியோ நடந்து கொண்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். நாம் ஏற்கனவே குறிப்பிட்டப்படி, விசுவாசிகளை உண்டாக்கு வதற்காக அவர்கள் அப்படிச் செய்தனர். இது புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கிடைக்கப்படுவதற்கு முன்பு நடைபெற்றது. புதிய ஏற்பாடு பூரணமாக எழுதப்பட்டு மனிதருக்குக் கிடைத்தபின், அற்புத யுகம் முடிவுற்றது. நமது இருதயத்தில் விசுவாசத்தை உருவாக்க இனி நமக்கு அற்புதங்கள் தேவையில்லை. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என பவுல் கூறினார். (ரோமர் 10 : 17). கர்த்தர் தமது வசனத்தில் கூறியிருப்பதை நீங்கள் நம்பாவிட்டால், நீங்கள் ஒரு அற்புதத்தைக் கண்டாலும் நம்பப் போவதில்லை.

கர்த்தர் நேரிடையாகவோ அல்லது அவருடைய ஊழியர்களைக் கொண்டோ அற்புதங்களைச் செய்ய முடியாதென்பது பிரச்சினை அல்ல. அவர் தனது வல்லமையை இழந்து போகவுமில்லை. அவருடைய பிள்ளைகள் வல்லமையற்றவர்களாகவும் இல்லை. கர்த்தரும் அவரைப் பின்பற்றுவோரும் எப்பொழுதும் வல்லமையுள்ளவர்களாகவே உள்ளனர். ஆனால், கர்த்தர் ஒரு வித்தியாசமான வழியை, சொல்லப் போனால், ஒரு மேலான வழியை, தனது காரியத்தை நிறைவேற்ற தெரிந்தெடுத்துள்ளார். அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயமான செயல்கள் ஆகிய அனைத்தும் தற்காலிகமானதாக மட்டுமே இருந்தன; அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. இன்று நாம் அவற்றைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. ஏனெனில், இப்போது நாம் படிக்கவும், கற்றுக் கொள்ளவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் தேவனுடைய வார்த்தை நமக்குக் கிடைத்துள்ளது. நாம் அவ்வாறு செய்யும்போது கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார். இதற்கு மேல் நமக்கு வேறு என்ன வேண்டும்?

# அந்நிய பாஷைகளில் பேசுதல்

முக்கியமாக பெந்தெகொஸ்தே கூட்டங்களிலும் இன்னும் பிற மதபிரிவினரிலும் கூட, தேவனுடைய பிள்ளைகள் இன்று பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றனர் எனவும் அதன் அடையாளமாக அதைப் பெற்றுக் கொண்டவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகின்றனர் எனவும் நம்புகின்றனர். யாருக்கும் புரியாத சில வினோதமான சத்தங்களை எழுப்பி, இது என்ன என்று கேட்பவர்களிடம் அது தேவன் புரிந்து கொள்ளும் பரலோக பாஷை என்றும் கூறி, அதுவே அந்நிய பாஷை என்றும் சொல்லுகின்றனர். சிலவேளைகளில், அவர்களில் ஒருவன் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட பின்னும் அந்த வேடிக்கையான சத்தங்களை எழுப்ப முடியாமல் இருந்தால், கட்டாயத்தின் பேரில் அவர்களைப் பின் பற்றி, அவன் ஏதாவது உளரும் போது அவன் ஏற்றுக் கொள்ளப்படுகிறான். இது அவர்களைப் பற்றி நாம் கற்பனையாகக் கூறுவது அல்ல. அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களே அவர்களுடைய தவறான போதனைகளைக் கண்டபின் அவர்களை விட்டு விலகி வெளியே வந்து கூறியவைகளைத் தான் மேலே சொன்னோம்.

ஆனால் இந்தக் காரியத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று காண, நாம் இப்போது வேத வசனங்களுக்குள்ளாகச் செல்வோம். தாம் சென்றபின் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார். (யோவான் 14 : 26). அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றதும் அதின் அடையாளங்களில் ஒன்றாக "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். (அப். 2 : 1 - 4) வசனம் மேலுமாக கூறுகிறது. "வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள

யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டான போது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷைகளிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். (அப் 2: 5-6) என்கிறது.

மேலும் தொடரும்போது, கூடி வந்திருந்த பலநாட்டு மக்களும் ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தனர். எளிய, கல்வி அறிவற்ற கலிலேயர்கள் இவ்வாறு பல மொழிகளில் பேசுவதால் அவர்கள் குடிபோதையில் இருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். என்றாலும், மக்கள் நினைப்பதைப் போல அவர்கள் குடித்திருக்கவில்லை என்றும், அது காலை வேளையாக இருப்பதையும் பேதுரு அவர்களுக்கு விளக்குகிறார். மேலுமாக, அங்கே நடந்தவை யாவும் யோவேல் தீர்க்கதரிசியால் ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டபடி, கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் எவ்வாறு கர்த்தர் தமது ஆவியை ஊற்றுவதாகக் கூறினாரே அதுவே அங்கு நடந்து கொண்டிருந்தது. (அப். 2:7-17) வேறு விதமாகச் சொன்னால், அப்போஸ்தலர்களை அவர் பரிசுத்த ஆவியானவரால் திருமுழுக்குப் பெறச்செய்தார்; குறிப்பிட்ட சில சீடர்கள் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர்; தேவனுக்குக் கீழ்ப்படிந்த பிற எல்லா மக்களும் அற்புதங்கள் செய்ய இயலாத வரம் அல்லது அளவுடன் கூடிய பரிசுத்த ஆவியைப் பெற்றனர்.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றதின் விளைவாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசக் கூடியவர்களாக இருந்தனர். உலகின் பல பகுதிகளிலுமிருந்து வந்த, பல்வேறு மொழிகள் பேசும் பல மக்களிடம் அவர்கள் பேச வேண்டியதிருக்கும் எனக் கர்த்தருக்குத் தெரியும். எனவே, அவர்கள் எங்கிருந்த போதிலும் அங்குள்ள மக்களின் பிராந்திய மொழிகளில் பேசக்கூடிய திறமையை அவர் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தேவனுடைய விருப்பத்தை அறிவிக்க அவரால் அனுப்பப்பட்டவர்கள் என இந்த மக்களைத்

திருப்திப்படுத்தவும், கர்த்தருடைய உபதேசத்தை விரைவிலே பல இடங்களுக்கு அறிவிக்க உதவவும் இது ஒரு வழியாக இருந்து, அதாவது பிராந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ள நேரத்தை செலவிட வேண்டியதுமில்லை. அல்லது மொழி பெயர்ப்பாளர் களை உபயோகிக்கத் தேவையுமில்லை. ஆனால் வேற்று மொழி மக்களிடம் அவர்களுடைய மொழிகளிலேயே நேரிடையாக பேச முடிந்தது.

அதோடு, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்த எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேச முடிந்தது. ஒரு மக்கள் கூட்டத்தை பவுல் மனமாற்றியதை அப்போஸ்தலர் நடபடி 19-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். வசனம் தொடர்ந்து கூறுகிறது : "அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்". (அப்.19 : 6) அப்போஸ்தலர்கள் மொத்தம் 12 பேர்கள் மட்டுமே என்பதும், பின்னராக பவுல் அழைக்கப்பட்டு மொத்தம் 13 பேர்கள் மாத்திரமே இறுதியாக இருந்தனர் என்பது கர்த்தருக்குத் தெரியும். அவர்கள் பல திசைகளுக்கும் செல்லுவார்கள். அவர்களுக்கு உதவி தேவை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களின் மேல் கைகளை வைத்து அவர்களும்கூட பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் அனுமதி அளித்தார். அவ்வாறு கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட அடையாளத்தின் ஒரு பகுதியாக அவர்களும் அந்நிய பாஷைகளில் பேசக்கூடிய வல்லமை பெற்றனர்.

அப்போஸ்தலர் நடபடி 2:38-ம் வசனத்தில் குறிப்பிட்டபடி, சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியை, அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றவர் களின் நிலை என்ன? அவர்கள் அந்நிய பாஷைகளில் பேச

முடிந்ததா? இல்லை அவர்களால் முடியவில்லை. அவர்கள் அவ்வாறு அந்நிய பாஷையில் பேசியதாக புதிய ஏற்பாட்டில் எங்கும் ஒரு உதாரணம் கூட காணப்படவில்லை. மேலும், இன்று அப்போஸ்தலர்கள் ஒருவரும் இல்லையாதலாலும், அவர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்தவர்கள் அனைவரும் மரித்து போய்விட்டதாலும், அப்போஸ்தலர்களுடைய காலத்தில் நடந்ததைப் போல, இன்று யாரும் அந்நிய பாஷையில் அற்புதமாக பேச முடியாது. ஆனால் தாங்கள் பேசுவதாகச் சொல்லும் அநேகர் இன்று இருக்கின்றனர். என்றாலும் அவர்கள் செய்வதெல்லாம் யாருக்கும் புரியாத உளறலான சத்தங்களை உண்டாக்குவதைத் தவிர வேறல்ல. உலகின் பிற பாகங்களுக்கு இவர்கள் செல்லும் போது அந்தப் பகுதியில் பேசப்படும் பாஷைகளை நேரம் எடுத்துக் கற்றுக் கொள்ளுகின்றனர் அல்லது மொழியாக்கம் செய்யும் நபர்களை உபயோகிக்கின்றனர். அந்நிய பாஷையில் பேசுவதாக உரிமை கோரும் எல்லா பிரசங்கிமார்களும் பிறநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களுடைய பிரசங்கங்களை மொழியாக்கம் செய்ய வேறு யாரையாவது தேடி அமர்த்திக் கொள்ளுகிறார்கள். அதுவே அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை என்பதை நிரூபிக்கிறது. எனவே அந்நாட்களிலே அப்போஸ்தலர்கள் பேசியதைப் போல அந்நிய பாஷைகளில் இவர்களால் பேச முடிவதில்லை.

அந்நிய பாஷை என்றால் என்ன? அதற்கு அர்த்தம் அதுவேதான்! நமக்குத் தெரியாத அந்நியமான ஒரு மொழி. அந்த மொழியைப் பேசுகிற எவரும் அங்கு இல்லையென்றால், அல்லது மொழியாக்கம் செய்யவும் ஒருவரும் இல்லையென்றால், அந்நபர் அமைதியாக இருக்கவேண்டுமென புத்திமதி கூறப்பட்டது. பவுல் கூறுகிறார் : “உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளை பேசுகிறதிலும்,

மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்." (1 கொரி. 14:18,19) பலமொழிகளில் பேசும் வல்லமையை தான் பெற்றிருந்ததாகப் பவுல் இங்கு கூறுகிறார். என்றாலும், புரிந்து கொள்ள முடியாத பதினாயிரம் வார்த்தைகளைவிட, புரிந்து கொள்ளக் கூடிய ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே தாம் விரும்புவதாகக் கூறினார்.

பவுல் மேலுமாக கூறும்போது, அந்நிய பாஷையில் பேசுவது அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாக இருந்ததே தவிர, சபைக்கு அல்ல என்கிறார். "அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாக இராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது" என அவர் கூறினார். (1 கொரி. 14:22). அப்போஸ்தலர்களும் அவர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களும் அந்நிய பாஷையில் பேசும் காரணங்களில் ஒன்று. அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்கள் நம்பச் செய்யவும், அதின் வழியாக அவர்களில் விசுவாசிகளை உண்டாக்கவும் என்பதாக நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். அதையே தான் பவுல் இங்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் இன்றைய நவீன உலகில் அந்நிய பாஷைகளைப் பேசுவதாக கூறப்படும் ஆராதனைக் கூட்டங்களுக்குச் சென்றால், அங்கு விசுவாசிகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்தைக் காணலாம். இதிலும் கூட, வசனத்தில் கூறப்பட்ட முறைகளை அவர்கள் பின்பற்றுவதில்லை.

இறுதியாக, அந்நிய பாஷைகள் ஒரு கால கட்டத்தில் ஒழிந்து போகும் என்று பவுல் கூறினார். அதாவது அற்புதமாக அந்நிய பாஷையில் பேசுவது ஒழிந்து போகும் காலம் ஒன்று வரும் என அவர் கூறினார். அது எப்போது வருவதாக இருந்தது? இறுதியாக, புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வேளையில் அது முடிந்து போகும்

காலம் வரும் எனப் பவுல் கூறினார் : "அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம், அறிவானாலும் ஒழிந்துபோம் நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போம்". (1 கொரிந்தியர் 13 : 8 - 10) நிறைவானது அல்லது பூரணமானது என அவர் இங்கு கூறுவது எதைப் பற்றி? சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என புதிய ஏற்பாட்டைக் குறிப்பிட்டு யாக்கோபு கூறுகிறார். புதிய ஏற்பாடு கொடுக்கப்படும் வரையில், மனிதனுக்கு உதவியாக இருக்க மட்டுமே அற்புதங்கள், அந்நிய பாஷைகள் போன்றவை நடந்தன. ஆனால் ஒருமுறை புதிய ஏற்பாடு வந்த பின்னர் இவை அனைத்தும் இனி தேவைப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டதாகவும், அதின் காரணமாக அற்புதங்களைச் செய்யவும் அந்நிய பாஷைகளைப் பேசவும் கூடும் என இன்று உரிமை கொண்டாடும் அனைவரும் பிரிவினைவாதிகளாக இருக்கின்றனர். ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர். மனிதப் பெயர்களை தங்களுடைய குழுக்களுக்கு வைத்துக் கொள்ளு கின்றனர், புதிய ஏற்பாட்டில் காணப்படாத சபைகளில் அங்கத்தினர்களாகி இருக்கின்றனர் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இப்படியாக, வெவ்வேறு பிரிவினை சபைகளைச் சார்ந்தவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக எப்படி உரிமை கொண்டாட முடியும்? பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் இல்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதோடு, அவர்களுக்குச் செவி சாய்ப்போரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இப்படிப் பட்டவர்கள் உங்களிடம் வந்து, உங்களை ஏமாற்றி திசை திருப்பிவிட அனுமதிக்காதீர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சத்தியங்களுக்கும், நமது இரட்சிப்பு சம்பந்தப்பட்ட பிற எல்லா காரியங்களுக்கும், நித்திய வாழ்விற்கான நம்பிக்கைக்கும் வேத வசனங்களுக்கு மட்டுமே திரும்புங்கள்.

# தேவன் இன்று மனிதனுடன் எவ்வாறு பேசுகிறார்?

எழுதப்பட்டுள்ள வசனத்திற்கு மாறாகவும், அப்பாலும் தனிப்பட்ட மனிதனிடம் இன்று தேவன் நேரிடையாகப் பேசுவதாக அநேக மக்கள் நம்புகின்றனர். தேவன் என்னுடன் பேசி, இதை இதைச் செய்யச் சொன்னார் என்றோ, அல்லது இந்தந்தக் காரியங்கள் நடக்கும் என கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார் என்றோ அவர்கள் பொதுவாக கூறுகின்றனர். இந்த மாதிரியான வழிகளில் தேவன் என்னிடம் பேசுகிறதில்லை; உங்களிடம் இப்படி தேவன் பேசுகிறாரா? சிலரிடம் அவர் நேரிடையாகப் பேசி சில சத்தியங்களை வெளிப்படுத்தும் போது, மற்றவர்களிடம் அவர் அவ்வாறு பேசுவதில்லை என்றால் அது தேவனைப் பாரபட்சமுள்ள வராக்காதா? இந்த மாதிரியான காரியத்திற்குள் நாம் அதிகமாகச் செல்லு முன், வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் பார்க்கலாம்.

வித்தியாசமான காலங்களில், தேவன் வித்தியாசமான வழிகளில் பேசியிருக்கிறார் என்பது உண்மையே. ஆதியில் பிதாக்களிடம் அல்லது குடும்பத் தலைவர்களிடம் அவர் நேரிடையாகப் பேசினார். பின்னர், தேவன் கூறியவற்றை தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் சொன்னார்கள். அதன்பின், தீர்க்கதரிசிகளின் மூலமாக தேவன் பேசினதை அவர்கள் மக்களுக்குத் தெரிவித்தனர். இறுதியாக, தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து வழியாக தேவன் பேசினார். இவை அனைத்தையும் மனதில் வைத்துக் கொண்டு தான் எபிரேய எழுத்தர் கூறினார் : "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும்

சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங் களையும் உண்டாக்கினார்." (எபி. 1 : 1, 2) என்றான்.

பேதுரு அறிவித்தார் : "நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்து வத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையை யும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்ற போது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடைய தாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசன மானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்". (II பேதுரு 1 : 16-21).

முதலாவதாக கர்த்தர் எங்களுக்கு முன்பாக, மறுரூபமான காலத்தை பேதுரு குறிப்பிட்டார் என்பதையும், பரலோகத்தி லிருந்து, ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்...." (மத். 17:5) என்று கூறியதையும் அவர்கள் கேட்டனர் என்பதையும் கவனியுங்கள். கிறிஸ்துவைப் பற்றி யோவான் எழுதும்போது, அவர் வார்த்தையாக இருந்தார், தேவனிடமிருந்து வார்த்தையை அளித்திட அவர் வந்தார் என்று. நாம் படிக்கிறோம் "ஆதியிலே வார்த்தை இருந்தது: அந்த வார்த்த தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர்

ஆதியிலே தேவனோடிருந்தார்" (யோவா 1 : 1, 2). பின்னர் அவர் கூறினார் : "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". (யோவா 20 : 30, 31).

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட படியே எல்லா பரிசுத்த மனிதர்களும் பேசியதாக பேதுரு அறிவிக்கிறார். பவுல் நமக்குச் சொல்லுகிறார் : "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கிறது". (II தீமோ. 3:16, 17). வேத வாக்கியங்கள் ஏவப்பட்டு எழுதப்பட்டதாகப் பவுல் குறிப்பிடும் போது, பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மனிதர்களை ஏவி வசனத்தை எழுதச் செய்தார் என்பதை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். எழுதுவதற்கு அவர் அவர்களுக்கு உதவினார்; அல்லது வழி நடத்தினார். அது வாய்மொழியால் ஏவப்பட்டிருக்கிறது. அது மனிதனுடைய வார்த்தை அல்ல, ஆனால், தேவனுடைய வார்த்தை, எனவே, எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை அது தகுதியுள்ளவனாக்குகிறது. மனிதனுக்கு தாம் எதைச் சொல்ல வேண்டுமென்று தேவனுக்குத் தெரியும். அதைச் சொன்னார். பரிசுத்த ஆவியானவர் அதை எழுதும்படியாக ஏவினார் அல்லது வழி நடத்தினார். பேதுரு மேலும் எழுதும் போது, "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி". (II பேதுரு. 1 : 3) என்றார். ஜீவனுக்கும்

தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளதைக் கவனியுங்கள். அவர் அதை எப்படிச் செய்திருக்கிறார்? அவருடைய வசனத்தின் வழியாகச் செய்துள்ளார்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டனர். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுப்பதற்காக அவர்கள் மேல் கைகளை வைத்தனர். சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தவும் இது நடந்தது. ஏனெனில், அந்த நேரம் வரை, புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்டு மனிதன் கையில் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பூரணமானது வரும் போது அற்புதங்கள் ஒழிந்து போகும் என பவுல் கூறும் போது புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிடுகிறார். இறுதியில், வார்த்தை பூரணமாகக் கொடுக்கப்பட்டது. எனவே யாக்கோபு அறிவித்தார் : "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்". (யாக் 1:25). அவர் மேலும் கூறினார்: "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்". (யாக். 1 : 22).

இந்த வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது என இயேசு கூறினார் : "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை". (மத்தேயு 24 : 35). பின்னர் பேதுரு சொன்னார் : "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே". (1 பேதுரு 1 : 25). யோவான் எழுதினார். "இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது : ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத்

தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்". (வெளி. 22 : 18, 19).

பவுல் போதித்த நற்செய்தியைப் பற்றி அவர் கூறினார் : "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல, நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக் கடவன்". (கலாத்தியர் 1 : 6 - 9).

மேற்சொன்ன சகல வசனங்களிலிருந்தும், வேத எழுத்துக்கள் தேவனிடமிருந்து வந்தது என்றும், பூரணமாக எழுதப்பட்டு அவை மனிதனுக்குத் தரப்பட்டுள்ளது என்றும், அவை மட்டுமே நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக உள்ளன என்றும் தெரிகிறது. பவுல் நமக்குச் சொல்லுகிறார் : "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோமர் 10 : 17). அவர் குறிப்பிடும் தேவனுடைய வார்த்தை எது? புதிய ஏற்பாட்டில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும், தேவனுடைய எழுதப்பட்ட வசனங்கள் மட்டுமே.

இன்று புதிய வெளிப்படுத்துதல்களை தேவன் தருகிறாரா? நம்மில் பலருக்குச் சொல்லாத சில காரியங்களை வித்தியாசப்பட்ட சிலரிடம் அவர் இன்று சொல்லிக் கொண்டிருக்கிறாரா?

நிச்சயமாக கிடையாது. தேவனுடைய சகல வெளிப்படுத்துதல்களும் நம்மிடம் இன்று இல்லாமல், அவர் மேற்கொண்டு தமது விருப்பத்தை சில மனிதர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பாரேயானால், வேதாகமத்தின் பயன் என்ன? அவர் இன்னும் மனிதனிடம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தால், நாம் என்ன செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதை அறிய நமக்கு ஒரு வழியும் இல்லாமல் போய்விடும். மேலும், ஒருவனிடம் ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனிடம், அதற்கு முரணான வேறு ஒன்றைச் செய்யச் சொல்லுவதும் அவர்களுக்குக் குழப்பமான காரியமாகாதா? எனது நண்பர்களே, அவருடைய வார்த்தையைத் தவிர்த்து அதற்குக் கூடுதலாக இன்று தேவன் யாரிடமும் பேசவில்லை என்பதை நமக்கு இது உறுதிப்படுத்துகிறது. ஆனால் அற்புதங்கள், அந்நிய பாஷை சம்பந்தமாக, தேவன் தங்களிடம் நேரிடையாகப் பேசுகிறார் என உரிமை கொண்டாடும் மக்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடாக பேசுகின்றனர் என்பதைக் கவனியுங்கள். தேவனுக்கு விரோத மானவர்கள் என ஒருவருக்கொருவர் குற்றஞ் சாட்டுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதன் உண்டாக்கிய, மனிதப் பெயர்களைத் தாங்கிய, வித்தியாசப்பட்ட சபைகளிலே அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். தேவன் அனுமதிக்காத வழிகளில் ஆராதனை செய்து வருகின்றனர். தேவன் உண்மையிலேயே இவர்களிடம் பேசிக் கொண்டிருந்தால் இம்மாதிரியான காரியங்களைச் செய்ய அவர் கூறமாட்டார்.

எனது நண்பர்களே! ஏமாறாதீர்கள். தேவனுடைய விருப்பத்தை நீங்கள் அறிய விரும்பினால், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய புதிய ஏற்பாட்டுக்குத் திரும்புங்கள். இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதையும், நீங்கள் எந்த சபையில் இருக்க கர்த்தர் விரும்புகிறார் என்பதையும், அவரை நீங்கள் ஆராதிக்கும் வழியையும், எப்படி வாழ வேண்டுமென்பதையும் அதில் நீங்கள் கற்றுக் கொள்ள முடியும். கர்த்தர் ஏற்கனவே பேசியிருக்கிறார். நண்பர்களே, அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தினவற்றை நாம் கேட்டு நடப்பது மட்டுமே நமக்குப் போதுமானதாக இருக்கும். இருக்கிறது,

# போதிக்க அழைப்பு

தாங்கள் போதிப்பதற்காக எவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பது குறித்து பலர் கதைகளைச் சொல்லி வருகின்றனர். ஒரு மனிதன் ஆகாயத்திலே G.P.C என்று மூன்று ஆங்கில எழுத்துக் களைப் பார்த்தானாம். அந்த மூன்று எழுத்துக்களும் 'GO PREACH CHRIST' (கிறிஸ்துவைப் போதிக்கப் போ) என்பதைக் கூறுவதாக அவன் முடிவு செய்தான். இந்த மனிதன் ஒரு விவசாயி. இவன் இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவன் சொன்னான் : "அந்த மூன்று எழுத்துக்களும் 'GO PLOW CORN' (போய் தானியத்தை விதை) என்பதாக இருக்கும்." என்று. கர்த்தர் இவ்வாறு தங்களிடம் பேசி, போதிக்கப் போகச் சொன்னார் என்பதாக இன்னும் பலர் வர்ணிக்கிறனர். சிலருக்குக் கனவில் தோன்றுகிறார், வேறு சிலருக்கு காட்சியளிக்கிறார்! ஆனால், தமது வார்த்தையைப் போதிக்க மனிதர்களை தேவன் அழைக்கிறாரா? அப்படியானால், இந்த வழியில் தான் அவர்களை அழைக்கிறாரா?

புதிய ஏற்பாட்டில் மத்தேயு மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களை நாம் படித்துப் பார்க்கிற போது, தம்மைப் பின்பற்ற 12 பேர்களை கர்த்தர் எப்படி அழைத்தார் என்பதை நாம் காண முடியும். இம்மனிதர்கள் கிறிஸ்துவின் அப்போஸ் தலர்கள் என அறியப்பட்டனர். அவரைப் பின் தொடர, அவரது ஊழியத்தின் தொடக்க காலத்தில் அவர்கள் அவரால் நேரிடையாக அழைக்கப்பட்டனர். அவருடைய அற்புதங்களைக் காணவும், அவருடைய உபதேசங்களைக் கேட்கவும், அவர் சென்ற பின் தொடர்ந்து ஊழியஞ் செய்ய பயிற்சி பெறவும் அவர்களை அழைத்தார். அவர்கள் சத்தியத்தை மட்டுமே கற்பித்தார்கள் என்பதில் நிச்சயமாக இருக்கும்படியாகவும், அவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த அனைத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டவும், சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையை அவர்களுக்கு அருளவும், அற்புதங்களைச் செய்யவும், தேவனுடைய விருப்

பத்தை அறிவிக்க அவரால் உண்மையிலேயே அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளும் படியாகவும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார். (யோவான் 14:26; மாற்கு 16 : 20).

பின்னர் அப்போஸ்தலர்கள், தாங்கள் கை வைப்பதின் மூலம் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுப்பதற்கு. அந்த ஏழுபேரை தெரிந்தெடுக்க கேட்டுக்கொண்டனர். அப்போஸ்தலர் களுடைய பணிகளில் உதவியாக இருக்க வேண்டுமென்ற காரணத்தாலேயே இவ்வாறு செய்தனர். நாட்கள் சென்ற பின்னர், இன்னும் சிலர் அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கும் இந்த வல்லமை அளிக்கப்பட்டது.

பரலோகத்தின் பிதாவிடம் திரும்பிச் செல்லுவதற்கு முன்பு இந்த பிரதான கட்டளையை அவர் அளித்தார் : ". . . நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 15, 16) மீண்டுமாக அவர் கூறும் போது, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத். 28 : 19, 20) . அந்தக் கட்டளையைக் கவனியுங்கள்; போய் நற்செய்தியை அறிவியுங்கள்; யாருக்கு? உலக முழுவதுமுள்ள சகல மக்களுக்கும். யார் செல்ல வேண்டும்? அப்போஸ்தலர்களும், அவர்களால் மனந்திரும்பியவர்களும் செல்ல வேண்டும். நமது நாட்கள் வரை அது தொடருகிறது இல்லையா? ஏனெனில், நாம் கர்த்தருக்குள் மனந்திருப்பப்பட்டிருக்கிறோம். எனவே, நாம் போய் போதிக்க வேண்டும்.

ஆகாயத்திலே அடையாளங்களைக் கண்டு, அல்லது காட்சிகளைப் பார்த்து, அல்லது தேவனுடைய வசனத்தைப் போதிக்கச் செல் என்று சொல்லும் சத்தத்தைக் கேட்டு, தேவனுடைய மக்கள் யாரும் போதிக்கச் சென்றதாக புதிய ஏற்பாடு புத்தகத்தில் எங்கும் காண முடிவதில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். அல்லது இன்று கர்த்தர் யாரையும் அவ்விதமாக அழைப்பதைக் காண முடியாது. உலக முழுவதும் சென்று நற்செய்தியைப் போதியுங்கள் என அவருடைய மக்கள் அனைவருக்கும் ஏற்கனவே அவர் கட்டளையிட்டிருக்கிறார். தனிப்பட்ட முறையில் எவரையாகிலும் சந்தித்து, போய் வசனத்தைப் போதியுங்கள் என்று கேட்டுக் கொள்ளவோ அல்லது கட்டளையிடவோ அல்லது பலவந்தமாக அவர்களை அனுப்பி வைக்கவோ, அவருக்குத் தேவை என்ன?

நற்செய்தி வழியாக, அதாவது எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தி வழியாக, அவரிடம் வந்து அவருக்குக் கீழ்ப்படியும் படியாகக் கர்த்தர் நம்மை அழைக்கிறார். அதேபோல, எழுதப்பட்ட வசனத்திலிருந்து அறிவிக்கப்படும் நற்செய்தியை போதிப்பதின் மூலம், ஆத்துமாக்களை அவரிடம் வரும்படியாக அழைக்கிறார். கிறிஸ்து கூறினார் : "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமா யிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்". (மத். **11:28, 30**). தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறினார்: "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்". (II தெச 2:14) எனவே, நற்செய்தியானது மண்பாண்டங்களில் கொடுக்கப்

பட்டிருக்கிறது. அதாவது நற்செய்தியை எடுத்துச் செல்லும்படி கர்த்தருக்குச் சொந்தமான மனித குலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (II கொரி 4 : 7) தான் அவர்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையன்றி வேறொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து வரும் ஒரு தூதன் பிரசங்கித்தாலும் தேவனுடைய சாபம் அவன் மேல் வரும் என பவுல் கூறினார். (கலா 1 : 6-9) அப்படியிருப்பதால், கர்த்தர் தமது நற்செய்தியை வார்த்தையினாலே வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்குக் கீழ்ப்படிவோர் பிறருக்கு அதை எடுத்துச் செல்ல வேண்டும். கீழ்ப்படியும் போது, நற்செய்தியால் அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என சொல்ல முடியும். இறுதியாக, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, பின்னர் அவர்களும் போய் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

எல்லோரும் பிறருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டுமென்று சொல்லும்போது, அதன் பொருள், எல்லாரும் எல்லாருக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்பதல்ல என்பதைக் கவனிக்க வேண்டும். ஆணும் பெண்ணும் கலந்துள்ள ஒரு கூட்டத்தில் பெண்கள் பகிரங்கமாக பிரசங்கம் செய்யக் கூடாது. சபையைச் சார்ந்த பெண்கள், ஆண், பெண் இருபாலரிடம் தனியாகவும், பெண்கள் குழுவிலும், குழந்தைகள் வகுப்புகளிலும் பேசலாம். ஆனால் ஆண், பெண் கலந்துள்ள கூட்டத்தில் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். (I கொரி 14:34; I தீமோ 2:11) இன்று பெண் போதகர்கள் இருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் சத்தியத்தையே போதித்தாலும்கூட, ஆண், பெண் கலந்த கூட்டத்தில் அவர்கள் எழுந்து நின்று போதித்தால், தேவனுக்கு அவர்கள் தனிப்பட்ட வகையில் கீழ்ப்படியாமல் போகின்றனர். ஆனால் எனக்குத் தெரிந்தவரை தங்களுடைய பகிரங்க போதனை மூலம் நூறு சதவீதப் பெண்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போவதோடு, தவறைப் போதித்து மனிதனுக்கும் தேவனுக்கும் தீங்கு விளைவிக்கின்றனர்.

ஆனால், ஆண்களைப் பற்றிய காரியம் என்ன? எல்லா ஆண்களுமே பகிரங்கமான பிரசங்கிகளாக இருக்க விரும்புவதில்லை; அல்லது அதற்குத் தேவையான திறமையோ,

பயிற்சியோ இருப்பதில்லை. அவ்வாறு இருப்பின் கூட்டங்களில் அவர்கள் பேசக் கூடாது. ஆனால் நற்செய்திக்கு ஒருவன் கீழ்ப்படிந்திருக்கும் போது சபையில் அங்கத்தினராகிறான், உண்மையுள்ள ஒரு கிறிஸ்தவனாகிறான், நற்செய்தியைப் போதிக்க விருப்பமுடையவனாக இருக்கிறான், அதற்குத் தகுதியுடையவனாகவும் இருக்கிறான். கற்றுத் தேர்ந்து போதிக்க தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுகிறான். அப்படியிருக்கையில், கர்த்தர் அவருடைய வசனத்தைப் போதிக்க சகல விதத்திலும் அவனை ஏற்றுக் கொள்ளுகிறார்.

மீண்டுமாக, ஒரு திறமையும் இல்லாத, சத்தியத்தைக் கொஞ்சமும் அறியாத தங்களை தேவன் போதிப்பதற்காக அழைத்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் வெளியிட வேண்டிய செய்திகளை தேவன் அவர்களுக்குத் தருவதாகவும் பெருமையடித்துக் கொள்பவர்கள் இன்றும் இருக்கின்றனர். நிச்சயமாக, அவர்கள் கூறுவது தவறு. மேலுமாக, அவர்கள் கற்பிக்கும் சகல காரியங்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் பேரில் பழியைப் போட்டு விடுவது மிகவும் வருத்தம் அளிக்கும் செயலாக உள்ளது. ஒருவேளை, பரிசுத்த ஆவியானவர், போதிப்பதில் ஜனங்களை இன்று அற்புதவிதமாக வழிநடத்தனாலும், அவர் தவறைப் போதிக்க ஒருபோதும் வழிநடத்தமாட்டார். போதிக்கும்படியாய் அவர் ஒருவரையும், அற்புதமாக வழிநடத்துவதில்லை. ஆனால், போதிப்பதற்காகத் தங்களை அழைத்திருப்பதாக உரிமை கொண்டாடும் பிரசங்கிமார்களைக் கவனித்துப்பாருங்கள்; பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுவதாகக் கூறிக் கொண்டு அவர்கள் போதிக்கிற காரியங்களையும் கவனியுங்கள். வசனத்தில் காணப்படாத பலவற்றை அவர்கள் போதித்துக் கொண்டிருப்பதை நீங்கள் காணமுடியும்; அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரண்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, வேதாகமத்தில் நாம் படிக்காத, மனிதன் உண்டாக்கிய பெயர்களைத் தாங்கிய, இன்னும் இதுபோன்ற எத்தனையோ

சபைகளில் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த மக்கள் கர்த்தரை எப்படி பிரதிநிதித்துவப் படுத்த முடியும்? முடியவே முடியாது. அவர்கள் பிரசங்கிகளாக இருக்கலாம், ஆனால் தவறையும், சாபக்கேடானவைகளையும் அவர்கள் போதிக்கின்றனர். யோவான் கூறினார் : "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (I யோவா 4:1). பல கள்ளத் தீர்க்கதரிசிகளும், போதகர்களும், பிரசங்கிமார்களும் உலகத்தில் தோன்றியிருப்பதாக யோவான் கூறுகிறார். அன்று அது எவ்வாறு உண்மையாக இருந்ததோ அதே போல இன்றும் அது உண்மையே. இந்த பிரசங்கிகளைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று அவர் சொன்னார். வேறுவிதமாகக் கூறினால், அவர்களுடைய போதனைகளை தேவனுடைய வசனத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவர்கள் கூறுவது வேதவசனங்களில் இல்லாவிட்டால் அல்லது கர்த்தர் சொல்லியிருப்பவைகளோடு ஒத்துப் போகாவிட்டால், அவர்கள் எதைக் கூறியபோதிலும், அவர்கள் கள்ளப் போதகர்களே.

மீண்டுமாக யோவான் கூறினார் : "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க் கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்." (II யோவா 9 -11).

ஆம், இன்று நமக்குப் போதகர்கள் தேவை, நிறைய பேர் தேவை, தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளுவதின் மூலமாக அழைக்கப்பட்டுள்ளவர்கள் தேவை, சத்தியத்தை மட்டுமே போதிக்கக் கூடியவர்கள் தேவை. கர்த்தரையும் மனித

ஆத்துமாக்களையும் நேசிக்கும் மனிதர்கள் நமக்குத் தேவை. அவர்கள் கிறிஸ்துவை அறிவிக்கும் பணிக்காக தங்கள் ஜீவனையும் அர்ப்பணிப்பவர்களாக இருக்க வேண்டும். போதிப்பதை ஒரு தொழிலாகக் கருதி கூலிக்கு மாரடிப்பவர்கள், அல்லது சம்பளம் கொடுத்தால் தவறையும் தவறாமல் போதிக்கத் தயாராக இருப்பவர்கள் நமக்குத் தேவையில்லை. வாலிப பிரசங்கி தீமோத்தேயுக்கு பவுல் கூறினார் : "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ள வர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று." (II தீமோத்தேயு 4 : 1-5) பவுல் இங்கு கூறியருப்பவற்றை நாம் தீவிரமாக சிந்திப்போம்.

போதகனே, நீ எதைப் போதிக்கிறாய் என்பதில் கவனமாக இரு. மக்களே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதில் கவனமாய் இருக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

# மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர்

மனமாற்றம் அல்லது மனந்திரும்புதல் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. வேத வாக்கியங்களின் படியாக, தேவனை ஒருவர் விசுவாசித்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, தன் பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும் போது இரட்சிப்பு கிடைக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் குறைந்தது பதினொரு மனமாற்றங்களைப் பற்றிய விவரங்களை நாம் காண முடியும். அவை அனைத்தையும் நீங்கள் படித்துப் பார்த்தால், அந்த மக்கள் அனைவரும் கர்த்தருக்குக் கீழ்படிவதில் ஒரே காரியத்தையே செய்தார்கள் எனப் புரியும். ஆனால் இவை அனைத்திலும் பரிசுத்த ஆவியானவருடைய பங்கு என்ன?

என்னோடு யோவான் 3ம் அதிகாரத்திற்கு வாருங்கள், அதைப்படித்து, இயேசுவால் கற்பிக்கப்பட்ட புதிய பிறப்பு பற்றி நாம் கொஞ்சம் சிந்திப்போம். வசனம் கூறுகிறது. "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து, ரபீ . நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிபட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனிதன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக : ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே

மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலுருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறது என்றும், உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். இயேசு அவனை நோக்கி, நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன். நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம், நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவருமான மனித குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:1-13) என்றார்.

இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையிலே நடைபெற்ற உரையாடலை தயவுசெய்து கவனித்துப் பாருங்கள். இங்கே ஒரு மனிதன் இருந்தான்; அவன் பரிசேயன், மிகுந்த மதப்பற்றுள்ளவன். ஆனால் இயேசுவை விசுவாசித்த மனிதன், யூதர்களுக்குப் பயந்தும், மற்றமக்கள் என்ன சொல்லுவார்களோ என்று கருதியும் இயேசுவை இரவில் வந்து சந்திக்கிறான். இரு வேறு சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு நடைபெற்ற காரியம் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவுக்காக நிக்கொதேமு பரிந்து பேசுகிற வேளையிலும், மற்றொரு முறை, இயேசுவை அடக்கம் செய்ய அவன் வெள்ளைப் போளமும், கரியபோளமும் கொண்டுவர, இயேசுவை சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில்

சுற்றிக்கட்டிய வேளையிலும் இவ்வாறு நடந்தது. ஆனால் நிக்கொதேமு இயேசுவின் பேரில் தனக்குள்ள விசுவாசத்தை அறிவிக்கும் விதமாக "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங் களைச் செய்யமாட்டான் என்றான்".

வசனம் தொடரும் போது, இயேசு அவனுக்குப் பதிலளித்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க வேண்டு மானால் அவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று கூறினார். சபையாகிய இராஜ்ஜியம் அப்பொழுது நிறுவப்படாமலிருந்தது. ஆனால், விரைவில் அது வரவிருந்தது. அந்த ராஜ்யம் அல்லது சபையில் ஒருவன் பிரவேசிக்க ஆவிக்குரிய ஒரு பிறப்பே அவனுக்குள்ள ஒரே வழி.

எதார்த்தமாக, சரீரப்பூர்வமான பிறப்பைப் பற்றி கிறிஸ்து கூறிக் கொண்டிருப்பதாக நிக்கொதேமு நினைத்தான். எனவே தான், முதிர்வயதில் ஒருவன் மீண்டுமாக எப்படி பிறக்க இயலும் எனக் கேட்டான். பின்னர், தாம் எப்படிப்பட்ட பிறப்பைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார் என்பதை இயேசு அவனுக்கு விளக்குகிறார். சரீரத்தில் பிறப்பதைப் பற்றி அவர் குறிப்பிட வில்லை; ஏனெனில் மாம்ச சரீரத்தால் சபை அல்லது ராஜ்யம் கட்டப்படுகிறதில்லை. ஒரு ஆவிக்குரிய பிறப்பை மனதில் வைத்து இயேசு அவ்வாறு கூறினார். இந்த ஆவிக்குரிய பிறப்பு, ஒரு சரீர, செயல் மூலமாக, அதாவது தண்ணீரில் பிறப்பதால் ஏற்படுகிறது. தண்ணீரைக் கொண்டு கீழ்ப்படியச் சொல்லும் ஒரே ஒரு செயல் மட்டுமே வசனத்தில் காணப்படுகிறது. அது திருமுழுக்கு ஆகும். நிறைய தண்ணீர் இருந்த இடத்தில் யோவான் திருமுழுக்குக் கொடுத்ததாக நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 3 : 23) கிறிஸ்து தண்ணீரில் திருமுழுக்குப் பெற்றார் (மத்தேயு 3 : 13 - 17) எழுந்து, பாவங்கள் போகக் கழுவப்பட திருமுழுக்குப் பெற வேண்டுமென சவுலுக்குச் சொல்லப்பட்டது. (அப் 22 : 16) கிறிஸ்துவுள்ளாக நாம் திருமுழுக்குப் பெறுவதாக பவுல் கூறினார்.

(ரோமர் 6 : 3) கிறிஸ்துவுக்குள் நாம் புதிய சிருஷ்டியாக இருக்கிறோம். (II கொரி 5 : 17) இதுவே தண்ணீரில் பிறப்பது என்பதின் பொருளாகும்.

அடுத்ததாக, இயேசுவின் மனதில் உள்ள பிறப்பில் ஆவியும் சம்பந்தப்பட்டுள்ளது. அவர் கூறினார், "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் 3 : 5) நாம் பார்த்தபடி, தண்ணீரில் பிறப்பதென்பது திருமுழுக்கைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுவதாகும். ஆனால் இந்த எல்லா காரியங்களிலும் ஆவியானவரின் பங்கு என்ன? உண்மையில், "தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்பது ஒரு ஒருங்கிணைந்த செயலாகும். ஒன்றை விட்டு விட்டு மற்றதை நீங்கள் செய்ய முடியாது. இங்கே ஆவியின் ஈடுபாட்டைப் பற்றி அறிய நாம் I பேதுரு 1:22-23 ஆகிய வசனங்களுக்குச் செல்வோம் அங்கே பேதுரு கிறிஸ்தவர்களிடம் பேசுவதை நாம் பார்க்கிறோம். "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடே ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே". எனவே, ஒருவர் மீண்டும் பிறப்பது என்றால் அழிவுள்ள வித்தினால் அல்ல, அதாவது சரீர பிறப்பால் அல்ல, மாறாக அழிவில்லாத வித்தாகிய தேவ வசனத்தால் பிறக்க வேண்டும் எனப்பொருள். இப்போது, அந்த வசனத்தைக் கொடுத்தது யார்? சந்தேகமின்றி, ஆவியானவர் தான் கொடுத்தார். கிறிஸ்து சொன்னார். "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6 : 63) பின்னர் நற்செய்தியாகிய வசனம், அதாவது சத்தியம், உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட

வேண்டும் என்று கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16:15) எனவே, ஒருவன் அந்த வார்த்தையைக் கேட்டு விசுவாசியாக மாறும்போது (ரோமர் 10 : 17) வசனத்தின்படி நடந்து அதற்குக் கீழ்ப்படியும் போது, கர்த்தர் அவனை இரட்சிக்கிறார். கிறிஸ்து கூறினார்: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16) என்று.

தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்றால் பின் என்ன அர்த்தம்? வசனத்தின் வழியாக ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவனுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப் படவும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யவும், ஆவியானவர் அவனை வழிநடத்துகிறார் என்பதே அதின் எளிய பொருள் ஆகும். அடுத்து, இவை மூலமாக ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறான். நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறான் அல்லது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறான். அதாவது வார்த்தை வழியாக ஆவியானவர் அவனை அவ்வாறு செய்யத் தூண்டுகிறார். எனவே தண்ணீரும் ஆவியும் இங்கே சம்பந்தப்பட்டுள்ளன. அப்படியானால் ஆவியானவர் ஒருவனை அற்புதமாக இரட்சிப்புக்கு வழி நடத்துகிறார் என அர்த்தமா? அல்லது வசனத்திற்கு அப்பால் வசனத்திற்கு வெளியே, ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறானா? இல்லை என்பதே இதற்குப் பதில். இங்கே இரட்சிப்பு எந்த ஒரு அற்புத செயலாலும் நடைபெறுவதில்லை. ஆனால் தேவனுடைய ஆவிக்குரிய சட்டத்தின்படி ஒருவன் கர்த்தருடைய உபதேசத்துக்குக் கீழ்ப்படியும் போது அவன் இரட்சிக்கப்படுகிறான். அதற்கு மாறாக அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் இரட்சிப்படைய இயலாது.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என வசனம் தொடர்ந்து கூறுகிறது. அதாவது மாம்சத்தில் பிறப்பது சம்பந்தமான சட்டம் இருக்கிறது. ஆவியில் பிறப்பது சம்பந்தமாகவும் ஒரு சட்டம் உண்டு. அவை இரண்டுமே பிறப்பதைப் பற்றியதாக இருப்பினும் ஒன்று

சரீரத்திற்குரியது; அடுத்தது ஆவிக்குரியது. இவை அனைத்தும் எவ்வாறு நடைபெறுகிறதென்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லையானாலும் அவை நடைபெற்றுக் கொண்டு தானிருக்கின்றன. நாம் காற்றை காண முடியாது, ஆனால் அதின் விளைவுகளை நாம் காணமுடியும். அதாவது, ஒருவன் முன்வந்து கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது இரட்சிக்கப்படுகிறான். கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் சபைக்குள் - பிரவேசிக்கிறான். நற்கனிகளைக் கொடுக்கத் தொடங்குகிறான். இது தான் புதிய பிறப்பு, மனமாற்றத்தில் ஆவியானவரின் பங்கு இதுதான்.

மாம்சப் பிறப்பைப் பொறுத்தவரை, அவை அனைத்தும் ஒரே மாதிரியான பிறப்புகள். ஆவிக்குரிய பிறப்பிற்கும் இது பொருந்தும். ஒருவனை ஒரு விதமாகவும், மற்றொருவனை வேறு விதமாகவும் தேவன் இரட்சிப்பதில்லை. எல்லாரையும் ஒரே மாதிரியாகவே இரட்சிக்கிறார். அதாவது, வேதவசனங்களில் நிர்ணயிக்கப்பட்ட சட்டத்தின்படியாக இரட்சிக்கிறார்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? இல்லையென்றால் நீங்கள் பிறப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம். கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள், பாவமன்னிப்புக்காக தண்ணீரில் அடக்கம் செய்யப்படுங்கள், அப்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்வார் (அப். 2 : 38, 47).

# "விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன"

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்னும், தமது பரலோகப் பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு சற்று முன்னும், இயேசு கிறிஸ்து அவருடைய அப்போஸ்தலர்களை தம்மைச் சுற்றிலும் உட்கார வைத்து, "பின்பு அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற்கு *16 : 15-20*).

இன்று எல்லா கிறிஸ்தவர்களும், அல்லது அவர்களில் சில பேராவது பிசாசுகளைத் துரத்த முடியும் என்றும், நவமான பாஷைகளில் பேசமுடியுமென்றும் பாதிப்புக்குள்ளாகாமல், விஷப்பாம்புகளைப் பிடிக்கக் கூடும் என்றும், சாவுக்குகேதுவான விஷத்தைக் குடித்தாலும் மரணமேற்படாது என்றும், வியாதிக்காரர்களை அற்புதமாக சுகப்படுத்த முடியும் என்றும் பலர் நம்ப

விரும்புகின்றனர். அவர்களுடைய நம்பிக்கையை நிரூபிக்க மாற்கு 16 : 17, 18 வசனங்களைக் காட்டுவார்கள். ஆனால், பொதுவாக் கிறிஸ்தவர்கள் இந்தக் காரியங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருப்பார்கள் என இந்த வசனப்பகுதி கூறுகிறதா?

விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அற்புத அடையாளங்களைப் பற்றி நாம் பேசத் தொடங்கும் போது, பல காரியங்களை நமது மனதில் வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என நான் நினைக்கிறேன்.

முதலாவதாக, தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை, அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இயேசு வாக்களித்தார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (யோவான் 14 : 26; லூக்கா 24 : 49; அப். 1:8). அடுத்து, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்களும் கூட பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்களின் பேரில் கைகளை வைக்கும் அதிகாரமும் வல்லமையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. (அப். 6 ; அப். 19). ஆனால், பொதுவாக கிறிஸ்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றார்கள் என்பதாக புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் முழுவதையும் தேடினாலும் ஒரு இடத்திலும் கூட நீங்கள் காண முடியாது. அப்படியானால், அற்புத காரியங்களைச் செய்யும் வல்லமை பெற்ற கிறிஸ்தவர்கள் யாரும் இன்று இல்லை என்பது அதன் பொருள். தங்களுக்கு இந்த வல்லமை இருக்கிறது என்று சொல்லுவோர் பலர் உள்ளனர். ஆனால், உண்மையில், அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால், ஒரு அற்புதம் கூட செய்து காட்டவில்லை. அவர்களால் செய்யவும் முடியாது. இவர்களெல்லாம், ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். ஏமாந்த இவர்கள் தங்கள் ப்ங்குக்கு மற்றவர்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்ற இயேசுவின் அறிவிப்பு சகல

கிறிஸ்தவர்களுக்கும் அளிக்கப்பட்டதாக இருந்திருந்தால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்கள் சிலர் மட்டுமே பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்களின் மேல் கைகளை வைக்க வேண்டிய அவசியம் என்ன? அப்படியிருப்பின் ஏற்கனவே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக அவர்கள் இருந்திருப்பார்களே? எனவே, அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை அவர்கள் மேல் வைக்கும் வரை அப்படிப்பட்ட வல்லமையை சீடர்கள் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகிறது அல்லவா? அதன் பின்னாக, உதாரணத்திற்கு, பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று அவர்களிடம் கிறிஸ்துவைப் போதித்தான். "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். "அப் (8 : 6-7) என்றும் நமக்குச் சொல்லப்படுகிறது. இப்போது, பிலிப்புக்கு இந்த வல்லமை எப்போது வந்தது? அப்போஸ்தலர்கள் பிலிப்புவின் மேலும் இன்னும் ஆறு சீடர்களின் மேலும் கைகளை வைத்த போது தான் வந்தது. அதற்கு முன்பு, இச்சீடர்கள் பரிசுத்த ஆவியின் கனிகளைப் பெற்றிருந்தனர். (அப். 2 : 38) அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரம்பியிருந்தார்கள். (அப். 6 : 3) ஆனாலும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

மூன்றாவதாக, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்ற இயேசுவின் அறிவிப்பு சகல விசுவாசிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தால், அந்தக் காலம் தொடங்கி நமது காலம் வரையிலுள்ள சகல கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷைகளில் பேசவும், விஷமுள்ள சர்ப்பங்களை எடுக்கவும், சாவுக்கேதுவான விஷத்தைச் சாப்பிட்டு உயிரோடிருக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், அற்புதமாக

சுகமளிக்கவும் கூடிய பலவித அடையாளங்களைச் செய்யும் வல்லமையப் பெற்றிருக்கவும் வேண்டும் : ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் இவற்றைச் செய்ய முடியாது. மேலும், அப்போஸ்தலர்களும் பொதுவாக சகல கிறிஸ்தவர்களுமே இந்த வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டார்கள் எனவாதம் செய்வோரும்கூட சகல கிறிஸ்தவர்களும் இக்காரியங்களைச் செய்ய முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். சந்தேகமின்றி, மேலும் தங்கள் நிலையை நியாயப்படுத்த அவர்கள் இப்படியாகச் சில சாக்கு போக்குகளைச் சொல்லுவர். அதாவது, அவர்களுடைய விசுவாசம் போதுமானதாக இல்லையென்றும், அற்புதங்களை, நாங்களல்ல கர்த்தர் தான் செய்கிறார் என்றும், அடையாளங்களைச் செய்யச் சொல்லி நாங்கள் கர்த்தரைச் சோதிக்க விரும்பவில்லையென்றெல்லாம் பொய்யை அடுக்குவர். ஆனால், இவைகளைப் பற்றி வேதாகமம் எங்கே போதிக்கிறது? இப்படிப்பட்ட அற்புதங்களை எல்லாக் கிறிஸ்தவர்கள் செய்யும்படியாக கர்த்தர் அனுமதித்தால் எல்லோரும் செய்யக்கூடும். அப்போஸ்தலர்களாலும் அவர்கள் யார் மேல் கரங்களை வைத்தார்களோ அவர்களாலும் செய்ய முடிந்தது. நோயாளியை சுகப்படுத்துவதாகவும், அந்நிய பாஷைகளில் பேசுவதாகவும், ·பிசாசுகளை துரத்துவதாகவும், இருந்த அந்தக் காலக் கட்டத்தில் தானே பவுலை ஒருசர்ப்பம் தீண்டவும் அதைக் கவனித்தவர்கள். நிச்சயமாக அவன் மடிந்து போவான் என நினைத்திருக்கையில் அவன் சாகாமல், எளிதாக கையை உதறி அந்த சர்ப்பத்தை நெருப்பில் போட்டு விட்டு அவன் வழியில் செல்லுவதாகவும் வசனம் நமக்குச் சொல்லுகிறது. (அப். 28:1,10) இந்த நவீன காலத்திலும் விஷமுள்ள பாம்பை ஒரு சிலர் வேண்டுமென்றே பிடித்து, தங்களுடைய வல்லமையைக் காட்ட முயன்று, பாம்பு தீண்டி தோல்வியுற்று மடிந்துபோன சம்பவத்தை சில இடங்களில் நாம் கேட்க முடிகிறது.

நான்காவதாக, இப்போது மேலே கூறப்பட்ட சகல காரியங்களையும் நினைவில் வைத்துக் கொண்டு, மாற்கு 16ம்

அதிகாரத்தைப் படித்துப் பார்ப்பீர்களானால், கர்த்தர் அப்போஸ்தலர்களைச் சந்தித்து அவர்களுடைய பணியைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நடப்பவற்றைப் பற்றியும் கூறுவதைக் காணலாம். 'அவர்கள்' என பல தடவைகள் பயன்படுத்தப் பட்டுள்ள பதமானது அப்போஸ்தலர்களையே ஒவ்வொரு முறையும் குறிக்கின்றது. "விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்று இயேசு கூறிய போது, அவர் பொதுவாக கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறவில்லை, மாறாக அப்போஸ்தலர்களைப் பற்றியே அவர் கூறினார். ஒரு வேளை அது எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பதாக இருந்தால், ஏன், பின்னாளில் வந்த கிறிஸ்தவர்கள் எல்லோரும் அற்புதங்கள் செய்யவில்லை? ஏனெனில், அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இந்த வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருந்தது; அப்போஸ்தலர்கள் அந்த எல்லா காரியங்களையும் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். தனிப்பட்டவர்களுக்கு நற்செய்தி போதிக்கப்படுவது பற்றியும், அதற்குக் கீழ்ப்படிபவர்களையும், கீழ்ப்படியா தவர்களையும் பற்றிக் குறிப்பிடுகையில், கிறிஸ்து கூறினார் : "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற் 16:16). அந்த அற்புத அடையாளங்கள் அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து நடைபெறுவதாக பின்னர் கர்த்தர் கூறினாரே தவிர, அவர்களின் போதனைகளின் விளைவாக நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால் மீண்டுமாக, காரியங்கள் இப்படியாகத்தான் நடந்தன என்று நிச்சயமாகத் தெரியும்படிக்கு, அற்புத அடையாளங்களை யாரால் செய்ய முடிந்தது என்றும், யாரால் செய்ய முடியவில்லை என்றும் கவனியுங்கள். யார் அற்புத வல்லமையைப் பெற்றனர் என்ற உண்மையை, நீங்கள் மாத்திரமல்ல யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ள முடியும்.

இன்று பிறமொழிகளைக் கற்றுக் கொள்ளாமல் அவைகளைப் பேசக்கூடிய கிறிஸ்தவர்கள் எவரும் இல்லை.

அல்லது பிசாசுகளைத் துரத்தவோ, நோயாளிகளை அற்புதமாக சுகப்படுத்தவோ, அப்போஸ்தலர்களுடைய காலத்திலே அவர்கள் செய்த சகல அற்புதமான காரியங்களையோ செய்யும் எந்தக் கிறிஸ்தவர்களும் இன்று இல்லை. அப்படியிருந்தால், எல்லா மருத்துவமனைகளிலும் உள்ள சகல நோயாளிகளையும் சுகப்படுத்தவும், மரித்தோர் அனைவரையும் எழுப்பவும், பார்வையற்ற சகலருக்கும் பார்வையளிக்கவும், கை, கால்களை இழந்த ஊனமுற்றோர்களுக்கெல்லாம் அவற்றை அளிக்கவும் இன்னும் இது போன்ற அற்புதங்களை இன்று ஏன் செய்ய முடிவதில்லை? இவைகளைச் செய்யக் கூடிய ஒருவர் கூட இன்று இல்லையே, ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனெனில், இன்று பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கர்த்தர் அவர்களுக்கு அளித்திருக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு ஒரு போதும் அவர் வாக்களிக்கவில்லை.

தாம் செய்வதாக வாக்களித்த சகல காரியங்களையும் கர்த்தர் செய்துகொண்டு வருகிறார். அவருடைய விருப்பத்தை நாம் அறிந்து கொள்ளும்படியாக அவருடைய வசனத்தைக் கொடுத்து, அதை விசுவாசிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும், அதன் விளைவாக நம்மை இரட்சிக்கவும் அவர் வாக்களித்திருக்கிறார். இதற்கு மேல் நமக்கு என்ன தேவை?

முன்பு சில சமயங்களில் நான் குறிப்பிட்டது போல, மீண்டுமாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்; அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தாங்கள் அடைந்திருப்பதாக உரிமை கொண்டாடுவோர், நீங்கள் வேதாகமத்தில் காண முடியாத சபைகளில் அங்கம் வகிக்கின்றனர்; மனிதன் உண்டாக்கிய பெயர்களை சபைகளுக்குத் தரித்துக் கொண்டு, சத்தியத்திற்கு விரோதமான பல காரியங்களை அவர்கள் போதித்து வருகின்றனர். தங்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் இருப்பதாக இவர்கள் கூறுவது எப்படி? நிச்சயமாக, இப்படிப்பட்ட தவறுகளில் ஆவியானவர் அவர்களை வழிநடத்திச் செல்லமாட்டார்.

என் நண்பர்களே, ஏமாந்து போகாதீர்கள். வேதாகமத்தைப் படியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள், விசுவாசித்து அதன் உபதேசங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அப்படிச் செய்தால் மட்டுமே நீங்கள் சரியான பாதையில் நடைபோட முடியும், மற்றபடி, முடியவே முடியாது.

# தெய்வீக சுகமளித்தல்

அற்புத சுகமளித்தல் என்பது சில மக்களின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அற்புத அடையாளங்களைச் செய்யக்கூடியவாறு, பரிசுத்த ஆவியின் வல்லமையை இன்றும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

இவ்வாறான வழியில் தேவன் இன்று செயல்படவில்லை என்று மறுக்கும் போது, ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "நீங்கள் தெய்வீக சுகமளிப்பை நம்புகிறீர்கள் அல்லவா?" என்று. இந்தக் கேள்விக்கு என்னுடைய பதில் இதுதான்: நான் தெய்வீக சுகமளித்தலை நம்புகிறேன்; ஆனால் அற்புத சுகத்தை அல்ல". ஆனால் அவற்றிற்கு என்ன வித்தியாசம்? என்று நீங்கள் கேட்கக் கூடும். சகல சுகம் பெறுதலும் தெய்வீகமானது தான்; ஆனால் அற்புத சுகம் பெறுதல் இன்று நடைபெறுவதில்லை.

அற்புதங்களால் மட்டுமே தேவன் செயல்படமுடியும் என நாம் நினைப்போமானால், நாம் தவறு செய்கிறோம். கடந்த காலத்தில், பல வேளைகளில் அற்புதங்கள் வழியாக அவர் செயல் பட்டார் என்பது உண்மையே. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மேல் இந்தக் காரணத்திற் காகவே அனுப்பப்பட்டார்.

பின்னர், அப்போஸ்தலர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சிலர் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறத்தக்கதாக அவர்களின் மேல் கைகளை வைத்தனர். ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கொடுக்கப்பட்ட பின் அற்புத யுகம் முடிந்து போயிற்று.

அற்புத யுகத்தின் சமயங்களிலும்கூட, அற்புதங்கள் குறைவாகவும் அதிக இடைவெளிகளிலும் நடைபெற்றன. அப்போஸ்தலர்களும் அவர்கள் மூலமாய் கைகளை வைத்துப் பெற்றுக் கொண்டவர்களும், சில இடங்களில் மட்டுமே இருக்க முடிந்தது. எனவே மற்ற எல்லாரும் அற்புத காரியங்களை

செய்யக்கூடாதவர்களாக இருந்தனர். ஆகவே, மக்கள் அனைவரும் தெய்வீக சுகமளித்தலைச் சார்ந்திருக்கவும், இயற்கையின் விதிகளுக்குட்பட்ட காரியங்களைச் செய்யவும் வேண்டிய தாயிற்று.

தெய்வீக சுகமளித்தல் என்பது தேவனால் சுகப்படுத்தப் படுவது; ஆனால், அது இயற்கையின் வழியாக தேவன் கொடுப்பதாகும். தேவன் உலகத்தையும் அதிலுள்ள சகலவற்றையும் படைத்தார். மூலிகைகள், மருந்துகள் அனைத்தையும் படைத்தவர் அவரே, அவர் நம்மை உண்டாக்கினார், எனவே மருத்துவர்களையும், செவிலியர்களையும் படைத்தார். நோயாளிகளுக்காக மருத்துவமனைகளும் இதர எல்லா வசதிகளும் அவர் மூலமாக உண்டாக்கப்பட்டுள்ளன. மாம்சமான சரீரத்தைப் பற்றியும் அதின் தேவைகளைப் பற்றியும், ஆணும் பெண்ணும் கற்றுத் தெரிந்து கொள்ள அவருடைய ஆசீர்வாதங்கள் மூலமாக அவர் அனுமதித்துள்ளார். மருத்துவத்தைக் கற்றுக் கொள்ளவும், நோயாளிகள் சுகம் அடையத்தக்கதான மருந்துகளை அவர்களுக்கு அளிக்கவும், அவர் மேலுமாக அனுமதித்துள்ளார். சரீரத்தின் வித்தியாசப்பட்ட பல பாகங்களிலும் மிக துல்லியமாக அறுவை சிகிச்சை செய்து நோயை அகற்றிடும் திறமையை அவர்களுக்கு மருத்துவக் கல்வி வழியாக அளித்துள்ளார். அப்படியானால் மனிதனை சுகப்படுத்துவதில் தேவன் ஈடுபட்டுள்ளார் என நாம் கூறலாமா? மிக நிச்சயமாகக் கூறலாம். அதுவே உண்மை.

சுகமுள்ளவர்களுக்கு அல்ல, பிணியாளிகளுக்கே வைத்தியர் தேவை என்று இயேசு கூறினார் (மத்தேயு 9:12) லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய நூல்களின் ஆசிரியரான லூக்கா, 'ஒரு பிரியமான வைத்தியர்' என அழைக்கப்பட்டார். (கொலோ. 4:14) எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்றபோது வழியிலே கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராக விடப்பட்ட ஒரு யூதனைப்பற்றி இயேசு சொன்னார். மதவாதிகளாக இருந்த ஒரு ஆசாரியனும், ஒரு லேவியனும் அந்த வழியே வந்து, அவனைக் கண்டும்,

விலகிப்போனார்கள், பின்னர், யூதர்களின் பாரம்பரிய எதிரியான ஒரு சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகி, அவனுடைய காயங்களுக்கு எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, அவனை ஒரு சத்திரத்திற்குக் கொண்டு போய், சத்திரத்தானிடம் கொஞ்சம் பணம் கொடுத்து அவனைக் கவனித்துக் கொள்ளும்படி கூறியதோடு, அதிகமாக அவனுக்கு ஏதாவது செலவழித்தால், தான் திரும்பி வரும்போது தருவதாகவும் கூறினான். ஏன் அவனுடைய காயங்களுக்கு சமாரியன் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்தான்? ஏனெனில் காயங்களை சுகப்படுத்தும் மருந்துகளாக அவை பயன்பட்டன. அப்படியானால், அவனுடைய காயங்களை சுகப்படுத்துவதில் கர்த்தருக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என நீ கருதுகிறாயா? இறுதியாக, தீமோத்தேயுவிடம், "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்ச ரசமும் கூட்டிக் கொள்" என பவுல் அறிவூட்டுகிறார். (1 தீமோ. 5 : 23). இப்படியான அறிவுரையை பவுல் வழங்குகிற காலத்தில் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தீமோத்தேயுவை பவுல் அற்புதமாக ஏன் சுகமளிக்கவில்லை? நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கை வைத்தார்களோ அவர்களும், சகல நோயாளிகளையும், ஊனமுற்றவர்களையும் சுகப்படுத்தினர். ஆனால் மக்களை சுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே அற்புதங்கள் நடைபெறவில்லை. சிலர் சுகமளிக்கப் பட்டனர். சுகம் பெற்றவர்கள் அதனால் பயன்பெற்றார்கள். ஆகவே, உண்மையில் அப்போஸ்தலர் நடபடி 8-ம் அதிகாரத்தில் நாம் படித்தபடி, விசுவாசிகளை ஏற்படுத்தவும் வசனத்தை உறுதிப்படுத்தவும் (மாற்கு 16 : 20) அற்புதங்கள் நடத்தப்பட்டன. ஆனால், வசனம் ஏற்கனவே உறுதிபடுத்தப்பட்டிருப்பதாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது விசுவாசம் உண்டாகிறது என்பதாலும் (ரோமர் 10 : 17) இனி அற்புதங்கள் தேவையில்லை. இன்று எதற்காக அற்புதங்கள் நடைபெற வேண்டும்?

அடுத்து, ஜெபம் இக்கருத்திற்கு எப்படிப் பொருந்துகிறதாக உள்ளது? நாம் வியாதியுஸ்தர்களுக்காகவும், நமது தேவைகளுக்காகவும், ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து தான் ஜெபிக்கிறோமா? இன்றைக்கு, அற்புதங்கள் நடைபெறுவதில்லையென்று சொன்னால், ஜெபத்தின் நோக்கம் என்ன? ஜெபத்தில், எங்களுக்கு முழு நம்பிக்கையுண்டு என்று இங்கே அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறோம். ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவைகளுக்குப் பதிலளிக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இதை அவர் எப்படிச் செய்கிறார்? ஒரு அற்புதத்தைச் செய்வதின் மூலம் தான் பதிலளிக்க வேண்டுமா? சரி, ஒரு தகப்பன் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட நிலை என்ன? பிள்ளைகள் தகப்பனிடம் எதையாகிலும் கேட்கும்போது, அதை அற்புதத்தின் மூலம் தான் நிறைவேற்றுகிறானா? அப்படி நிறைவேற்றுவதில்லை என்று நமக்குத் தெரியும் அப்படியானால், அவர்களின் தேவைகளை எப்படி நிறைவேற்றுகிறான்? அவன் தனக்களிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கொண்டு செய்கிறான். மேலும், பிள்ளைகளின், நன்மைக்கேற்றவைகளையே நிறைவேற்றுகிறான். தனக்கு இயலாதவைகளை அவர்கள் கேட்கும்போதோ அல்லது அவர்களுக்கு அவசியமில்லாததை அவர்கள் கேட்கும் போதோ அதை அவன் கொடுப்பதில்லை. தேவனுடைய காரியத்திற்கும் இவ்வுண்மை பொருந்தும். அவர் நமது தகப்பனாகவும் நாம் அவருடைய பிள்ளைகளாகவும் இருக்கிறோம். நம்மை அவர் நேசிக்கிறார் நாம் கேட்பவற்றைக் கொடுக்க விரும்புகிறார். அதே சமயத்தில், நமக்கு எது தேவையில்லை என்பதும் அவருக்குத் தெரியும். அது நமக்கு நல்லதல்ல வென்றால், அவர் அதை நமக்குத் தரமாட்டார். ஆனால் நமக்கு அது நல்லதாக இருந்து, அதை அவர் கொடுக்கக் கூடுமானால், நிச்சயமாக நமது ஜெபத்திற்குப் பதிலளித்து நமது வேண்டுகோளை நிறைவேற்றுவார்.

இயேசு சொன்னார் : "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள். அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்

கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனிதனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத்தேயு 7:7-11 இப்போது, மீண்டுமாக, தமது பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்க கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்ய வேண்டுமா? நிச்சயமாக இல்லை.

நாம் நமது ஆகாரத்திற்காக ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் நமக்கு நல்ல சுகத்தை தந்து உணவைத் தேடுவதற்கான வழியையும் காட்டுகிறார். உணவை உண்டாக்கி நமது கைகளில் தேவன் அவற்றைப் படைக்கலாம். ஆனால் அப்படிச் செய்வதை அவர் தேர்ந்தெடுக்கவில்லை. அல்லது அவ்வாறு செய்வதாக அவர் வாக்களிக்கவும் இல்லை; அப்படிச் செய்யப் போவதுமில்லை. நாமோ அல்லது நமது நண்பர்களோ நோயுற்றிருந்தால், சுகமடைய தேவனை நோக்கி ஜெபிக்கலாம். அற்புதத்தினால் நமக்கு அவர் சுகமளிக்க இயலும்; என்றாலும் அவர் அப்படிச் செய்வதில்லை. செய்வதாக வாக்களிக்கவும் இல்லை; ஆனால் நாம் ஒரு மருத்துவரைப் பார்க்கவும், மருந்துகளைப் பெற்று அவற்றைச் சரியான முறையில் உட்கொள்ளவோ, போதுமான ஓய்வு எடுத்துக் கொள்ளவோ நமக்கு அவர் அறிவைக் கொடுத்திருக்கிறார். இப்போது, நாம் அவ்விதமாகச் செய்து குணமடையும் போது, நம்மைக் குணப்படுத்தியது யார்? தேவன் நமது ஜெபத்தைக் கேட்டாரா இல்லையா? சொல்லுங்கள்

நாம் கேட்பதற்கு முன்பாகவே நமது தேவைகளை தேவன் அறிகிறார் என கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார். (மத். 6 : 8). பின்னர் யோவான் கூறுகிறார். "நாம் எதையாகிலும் அவருடைய

சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவை களைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்,” (1யோவ 5 : 14, 15).

ஆம், தேவன் இன்றும் சுகமளிக்கிறார். ஆனால் அற்புதத்தினால் அல்ல. அவருடைய வல்லமையை நிரூபிக்க எதையும் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. ஏற்கனவே, மீண்டும் மீண்டுமாக அவருடைய வல்லமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் விரும்புகிறதை இன்றும் அவர் செய்ய இயலும். ஆனாலும், அவருடைய வசனத்தில் அவர் வெளிப்படுத்தியிருப்பதைப் போல, இயற்கைக்குரிய, ஆவிக்குரிய சட்டங்களின் மூலமாக காரியங்களைச் செய்ய அவர் தேர்ந்தெடுத்துள்ளார். இயற்கைச் சட்டம் மனிதனுடைய சரீர தேவைகள் சம்பந்தப்பட்டது. ஆவிக்குரிய சட்டம் நற்செய்திக்குக் கீழ்ப்படிவதையும், பாவமன்னிப்புப் பெறுவதையும், நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறுவதையும் சம்பந்தப்பட்டது.

தேவன், நமது வழியிலே செயல்பட வேண்டுமென்ற மிகப் பலவீனமான நமது விருப்பத்திற்குப் பதிலாக, அவர் தன்னுடைய வழியிலே காரியத்தை நடத்த, கர்த்தரிடம் நாம் போதுமான விசுவாசம் கொள்ளும்படியாய் தேவன் நமக்கு உதவுவாராக. ஒரு உண்மையென்னவெனில், நாம் நமது விருப்பத்தை தேவன் மீது திணிக்க முடியாது ஆகவே, அவருடைய சமூகத்தில் நம்மை முற்றிலுமாகத் தாழ்த்தி அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

# ஆவியின் ஒருமை

எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் இவ்வாறு எழுதுகிறார் : "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்". - எபேசியர் *4 : 1- 6.*

ஆவியின் ஒருமை பற்றி பவுல் இங்கு பேசுகிறார். ஒரே ஆவி உண்டு. அவர் தேவத்துவத்தில் ஒரு நபராக, (ரோமர்*1:20*) பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய தேவனோடும் இணைந்திருக்கிறார்.

தேவத்துவத்தின் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு அல்லது ஒரு குறிப்பிட்ட பணி இருந்தது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய வேதாகமத்தை எழுத பலரை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தி உதவியிருக்கிறார். எனவே, வேதாக்மத்தில், வாயினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்கள் இருக்கின்றன. (II பேதுரு *1 : 20;21*; II தீமோ. *3 : 16, 17*).

வசனங்கள் ஆவியின் வார்த்தை என்றும், அல்லது சத்தியத்தின் ஆவி என்றும் மீண்டும் மீண்டுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (யோவான் *14:17; 15:26; 16:13*). தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் என பவுல் அதைக்

குறிப்பிட்டார். (எபே. 6 : 17). எபிரேய எழுத்தர் சொன்னார்: "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது". (எபி. 4 : 11, 12).

தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் வார்த்தையானது முற்றிலும் சீராக இருக்கிறது. அது பூரணமாகவும் இறுதியானதாகவும் இருக்கிறது. அதன் மூலமாக, தேவன் சொல்ல விரும்பியதைச் சொல்லியிருக்கிறார்; தாம் சொல்ல விரும்பிய சகலவற்றையும் சொல்லியிருக்கிறார். முரண்பாடுகள் எதுவும் அதில் இல்லை. வசனமானது ஒருவனை ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனை வேறொன்றைச் செய்யச் சொல்லுவதும் கிடையாது. அதனோடு எதையும் சேர்க்கவோ, அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ அல்லது எவ்வழியிலும் மாற்றவோ கூடாது. (வெளி. 22:18,19; II யோ 9-11). சந்தேகமின்றி, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலினால், ஒரே சுத்த நற்செய்தியைத் தான் போதித்து வருவதாகவும், யாராவது வேறொரு நற்செய்தியைப் போதிக்க வந்தால், அவன் கர்த்தருடைய தூதனாகவே கூட இருந்தபோதிலும், தேவனுடைய சாபம் அவன் மேல் இருக்கும் என பவுல் கூறினார். (கலா. 1 : 6 - 9).

ஆகையால், ஆவியானவர் வசனத்தை ஏவுதலினாலே கொடுத்துள்ளார். எனவே ஒருவன் அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தனது வாழ்விலும் இதயத்திலும் அதை ஏற்றுக் கொண்டால் அதுவே அவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவாகும். பேதுரு எழுதுகிறார் : "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர

சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே": (I பேதுரு 1:22, 23). விதைக்கிறவனுடைய உவமையை இயேசு கூறினார் : அதிலே, தேவனுடைய வார்த்தையாகிய விதையானது வித்தியாசமான பலதரப்பட்ட மண்ணில் விழுந்தது பற்றிக் கூறுகிறார். சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்து, நல்ல இருதயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதின் விளைவாக நல்ல விளைச்சலும், நல்ல பலனும் கிடைத்தது. (மத். 13). விதையில் ஜீவனிருந்தது. அந்த ஜீவனை ஆவியானவர் தேவனுடைய வசனமாகிய விதைக்குள் வைத்தார்.

அப்போஸ்தலர் பவுல் சொன்னார் : "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". (I கொரி. 12 : 13). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பற்றி பவுல் இங்கு பேசவில்லை. மாறாக தமது உபதேசத்தின் மூலமாக, அல்லது தேவனுடைய வசனத்தின் மூலமாக கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஒருவனை ஆவியானவர் வழி நடத்தும் உண்மையைக் குறிப்பிடுகிறார். அதின் ஒரு பகுதி, ஒரே சரீரத்திற்குள் அல்லது கர்த்தரின் ஒரே சபைக்குள் திருமுழுக்குப் பெறுவது. இப்போது, தமது வார்த்தையை உபதேசிப்பதின் மூலம் ஒருவனை சபையில் சேர்க்க, தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குப் பெறவும், மற்றொருவனை தெளித்து திருமுழுக்குப் பெறவும் ஆவியானவர் வழிநடத்தமாட்டார். ஆவியானவர், அதாவது ஆவியின் வார்த்தை, அனுமதிக்காத பல காரியங்கள் ஆவியானவர் மேல் சுமத்தப்படுகின்றன.

ஆனால் கர்த்தரின் சபையாகிய ஒரே சரீரத்திற்குள் நாம் ஒரு தடவை வந்துவிட்டால், பின்னர் "ஒரே ஆவிக்குள்ளாகத் தாகந்தீர்க்கப்பட்டோம்" என அவர் சொல்லுகிறார். அதாவது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த பின்னர் தொடர்ந்து ஆவியால் தாகந்தீர்க்கப்படுகிறோம். அல்லது தேவனுடைய வசனமாகிய ஆவியின் வசனத்தைப் பின்பற்றுகிறோம். நாம் இனி ஒரு போதும் தாகமாக இராதபடியும், பசியாக இராதபடியும், ஜீவத் தண்ணீரிலும் ஜீவ அப்பத்திலும் நாம் பங்கு பெற வேண்டுமென கிறிஸ்து கூறினார்.

இப்போது, ஆவியானவர் தமது வார்த்தையை மனிதனுக்குக் கொடுக்கும் பணியை பூரணமாக முடிக்கும் வரையிலும், அப்போஸ்தலர்களும், அவர்கள் கைகளை வைத்து தேர்ந்தெடுத்த சீடர்களும் தேவனிடமிருந்து வந்தவர்கள் என்றும் தேவனுடைய செய்தியை அளிக்க அவரால் அனுப்பப் பட்டிருந்தனர் என்றும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளும் படியாக, அவர்கள் அற்புதங்களைச் செய்ய அனுமதித்தார். ஆனால், புதிய ஏற்பாடு முழுமையான வடிவில் மனிதனுக்குக் கொடுக்குப்படும்படியாய், பரிசுத்த ஆவியானவர் பலரை ஏவி, தேவசித்தத்தை எழுதிக் கொடுத்தவுடன், அற்புத அடையாளங் களுக்குத் தேவையில்லாமல் போயிற்று. ஆகவே, அவை ஒழிந்து போனது. பவுல் I கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் இதை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

ஆவியின் ஒருமையையும், ஆவியானவர் வெளிப்படுத்தின சத்தியங்கள் எப்படி ஒருமையை உண்டாக்கின என்பதையும் கவனமாகப் பாருங்கள். தேவன் பிரிந்திருக்கவில்லை; கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை. ஆவியானவரும் பிரிந்திருக்கவில்லை. தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் பிரிந்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள், அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள், சேர்ந்து செயல்படுகின்றனர். அது போலவே அவர்கள் பேசிய வசனங்கள் நம்மை ஒற்றுமைப்படுத்தவும் ஒன்றாக்கவும் செய்யும்.

ஒரே ஒரு நற்செய்தியும், இரட்சிக்கப்பட ஒரே வழியும் மட்டுமே இருப்பதாக வார்த்தையில் ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து கூறியிருக்கிறார்; " . . . . நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற்கு 16 : 15, 16). சகலரும் அந்த நற்செய்தியைக் கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்தால் எல்லாருமே ஒரே வழியில் இரட்சிக்கப்படுவர். வீழ்ந்து போனவர்களை இரட்சிக்கும் கர்த்தரின் ஒரே வழி இதுவே. வேறு எந்த வழியிலாகிலும் ஒருவன் இரட்சிப்பு அடைய முடியாது.

ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என வார்த்தையில் ஆவியானவர் நமக்குச் சொல்லுகிறார். (எபே. 4 : 5). உலகமோ பல திருமுழுக்குகள் இருப்பதாகச் சொல்லுகிறது. ஆனால், பாவங்களின் மன்னிப்புக்கென்று (அப். 2 : 38) அடக்கம் எனப்படும் ஒரே ஒரு திருமுழுக்கைப் பற்றி மட்டுமே ஆவியானவர் கூறுகிறார். (ரோமர் 6 : 3, 4; கொலோ. 2 : 12). என் நண்பர்களே! மனிதன் கூறுவது எதுவாக இருப்பினும், ஆவியானவர் ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என கூறுகிறார்.

ஒரே ஒரு சரீரம் அல்லது சபை மட்டுமே இருப்பதாக ஆவியானவர் வார்த்தையில் நமக்குச் சொல்லுகிறார். (எபே. 4:4). மீண்டும், பல சபைகள் இருப்பதாக தொடர்ந்து நாம் மனிதனிடமிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்கள் பரிசுத்த ஆவியான்வருடைய வழி நடத்துதலில் இருப்பதாக சொல்லிக் கொள்ளுபவர்கள் கூட, தேவனுடைய வசனத்தில் குறிப்பிடப் படாத சபைகளில் காணப்படுகின்றனர். ஒரே ஒரு சபை மட்டுமே இருப்பதாக தமது வசனத்தில் திட்டமாக வெளிப்படுத்தின ஆவியானவர் - சந்தேகமின்றி, அது கிறிஸ்துவின் சபை தான் என்று அடையாளம் காட்டின ஆவியானவர் (மத். 16:18), தமது வசனங்களில் சுத்தமாகக் குறிக்கப்படாத பல சபைப் பிரிவுகளில்

அங்கத்தினராக, பலரையும் வழி நடத்துவாரா? நிச்சயமாக மாட்டார், ஆவியானவர் பிரிந்திருக்கவில்லை. அவருடைய வசனத்தில் கூறியிருப்பதற்கு முரணான காரியத்திற்குள் ஒருவனை வழி நடத்தமாட்டார். அப்படியானால் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் இருப்பவர்கள், ஆவியானவரால் அந்த சபைகளுக்குள் வழி நடத்தப்படவில்லை என்று பொருள். அப்படிப்பட்ட மனித சபைகளில் அங்கம் வகிக்க, தமது வசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தவில்லை. எனது நண்பர்களே! இந்தக் காரியங்களைப் பற்றி நாம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆவியானவர், வசனத்தின் வழியாக எப்படிப் பேசுகிறார் என்றும், எப்படிக் கிரியை செய்கிறார் என்றும் ஆவியின் ஒருமையைக் குறித்து நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போக முடியும். நாம் ஆவியின் வசனங்களைப் பின்பற்றி விசுவாசித்துக் கீழ்ப்படியும் பொழுது, நமக்குள் வாழும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். மேற்சொன்ன எல்லாமே ஆவியானவரின் போதனையின்படிதான், அதாவது வசனத்தின்படிதான் நடக்கிறது. அற்புதத்தினால் எதுவும் நடப்பதில்லை. இன்னுமாக, மேலே செல்லியுள்ளபடி செய்தால் மட்டுமே கிறிஸ்துவோடு நாம் ஒன்றித்திருக்க முடியும். இந்த வாழ்வில் முற்றிலுமாக அவருக்கு விசுவாசமாக நடக்கும் போது, கர்த்தரோடு சதா காலமும் இருக்கத்தக்கதாக நாம் இறுதியில் பரலோக ராஜ்யத்திற்குச் செல்ல முடியும். பவுல் எழுதியபடி, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்". (கலா. 6 : 7, 8).

என் நண்பரே! நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரா? இல்லையென்றால், கர்த்தரின் வசனத்தை நீங்கள் கேட்டு, கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட நாங்கள் ஜெபிக்கிறோம்.

# ஆவியின் கனிகள்

மாம்சத்தின் சில கிரியைகளைப் பற்றி பவுல் பட்டியலிட்டுக் காட்டிய பின்னர், அதற்கு மாறான ஆவியின் கனிகளைப் பற்றி இப்போது பேசுகிறார். அவர் கூறினார் : "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்" (கலாத்தியர் 5:22-26) எபேசு பட்டணத்தை கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறினார் : "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்" (எபே 5:8-10).

இப்போது, ஆவியை அடைந்திருப்பது என்றால் என்ன பொருள்? கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, நாம் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுவதாக பேதுரு கூறினார். (அப்.2 : 38) அப்படியானால், பரிசுத்த ஆவியின் வரத்தை நாம் பெற்றால், நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். (அப். 5 : 32) அப்போஸ்தலர்கள் கைகளை வைக்கும்படியாய்த் தேர்ந்தெடுக்கப் பட்ட ஏழு சீடர்களும் ஆவியால் நிறைந்திருந்தனர். (அப். 6 : 3).

பவுல் நமக்குச் சொல்லுகிறார் : "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில்

சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோ மென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிற தென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது". (ரோமர் 5 : 1-5) மீண்டுமாக, அவர் கூறினார் : "தேவனுடைய ராஜ்ஜியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" (ரோம 14:17).

பவுல் தொடர்ந்து பேசுகையில் இவ்விதமாகச் சொல்லுகிறார் : "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட வர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாய் இராமல் ஆவிக்குட்பட்டவர்களாய் இருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரி லிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின் படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும் படிக்கு அவருடனேகூட பாடுபட்டால் அப்படியாகும்". (ரோமர் 8:1-17).

கிறிஸ்தவனில் ஆவியானவர் எப்படி கிரியை செய்கிறார் என்பதை பவுல் விளக்கிச் சொல்லுகிறார் : "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியது இன்னதென்று

அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுக்களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்". (ரோமர் 8 : 26, 27).

தீத்துவுக்கு பவுல் எழுதுகிறார் : "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனிதர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்." (தீத்து : 3 : 3 - 7).

மீண்டுமாக, ஆவியுடன் இருத்தல் என்றால் என்ன? நாம் மேலே படித்த எல்லா வேத வசனங்களிலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். இது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவி, என்றாலும் தேவனும் கிறிஸ்துவும் கிறிஸ்தவனில் வாழ்வதைப் போல இன்னும் பரிசுத்த ஆவியானவரும் அவனில் வாழ்கிறார். (I கொரி. 8:6). மாம்சமான சரீரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கிறது என்று பவுல் கூறினார். (I கொரி. 3 : 16, 17; 6 : 19, 20).

நமது பலவீனங்களைத் தாங்கிக் கொள்ளவும், தேவனுடைய விருப்பப்படி, நமக்காக வேண்டுதல் செய்யவும் ஆவியானவர் நமக்கு உதவுகிறார். வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளபடி நாம் ஆவியினுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்பதை அறிந்து, நாம் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி யுள்ளதால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ஆவியானவர் அதாவது ஆவியின் வார்த்தைகள், நமது ஆவியை ஏற்றுக் கொள்ளுகிறார்.

நாம் ஆவியை உடையவரர்க இருந்து, ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளின்படி நடப்பதால், நாம் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறோம். இந்தக் கனிகளைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அவையாவன, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இவற்றின் பொருளை நாம் அனைவரும் அறிவோம் என்பதால், இவற்றை விளக்கத் தேவையில்லை. இந்நற் பண்புகள் கூடாது என்று எந்த சட்டமும் தடை செய்யாது. இந்தக் கனிகளை உண்டாக்க ஒரு அற்புதமோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த வழிநடத்துதலே தேவையில்லை. ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, ஆவியின் வசனத்திற்கு ஏற்றவாறு தொடர்ந்து நடக்கும் போது இந்தக் கனி உண்டாகிறது.

கிறிஸ்தவனைப் பற்றியும், அவனுடைய வாழ்வில் ஆவியானவரின் பங்கைப் பற்றியும் தேவனுடைய வார்த்தை நிறையச் சொல்லுகிறது. என்றாலும் வருந்தத்தக்க காரியம் என்னவென்றால், அற்புதங்கள் தொடர்பாக மாத்திரமே பலர் ஆவியானவரைக் காண்கின்றனர். கிறிஸ்துவில் விசுவாசமுள்ள வேறு பலர், ஆவியானவரைப் பற்றிப் பேசப்படும் எந்தக் காரியத்தையும் தயவு தாட்சண்யமின்றி ஒதுக்கி விடுகின்றனர். ஏனென்றால், கிறிஸ்தவர்களின் வாழ்விலே இன்று பரிசுத்த ஆவியானவர் அற்புதமான காரியங்களைச் செய்கிறார் என்று அவர்கள் விசுவாசிப்பதாக அல்லது உபதேசிப்பதாக பிறர் குற்றஞ் சாட்டி விடுவார்களோ என்ற அச்சமே காரணம். ஆகவே,

நாம் இவ்விரு கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. மாறாக, அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அப்போஸ்தலர்களின் நாட்களில், ஆவியானவரின் பணி என்ன என்றும், அற்புதங்கள் நின்று போன கால கூட்டத்தில், அது நமது காலம் வரை கிறிஸ்தவர்களோடு பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்றும் நிதானித்துப் பார்க்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இன்று செய்யாத காரியங்களை அவர் செய்வதாகவும் நாங்கள் கற்பிக்க விரும்பவில்லை. அல்லது பரிசுத்த ஆவியானவரையும் கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் இன்றைய பங்கையும் ஒதுக்கித் தள்ளவும் நாங்கள் விரும்பவில்லை.

# பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம்

"எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" என வேதாகமம் கற்பிக்கிறது. (ரோமர் 3:23), தேவனை விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, தண்ணீரில் திருமுழுக்குப்பெறும் அனைவரும் இரட்சிக்கப் படுவார்கள் என்றும் அது கூறுகிறது. (மாற்கு 16 : 16; அப்.2:38). இவற்றிற்கு மாறாக நடப்பவர்கள், சந்தேகமின்றி, மன்னிக்கப்பட மாட்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் வேத வசனங்கள் வழங்கப்பட்டது. எனவே, ஆவியின் வார்த்தையோடு நாம் தொடர்பு கொள்ளும்போது, நாம் மனிதரோடு அல்ல, அப்போஸ்தலர்களோடு கூட அல்ல, தேவனுடைய இறுதி வெளிப்படுத்துதலை நமக்குத் தந்தவரோடு நாம் தொடர்பு கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவரை எந்தக் கண்ணோட்டத்தில் நாம் பார்க்கிறோம், அவரைப் பற்றிய நமது மனோநிலை யாது, அவரை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா அல்லது புறக்கணிக்கிறோமா என்பதைப் பொறுத்தே பல காரியங்கள் சார்ந்துள்ளன.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தைப் பற்றி வசனங்கள் கூறுகிறது. அவருக்கு விரோதமான பாவத்தைச் செய்கிறவர்களுக்கு இவ்வுலகில் மாத்திரமின்றி, வரப் போகிற உலகத்திலும் மன்னிப்பு கிடையாது என்றும் அது கூறுகிறது. கிறிஸ்து கூறினார் : "ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்த தூஷணமும் மனிதருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனித குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு

விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை." (மத்தேயு 12:31, 32). இதே போன்ற அறிவிப்பை மாற்கு 3:28, 29 வசனங்களில் மாற்குவும் வெளியிடுகிறார்.

இன்னும் இது போன்று வேறு வசனங்களும் வேதாகமத்தில் காணப்படுகிறது. உதாரணமாக, மரணத்துக் கேதுவான ஒரு பாவத்தைப் பற்றி யோவான் பேசினார். அதாவது, "மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக் கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர் களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவம் உண்டு. அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன். அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமு முண்டு." (I யோவான் 5 : 16, 17).

"ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (I தெச. 5 : 19) என பவுல் அறிவித்தார். எபிரேய எழுத்தர் கூறினார் : "ஏனெனில், ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த் தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்". (எபி. 6 : 4 - 6).

மீண்டுமாக, எபிரேய எழுத்தர் சொல்லுகிறார் : "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினி மித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய

பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே". (எபிரேயர் **10 : 26 - 31**).

பேதுரு எழுதினார் : "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்குச் சம்பவித்தது". (II பேதுரு **2 : 20-22**).

இப்போது, மேற்குறிப்பிட்ட எல்லா வசனங்களிலும் சில ஒற்றுமைகளை நாம் காணமுடியும் என நான் நினைக்கிறேன். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம், மரணத்துக்கு ஏதுவான பாவம், ஆவியை அவித்துப் போடுதல், தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைதல், அறிந்து பாவஞ் செய்தல், உலக ஆசாபாசங்களிலே திரும்பிச் சென்று மூழ்கிப் போதல், ஆகியவைகளை காண்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், தேவனுடைய பரிசுத்த ஆவியைப் புறக்கணிப்பதுவே, பரிசுத்த

ஆவிக்கு விரோதமான தேவ தூஷணமும், அல்லது பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவமும், மரணத்துக்கு ஏதுவான பாவமும் ஆகும். அனனியா, சப்பீராள் என்பவர்கள் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொல்லி, அந்தப் பாவத்தின் காரணமாக உடனே அதே இடத்தில் அவர்கள் செத்து விழுந்ததை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமானது. (அப். 5).

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்த வந்தார். ஒருவன் ஆவியைப் புறக்கணிக்கும்போது, அதாவது ஆவியினுடைய வார்த்தையையும், ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்து செய்த தியாகச் செயலையும் நிராகரிக்கும்போது, பின்னர் ஒருவன் இரட்சிக்கப்பட வேறு வழி எதுவும் கிடையாது. அப்படிப்பட்ட நிலையில் அவரை அடைய எந்த வழியும் இல்லை. இந்த உலகத்தில் பலர் இப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றனர். உண்மையிலேயே இது மிகவும் வருத்தமளிக்கும் செயல்களில் ஒன்றாகும். நானும் நீங்களும் எதைச் செய்த போதிலும், பரிசுத்த ஆவியானவரையும், கிறிஸ்துவைப் பற்றிய அவருடைய வெளிப்படுத்துதலையும், அவர் மூலமாகக் கிடைக்கக் கூடிய இரட்சிப்பையும் புறக்கணிக்கும் அளவுக்கு நாம் ஒருபோதும் செல்லக்கூடாது.

மனிதன் செய்யும் எந்தப் பாவமும் மோசமானதே ஏனெனில் இறுதியில் அது அவனை இழந்து போகச் செய்கிறது. தேவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தாமல் இவ்வுலகை விட்டுச் செல்லக்கூடாது என அவன் நினைக்கலாம். என்றாலும் மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்படையும் செயலை தள்ளிப் போட்டுக் கொண்டே செல்லும் போது, அவன் வீழ்ந்து போகக் கூடும். ஆனால் ஒருவன் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, கர்த்தரை விசுவாசித்து, அவனது பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு, கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை அறிக்கை செய்து, தனது பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் திருமுழுக்குப் பெற விரும்பினால், அவன் இரட்சிப்பு அடையக் கூடும்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவத்தை எது உண்டாக்குகிறது என்பது பற்றி, தங்கள் விருப்பம் போல சிலர் முடிவுக்கு வந்துள்ளனர். அதாவது, அப்படிப்பட்ட ஒரு பாவத்தை ஒருவனோ அல்லது ஒருவளோ செய்துவிட்டால், அதன் பின்பு அப்பாவத்திலிருந்து மனந்திருந்தி தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பினாலும், அது முடியாது என்று சிலர் கருதுகின்றனர். நிச்சயமாக இது உண்மையல்ல. கிறிஸ்துவை சிலுவையிலே அறைந்தவர்களில் கூட சிலர் பெந்தெகொஸ்தே நாளிலே தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களே இரட்சிக்கப்பட்டது உண்மையாக இருக்கும் போது, நாம் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நானும் நீங்களும் இரட்சிக்கப்படுவது நிச்சயமாக இருக்குமல்லவா!

சபையை தான் துன்புறுத்திய காலத்தை பவுல் நினைவு கூறுகிறார். அது அவரை வாட்டுகிறது. பாவியில் மாபாவி என தன்னைத்தானே குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும் அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய பாவங்கள் கழுவப் பட்டன. கர்த்தரின் மிகப்பெரிய ஒரு ஊழியனாக அவர் மாறினார். (அப். 8, 9, 22; அதிகாரங்கள், I தீமோ. 1 : 15). தனது ஆரம்ப நாட்களில், கர்த்தருக்கு விரோதமான பல காரியங்களைச் செய்தவராகிய பவுல், தனது பாவங்களுக்கு மன்னிப்பு அடைந்திருப்பாரேயாகில், தங்களை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் யார் வேண்டுமானலும் இன்று நிச்சயமாக இரட்சிப்படைய முடியும்.

ஒருவன் செய்த பாவங்களுக்காக அக்கறைப்படாமல், பாவங்களுடன் மரணமடைந்து போனால், அவன் வீழ்ந்து போனவனாகிறான். அவனுக்கு இரண்டாவது சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றோ, அல்லது உறவினர்களும் நண்பர்களும் ஜெபம் செய்து, வீழ்ந்த நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றி, இறுதியில் அவனை இரட்சிப்படைய வைக்க முடியும் என்றோ வேதம் எங்கும் கற்பிக்கிறதில்லை. மாறாக தேவனை சந்திக்க

நீ ஆயத்தமாக வேண்டிய நேரம் இதுவே என்றுதான் வேதாகமம் கூறுகிறது. (II கொரி. 6 : 2; எபி, 9 : 27).

முடிவாக, தேவனுடைய பரிசுத்த ஆவியானவரையும், உலகத்திற்கு அவர் கொண்டு வந்திருக்கிற வார்த்தையையும் புறக்கணிக்க வேண்டாம். அவரை மறுதலிக்காதே, எதிர்க்காதே, வெறுக்காதே. அவ்வாறு நீ செய்தால், கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பையும் பற்றிய அவருடைய வசனத்தைக் கேட்கும் நிலைக்கு நீ திரும்புவது மிகவும் கடினமாகும்.

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள ஆவியின் வெளிப்படுத்துதல்களை ஏற்றுக்கொள்ள உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்து கூறினார் : " . . . . வாருங்கள் . . . என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்..." (மத். 11:28 - 30). மீண்டுமாக நாம் படிக்கிறோம் : "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்" (வெளி. 22 : 17). நிச்சயமாக, அவரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிய அது உங்களை வழி நடத்தும். அவருக்குக் கீழ்ப்படியும் சகலரையும் அவர் இரட்சித்து, நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை அளிக்கிறார்.

# "நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை"

"இயேசு எருசலேமுக்குப் போகும் போது, வழியிலே பனிரெண்டு சீடரையும் தனியே அழைத்து; இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனித குமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப் படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும், புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். அப்பொழுது, செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்து கொண்டு : உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றாள். அவர் அவளை நோக்கி : உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள் : உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்ய வேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக : நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி; என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார். மற்றப்

பத்து பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள். அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்ட வரச் செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனிதகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். அவர்கள் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்". (மத்தேயு 20 : 17-29).

மாற்கு 10:35ம் வசனத்தின்படி, செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபு, யோவான் என்பவர்களும் அவர்களுடைய தாயும் இயேசுவிடம் வந்து, அவருடைய ராஜ்யம் அல்லது சபை நிறுவப்பட்டவுடன், அவர்களை இயேசுவின் வலது, இடது பக்கங்களில் உட்கார வைக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை என்பதை அறிந்த இயேசு உடனே பதிலளித்தார். இயேசு, சிலுவைப் பாடுகளுக்குள்ளாக முழுகி மரணமடையப் போகிறார் என்பதை அவள் புரிந்து கொள்ளவில்லை. இவற்றை உங்களால் தாங்கிக் கொள்ளக் கூடுமா என்று கர்த்தர் கேட்டுவிட்டு, பின்னர் பதிலளித்தார் : நீங்கள் அவ்வாறு தாங்கக் கூடுமாயினும் கூட, உங்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவது என்னுடைய அதிகாரத்தின் படியானதல்ல என்று கூறினார். சுயநலத்தாலோ அல்லது தாய்ப்பாசத்தாலோ தெரியவில்லை அந்த சீடர்களின் தாய் தனது குமாரர்களுக்கு சிறந்த பதவிகளைப் பெற்றுத் தரவேண்டுமென்ற

விருப்பத்தில் இருந்தாள் என யூகிக்க முடிகிறது. ஆனால், யாராவது முதன்மையாக இருக்க விரும்பினால், அவன் பிறருக்கு ஊழியக்காரனாக இருக்க வேண்டும் என இயேசு விளக்கினார்.

என்றாலும், இன்றைய நாட்களிலும் பல மக்கள் கர்த்தர் ஒரு போதும் வாக்களித்திராத காரியங்களை அவரிடம் வேண்டும் போது தாங்கள் எதைக் கேட்கிறார்கள் என்பதை அறியாதிருக்கின்றனர் என்ற கருத்தை இங்கு குறிப்பிட நான் விரும்புகிறேன். முக்கியமாக, பரிசுத்த ஆவியானவர் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பற்றி நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

உதாரணமாக, பலர் பரிசுத்த ஆவிக்காக வேண்டுகின்றனர். அவர்களைப் பார்த்து, கர்த்தர் கூறுவார் : "நீ கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உனக்குத் தெரியவில்லை" பொதுவான விசுவாசிகளுக்கு இந்தத் திருமுழுக்கு ஒரு போதும் வாக்களிக்கப்படவில்லை. ஆதியில் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப்பட்டிருந்தார். (யோவான் 14 : 26; லூக்கா 24 :49; அப். 1 : 8). யூதர்களைப் போலவே, புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் என அப்போஸ்தலர்கள் திருப்தியடையும்படியாக கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் கூட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அப்போஸ்தலருடைய நடபடிகள் 10, 11 அதிகாரங்களில் இது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மக்கள் மட்டும் வசனத்தைப் படித்துக் கற்றுக் கொள்வார்களேயானால், பின் கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாதவற்றையெல்லாம் அவரிடம் கேட்கமாட்டார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்கள் தான் இன்றைய நாட்களிலேயும், அக்கினியால் திருமுழுக்கு நடத்தப்படுகின்றது என நினைக்கின்றனர். இதுவும் தவறே. அக்கினித் திருமுழுக்கு என்பது எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய ஒரு காரியம். அந்த சமயத்திலே கெட்டவர்களை கர்த்தர் அக்கினியும் கந்தகமும்

எரிகிற கடலிலே தள்ளி தண்டிப்பார். இதுவே அக்கினி திருமுழுக்கு என்பதாகும். அது என்னவென்று அறிந்திருந்தால், இந்தத் திருமுழுக்கு தங்களுக்கு வேண்டுமென யாரும் நிச்சயமாக கேட்கமாட்டார்கள். தயவு செய்து வெளிப்படுத்தின விசேஷம் 21: 8ம் வசனத்தைப் படியுங்கள்.

அற்புதங்களைச் செய்ய வேண்டுமென பெந்தெகொஸ்தே கூட்டத்தார் கர்த்தரிடம் கேட்கின்றனர். அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமை இருப்பதாகவும், எனவே அவர்கள் மூலமாக வியாதிக்காரர்களை சுகப்படுத்தவும், இன்னும்பிற அற்புதங்களைச் செய்யவும் கர்த்தர் கிரியை செய்வதாக அவர்கள் கூறுகின்றனர். இல்லை, இவர்களிடம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கிடையாது. இன்னும் அற்புதமாக வியாதிக்காரர்களை சுகப்படுத்தவோ, மரித்தோரை உயிரோடு எழுப்பவோ, அல்லது வேறு எதையாவது அற்புதமாகச் செய்ய வேண்டுமென்றோ ஏறெடுக்கும் இவர்களுடைய ஜெபங்களுக்கு கர்த்தர் பதில் அளிப்பதும் இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மீதெல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர் என நாம் வசனத்தில் படிக்கிறோம். (அப். 2:43; 8 : 6, 7). இன்று, ஒரு அப்போஸ்தலரும் அல்லது அவர்கள் கைகளை வைத்தவர்களும் இல்லாத காரணத்தால், அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர்கள் எவரும் இன்று இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கைகளை வைத்தார்களோ அந்த சீடர்களும், அற்புதங்களைச் செய்தபோது, அற்புதங்கள் உண்மையாகவே நடைபெறுகிறதென்று யாவரும் அறிந்தனர். ஏனெனில், அவர்கள் மரித்தோரை எழுப்பினார்கள். பிசாசுகளைத் துரத்தினர், இன்னும், கொஞ்சங்கூட சந்தேகத்திற்கு இடமில்லாதபடி அற்புதங்கள்தான் என ஏற்றுக்கொள்ளப்பட்ட அநேக காரியங்களைச் செய்தனர். ஆனால், இன்றைக்கு வெறுமனே, நாங்களும் செய்கிறோம் என்று பொய் சொல்வது மட்டுமே நடக்கிறது. உண்மையை நிரூபிக்கும் செயல்கள் எதுவும் நடப்பதில்லை. ஒருவேளை இன்று அற்புதங்களைச்

செய்கிறவர்கள் இருப்பின், தேவனுடைய வல்லமையால் அவர்கள் அவற்றைச் செய்வதில்லை.

பிரிவினை சபை போதகர்கள் இன்று பிசாசைத் துரத்த வேண்டுமென்று கர்த்தரிடம் கேட்கின்றனர். ஆனால் கிறிஸ்து கூறியது போல, "சாத்தான் சாத்தானை துரத்துமா?". இன்று அற்புதங்களைச் செய்யவும், பிசாசுகளைத் துரத்தவும் வேண்டி, பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை கர்த்தர் யாருக்காவது கொடுப்பதாக இருந்தால், அவருக்குக் கீழ்ப்படியக் கூடிய, வசனத்தின் படியாக அவருடைய பெயரைத் தாங்கின அவருடைய சபையில் அங்கம் வகிக்கக் கூடியவர்களுக்கு அந்த வல்லமையை நிச்சயமாக அளித்திருப்பார். ஆனால், சந்தேகமின்றி, அவருடைய சபையில் உள்ளவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அப்படிப்பட்ட வல்லமையை கர்த்தர் அளிக்கவில்லை. இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் கேட்பது இன்னது என்று அறியாமல் கேட்கிறார்கள்.

இதே மக்களில் பலர், அவர்களையும் அவர்களுடைய போதனைகளைக் கேட்பவர்களையும், இரட்சிக்க வேண்டு மென்று ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் கேட்கின்றனர். நிச்சயமாக அவர்கள் கேட்பது என்னவென்று அறியாமல் கேட்கின்றனர். ஜெபத்தின் விளைவாக பாவத்திலிருந்து இரட்சிப்பு கிடைக்கும் என்று வேத வாக்கியங்களில் எங்குமே கர்த்தர் கூறவில்லை. ஒரு தடவை ஒருவன் கிறிஸ்தவனாகி, பின் அவன் பாவஞ் செய்தால், அவன் மனந்திருந்தி, பிறகு பாவ மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டுமென்று தான் யாக்கோபு 5:16ம் வசனத்தில் சொல்லப் பட்டுள்ளது. ஆனால், ஒருவன் தேவனுடைய பிள்ளையாக மாற, உலக முழுவதும் நற்செய்தி எடுத்துச் செல்லப்பட்டு, சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்றும் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்"; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 15, 16) என்றும் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தங்களுக்கு இருப்பதாக கூறிக் கொள்ளும் மக்கள், எழுதப்பட்ட வசனத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்லியிருக் கிறார் என்பதைக் கூட அறியாதவர்களாக இருப்பது விநோதமாக் இல்லையா? இவர்களிடம் கர்த்தர் தனிப்பட்ட முறையில் இன்று ஏதோ செய்தி சொல்ல இருப்பதாக தாங்களே கற்பனை செய்து கொண்டு, கர்த்தர் தங்களிடம் பேச வேண்டுமென்று கூட ஜெபம் செய்து கொண்டிருக்கின்றனர். எனது நண்பர்களே! தேவன் பேசியிருக்கிறார்; அவர் பேசும்போது, சொல்ல வேண்டிய சகலவற்றையும் சொல்லிவிட்டார். அதிகமாக அவர் சொல்ல விரும்பியிருந்தால், அவர் அப்படிச் செய்திருப்பார். ஆனாலும், அவர் ஏதாவது சொல்ல வேண்டியதிருந்திருந்தாலும், அது எல்லாருக்குமே தேவையான காரியமாகத் தான் இருக்கும். ஆனால், அவர் ஏற்கனவே சொல்லியிருப்பதற்கு விரோதமாக வேறு யாரிடமும் எதையும் நிச்சயமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

எனது நண்பர்களே! ஏமாந்து போகாதீர்கள். நாம் தேவனிடம் கேட்க நமக்கு உரிமை உண்டு. ஆனால் அறியாமையால் அவ்விதம் செய்து, அவர் வாக்களிக்காதவை களை நாம் அவரிடம் கேட்கக் கூடாது. மாறாக, கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை அறிந்து, அவருக்குக் கீழ்ப்படிந்தால், நமது ஜெபங்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிப்பதாக அவருடைய வாக்குத்தத்தம் நமக்கு உண்டு என்றாலும், நாம் கேட்கும் அனைத்தும் அவருடைய சித்தத்திற்கு ஏற்றவைகளாகவே இருக்க வேண்டும். (I யோவா. 5:14, 15)

# நிறைவானது வரும்போது . . .

பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும் தொடரின் இறுதிக் கட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். "நிறைவானது வரும்போது. குறைவானது ஒழிந்துபோகும்" என அப்போஸ்தலர் பவுல் கூறிய வார்த்தைகளை விட, இந்தக் கடைசி பாடத்திற்கு மிகவும் ஏற்ற தலைப்பு வேறு எதுவாக இருக்க முடியும்? அவருடைய கூற்றுப்படி, நிறைவானது ஒன்று வரவும், குறைவாக அதுவரை இருந்து வந்த ஒன்று முடிந்து போகவும் வேண்டியதாக இருந்தது. இந்த அறிவிப்பில் அவர் குறிப்பிடும் நிறைவானது எது? மேலும், குறைவானது என அவர் குறிப்பிடும் போது எதைப் பற்றி அவர் சொல்லிக் கொண்டிருந்தார்? இவை பற்றி நாம் இங்கே படிக்கப் போகிறோம்.

சத்தியம் மாத்திரம் பிரசங்கிக்கப்படுவதிலிருந்து, எந்தத் தவறும் நேர்ந்து விடாதபடி, அப்போஸ்தலர்களை அற்புதமாக வழிநடத்த, கிறிஸ்துவானவர், பரிசுத்த ஆவியானவரை அல்லது தேற்றரவாளனை அனுப்புவது பற்றி மீண்டும் மீண்டுமாக நாங்கள் கூறியிருக்கிறோம். அந்தப்படியே, அப்போஸ்தலர்களும், தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த பெரிய பணியில் உதவியாக இருக்கத்தக்கதாக, மேலுமாக சில குறிப்பிட்ட சீடர்களின் மேல் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுக்கத் தேர்ந்தெடுத்தனர். தேவனால் அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவும், அவர்கள் போதித்த வசனங்களை உறுதிப்படுத்தவும், போதிக்கப்பட்டவர்களிலிருந்து விசுவாசிகளை உண்டாக்கவும் அவை அனைத்தும் நடைபெற்றன. இறுதியாக புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்ட போது, இந்த அற்புத யுகம் ஓய்ந்து போயிற்று. அன்றிலிருந்து இன்றுவரை, தேவனையும் அவருடைய சித்தத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் அந்தச்

செய்திக்காக புதிய ஏற்பாட்டுக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர். விசுவாசம் இன்று தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் வருகிறது என்று பவுல் நமக்குச் சொல்லுகிறார். (ரோமர் 10 : 17). எனவே, நற்செய்தியானது உலக முழுவதும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16 : 15).

நாம் இப்போது I கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்திற்குத் திருப்பிக் கொண்டு, அந்தப் பிரசித்தி பெற்ற வசனப் பகுதியைப் படித்து, தேவனுடைய பூரணமான சட்டம் வருவதைப் பற்றியும், இனி அற்புதங்களுக்கு தேவை எதுவும் இல்லை என்பது பற்றியும் பவுல் என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் சொல்லுவதைக் கேளுங்கள் : “நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப் படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை யில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனஞ்

சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிற படியே அறிந்து கொள்வேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது". I கொரிந்தியர் 13ம் அதிகாரம் முழுவதையும் இப்போது படித்தோம்.

இந்த அதிகாரமானது அடிப்படையில் அன்பிற்கும், குறிப்பாக அதன் இறுதிப் பகுதியில் காண்பது போல, "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரிது" என்று அன்பிற்கு முக்கியத்துவம் தரக்கூடியதாக அறியப்பட்ட போதிலும், இன்னும் நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டிய மற்ற சில பகுதிகளும் உள்ளன.

பவுல் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள்: " . . . அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம், அந்நியபாஷைகளானாலும் ஒய்ந்துபோம்; அறிவானாலும் ஒழிந்து போகும்". அற்புத யுகத்தில் பவுல் வாழ்ந்தார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தபடியால் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தார். இது இப்படி இருப்பதால், அந்நிய பாஷைகளில் பேசுவது போன்ற பல அற்புதச் செயல்களை அவர் செய்யக் கூடியவராக இருந்தார். ஆனால், அற்புதமாக தீர்க்கதரிசனம் சொல்வதும், அந்நிய . பாஷைகள் பேசுவதும், அறிவும், ஒழிந்து போகுமென்றும், அன்பு ஒருபோதும் ஒழியாது என்றும் அவர் சொன்னார். இதையே வேறுவிதமாகச் சொன்னால், இயற்கை வழியில் காரியங்கள் நடப்பது தொடரும்,

ஆனால் அற்புத வகையில் நடைபெற்ற காரியங்கள் ஒய்ந்து போகும்.

பவுல் தொடர்ந்து, "நமது அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது" என்கிறார். மீண்டும் அற்புத அறிவைப் பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தலைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அவை குறைவானது என்றும் சொல்லுகிறார். அதாவது, அவைகள் தற்காலிகமாக, கொஞ்ச காலத்திற்கு மட்டுமே இருக்கும், எப்படியெனில் ஒரு கட்டிடம் கட்டப்படும் போது பயன்படுத்தப்படும் சாரங்களைப் போல. சபை சமீபத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது; அது, அப்பொழுதுதான் வளர்ந்து கொண்டிருந்தது. அதை வழி நடத்த புதிய ஏற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இல்லை. எனவே, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட வடிவில் கொடுக்கப்படும் வரையில், இந்த உதவியைச் செய்ய அற்புதங்களின் ஆதரவு தேவையாக இருந்தது.

பின்னர், பவுல் அறிவிக்கிறார் : "நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போம்". குறைவானது என்று அவர் வர்ணிக்கும் அந்தக் காரியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே, அதாவது பூரணமான விடுதலைச் சட்டம் வரும் வரையில் கொடுக்கப்பட்ட அற்புதச் செயல்களே ஆகும். கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் இப்படிக் குறிப்பிடுவதாக சிலர் இதற்கு விளக்கம் அளிக்க முயலுவர். ஆனால் அப்படியிருந்தால், அந்த சமயத்தில் இந்த எல்லா காரியங்களும் ஒழிந்து போகும் என மிக அழுத்தமாகக் கூறக் காரணம் என்ன? கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அது குறிப்பிட்டிருந்தால், அந்த சமயத்தில் இவை அனைத்தும் முடிவுக்கு வந்திருக்கும் என்பது தெளிவு. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். பூரண விடுதலைச் சட்டமாகிய புதிய ஏற்பாடு வரும் போது, இந்த அற்புதக் காரியங்கள் அனைத்தும் இனி தேவைப்படாது

என்பதால் அவை ஒரு முடிவுக்கு வரும் என்றுதான் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். யாக்கோபு இதை ஆதரித்துக் கூறும்போது, "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானா யிருப்பான்" என்றார். (யாக். 1 : 25).

பின்னர் பவுல் விளக்கிச் சொல்லும் போது, "நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக் கேற்றவை களை ஒழித்துவிட்டேன்," என்கிறார்.

மீண்டுமாக இந்தக் கருத்தை அவர் விளக்கிக் கூறுகையில், "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிற படியே அறிந்து கொள்ளுவேன்", என்கிறார். அந்த அற்புத யுகத்தில் கண்ணாடியில் நிழலாட்டமாகப் பார்க்கிறதைப் போல, அதாவது, ஒருவனுடைய முகத்தை மிகவும் தெளிவாகக் காண முடியாதது போல, பார்க்கிறோம் என அவர் கூறுகிறார். ஆனால், நாள் வரும் போது புதிய ஏற்பாட்டின் வழியாக நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன் என அவர் சொன்னார். யாக்கோபு 1:22-25 வசனங்களில், இதையே தான் யாக்கோபும் சொல்லுகிறார். அதே சமயத்திலே, தான் குறைவாக அறிந்து கொண்டதாகவும், காலம் வரும்போது சகலரும் தேவனுடைய விருப்பத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளு வார்கள் என்றும் பின்னர் அவர் கூறினார்.

எனது நண்பர்களே! புதிய ஏற்பாட்டின் வருகையோடு அற்புத யுகமும் முடிவுற்றது. தமது கட்டளையை தேவன் முற்றிலுமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருவன் தேவனுடைய கட்டளையை அறிய விரும்பினால், புதிய ஏற்பாட்டிற்குச் செல்ல

வேண்டும். அவருடைய கட்டளைகளை விடுத்து, தனியாக இன்று யாரிடமும் தேவன் பேசிக் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, அற்புதங்களை தாங்கள் செய்வதாக இன்று கூறிக் கொள்ளும் நபர்கள், இரட்சிக்கப்பட விரும்புகிற அனைவரும், அவர்கள் முன்னே வந்து நிற்க வேண்டுமென்றும், பாவிகளுக்கான ஜெபத்தை அவர்களோடு சேர்ந்து திருப்பிச் சொல்ல வேண்டுமென்றும் அறை கூவல் விடுகின்றனர். தேவன் அவர்கள் வழியாக கிரியை செய்வதாகக் கூற இவர்களுக்கு எவ்வளவு தைரியம் வேண்டும்? பேதுருவோ, பவுலோ அல்லது வேறு ஒரு நற்செய்தி போதகரோ, அவர்களுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருப்பவர்களை முன்னே வரச் சொல்லி, அவர்கள் இரட்சிப்படைய வேண்டுமானால் பாவிகளின் ஜெபத்தை அவர்களோடு சேர்த்து ஜெபிக்க வேண்டும் எனக் கூறியதாக வசனங்களில் நீங்கள் எங்கேயாவது பார்க்க முடிகிறதா? கிறிஸ்தவன் அல்லாதவர்களுக்காக அப்படிப்பட்ட ஒரு ஜெபமே தேவனுடைய வார்த்தையில் இல்லவே இல்லை.

ஏமாந்து போகாதீர்கள் என உங்களை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். தேவனை விசுவாசியுங்கள், கிறிஸ்துவை விசுவாசியுங்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் பரிசுத்த ஆவியின் வார்த்தைகளை விசுவாசியுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என அவர்கள் சொல்லுகிறார்களோ அவற்றைச் செய்யுங்கள். அதாவது, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப் படுங்கள். கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறுங்கள், கர்த்தர் உங்களை இரட்சிப்பார், பரிசுத்த ஆவியானவரைத் தருவார், அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார். நீங்கள் இரட்சிப்படைய வேண்டுமானால், அதைத் தானே உங்களையும் மற்ற எல்லாரையும் அவர் செய்யச் சொல்லுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் பணி என்ற இந்த பாடங்கள் அனைத்தையும் என்னோடு படித்து, கற்றுக் கொண்டதற்காக உங்களுக்கு நன்றி. அவருடைய வசனத்தின் வழியாகவும், அதற்கு ஏற்றபடியும் மட்டுமே இன்று ஆவியானவர் கிரியை செய்கிறார்.

அற்புதமான வழியில் இன்று பரிசுத்த ஆவியானவர் மனிதரிடத்தில் கிரியை செய்யாவிட்டாலும், தேவனுடைய கட்டளைகளை தெரியப்படுத்தவும், பாவத்திலிருந்து மனிதனை இரட்சிக்கவல்ல கிறிஸ்துவை வெளிப்படுத்தவும் வசனத்தின் வழியாக அவர் கிரியை செய்கிறார். இதைவிட வேறு எந்தப் பெரிய பணியை அவர் செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

இந்தக் காரியங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் போது இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள, உங்களுக்கு எங்கள் உதவி தேவைப்பட்டால் உங்கள் அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை தயவு செய்து அணுகுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

(முற்றும்)

படியுங்கள்

மீண்டும் படியுங்கள்

உணர்வடையுங்கள்

மனந்திரும்புங்கள்

திருமுழுக்குப் பெறுங்கள்

இரட்சிப்படையுங்கள்

பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுங்கள்

கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டு
நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்

ஆமென்